# தமிழரசு

திங்கள் இருமுறை நவ. 1, 1971 - 35 காசு



# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப் படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும் பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது?

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

AC-11



# தமிழரசு

மலர் 2. 1—11—1971. இதழ் 9.

இந்த இதழில்

ஐ. நா. மன்றம் பற்றி அண்ணா
முல்லைக்குத் தேர் தந்தான் பாரி
முல்லைக்குப் பேர் தந்தார் கலைஞர்
பரனூரில் ஒரு பயனுள்ள இல்லம்
ஏழையின் வாழ்வும் வளம் பெற்றது
சிலம்பு விளம்பும் தமிழக ஒருமைப்பாடு
செலவைக் குறைக்கும் உழவுக் கருவி
கல்வியமைச்சரின்
பட்டமளிப்பு விழாப் பேருரை
ஏன் இந்தக் காதல்? (தொடர் கதை)
எனை ஈன்ற நாடு (கவிதை)
வெண்பாப் போட்டி

முதல்வரின்

**இருப்பிடம் மாற்றும் பணியல்ல**
**இனிய வாழ்வின் அடித்தளம்**

அரசுத் துறை ஒப்பந்தப் புள்ளிகள்,
வேலைவாய்ப்பு விளம்பரங்கள்.

65-ஆம் பக்கத்திலிருந்து....

# எனை ஈன்ற நாடு

வெ. கலைக்கூத்தன்

இதுதானே எனைஈன்ற நாடு—கலை
எழிலோடு வளமேவும் தமிழன்னை வீடு
பொதுத் தொண்டு பூத்த மலர்ச் சோலை—நிலைப்
புகழ்மிக்க புலவர்சூழ் தமிழ்ச்சங்கச் சாலை
எதுவுண்டு என்னாட்டுக் கீடு—மகிழ்ந்
தியம்புவேன் அவனிக்கு அறைகூவ லோடு !

முப்புறம் கடல்சூழ்ந்த தென்று—எங்கள்
முந்தைய ரழைத்தனர் திருவிட மென்று
எப்புறம் நோக்கினும் வெற்றி—மனித
எழுச்சியைப் பண்பாட்டை வளர்க்குமே சுற்றி
இதுதானே எனைஈன்ற நாடு—வீரம்
ஈகையைக் கலந்தூட்டும் தமிழன்னை வீடு !

விலலம்பு விளையாட்டுக் கருவி—இங்கு
வீழ்ந்துள்ள எதிரிகள் குருதிதா னருவி
சொல்லிலே சுவைசேர்த்து மருவி—இன்பச்
சுகங்காண விழைந்தது தமிழ்மக்கள் பிறவி
இதுதானே எனைஈன்ற நாடு—வெற்றி
இறுமாப்பில் திளைத்திடும் தமிழன்னை வீடு !

தென்னாட்டி லோடிடும் பொன்னி—தமிழ்
திக்கெட்டும் புகழ்வீசு மெழிலிளங் கன்னி
என்னாடு செழுமைசூழ் மேடு—தமிழ்
இலக்கிய வெறியூட்டும் மதுமலர்க் காடு
இதுதானே எனைஈன்ற நாடு—அன்பு
இணையிலாப் பரிவூட்டும் தமிழன்னை வீடு !

கடலெலாம் அடிப்பாகம் முத்து—பாரில்
கலமெங்கும் பொருளீட்டத் தவழும்பூக் கொத்து
உடலுக்குள் எழிலெலாம் சேர்த்து—நீரில்
உறவாடி விளையாடும் மீன்களோ சொத்து
இதுதானே எனைஈன்ற நாடு—அன்பு
எதிர்கால வழிகாட்டும் தமிழன்னை வீடு !

பொற்புடை அணங்குகள் கூட்டம்—அழகு
பொலிகின்ற அறிவிலும் நல்லாற்றல் நாட்டம்
கற்புடை மங்கையர் கோட்டம்—பழகக்
கவரிமா னினத்தவர் நிறைந்துள்ள தோட்டம்
இதுதானே எனைஈன்ற நாடு—மானம்
இணைந்தது உயிரோடென் தமிழன்னை வீடு !

தவத்திறம் பூண்டதிந் நாடு—மனிதத்
தன்மானம் பண்பாடு அனைத்திற்கும் ஈடு
கவனித்தால் செல்வம் நிறை காடு—புனிதக்
கலைஞரும் அறிஞரும் வாழ்கின்ற மேடு
இதுதானே எனைஈன்ற நாடு—கல்வி
ஏற்றத்தில் தெளிவூட்டும் தமிழன்னை வீடு !



# ஐ. நா. மன்றம் பற்றி அண்ணா

(வானொலிப் பேச்சின் ஒரு பகுதி)

**ஐ.நா.** வை வலுப்படுத்தி அதற்குப் பக்கபலமாக நிற்குமாறு ஒவ்வொருவருக்கும் வேண்டுகோள் விடுப்பதற்காகவே இன்றையத் தினத்தைக் கொண்டாடுகிறோம். மதிப்புக்குரிய டாக்டர் ராதாகிருஷ்ணன் சுட்டிக் காட்டி யிருப்பதைப்போலப் ''புதிதாய் உருவாகிவரும் உலகச் சமுதாயத்திற்கு ஆத்மாவை, மனச்சாட்சியைக் கொடுக்க முடியும் என்று ஐ. நா. நம்புகிறது.''

ஆனால், ஐ. நா. ஸ்தாபனம் போரைத் தடுத்து அநீதியை ஒழிக்கும் திறமையுள்ள ஸ்தாபனமாக மாறவேண்டுமென்றால், ஒரு தடவை உட்ரோ வில்சன் குறிப்பிட்டுள்ளதுபோல அது இமைப் பொழுதும் உறங்காத கண்ணாக இருக்க வேண்டும். எங்கும் விழிப்புடனும் கவனத்துடனும் இருக்கும் கண்ணாகத் திகழவேண்டும்.

ஐ. நா. ஸ்தாபனம் வலிமையற்றது, ஆதலால் அதைப் பராமரிக்க வேண்டாம் என்று வாதாடுவது, அந்தக் கண்ணையும் குருடாக்குவதற்கு ஒப்பாகும். பிறகு இருளில் அலைந்து திரிந்து அழிவதைத் தான் வரவேற்க வேண்டியிருக்கும். ஐ. நா. வின் அவசியத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் திரு ஐஸன் ஹோவர் கூறியதைவிட வேறு எதைத் தான் ஆதாரமாகக் காட்ட முடியும்? வெற்றிக்கொடி நாட்டிய வீரரான அவர் கூறுகிறார்: படைபலத்தைப் பயன்படுத்தித் தேசத் தகராறுகளைத் தீர்க்கலாம் என்று ஐ. நா. ஸ்தாபனம் எப்போதாவது ஒப்புக் கொண்டுவிட்டால் அப்போது அந்த ஸ்தாபனத்தின் அடிப்படையையும், உலக முறைமை ஒன்றை உருவாக்குவதற்கான நமது சிறந்த நம்பிக்கையையும் அழித்திருப்போம்—இது எல்லாருக்குமே அழிவாகத் தான் இருக்கும்.

ஐ. நா. வின் உடன் பிறந்த குறைகளையும், பிறகு சேர்ந்த குறைகளையும் நன்கு உணர்ந்திருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு ஐ. நா. வுக்காக மிகப் பலமாக வாதாடினார். ''ஐ. நாவின் இயல்பை மாற்ற முயன்றால் அமைதிக்காகப் பாடுபடும் மேலும் வலுவான ஒரு அமைப்பை இதனால் உருவாக்க முடியாது.'' ஏற்கெனவே இருக்கும் சிறந்த ஒரு அமைப்பைக் குலைப்பதாகத்தான் அதற்குப் பொருள். இதற்குப் பதிலாக வேறு எதையும் உருவாக்க முடியாது.

ஆதலால்தான், இந்த ஸ்தாபனத்தை வலுப்படுத்தி உலக விவகாரங்களில் அதிகாரம் படைத்த ஒரு அமைப்பாக மாற்ற வேண்டுமே யொழியப் போர் வெறியர்களின் வெறியாட்டத்தால் விழிக்கக் கூடிய நிலையில் உலகை விட்டுவிட வேண்டாம் என்று சிந்தனையாளர்கள் அனைவரும் எல்லாரையும் கேட்டுக் கொள்கிறார்கள். ஐ. நா. தலைமைக் காரியதரிசி ஊதாண்ட் கூறியிருப்பதைப் போல, ''எவ்வளவு வலிமை இருப்பினும், எவ்வளவு செல்வம் கொழிப்பினும் எந்த ஒரு நாடும் இன்று தன்னிறைவு பெற்றதாக இருக்க முடியாது.''

தனித்து வாழ்வதோ, மற்ற நாடுகளின் சிதைவுகளுக்கு மேல் இருப்பதோ சாத்தியமல்ல என்பதைப் பல நாடுகளும் இப்போது உணர்ந்துள்ளன. மற்ற நாடுகளுடன் தான் வாழ முடியும். மனித சகோதர உணர்வு எனும் நன்னெறியை ஏற்று அதன்படி நடந்தால்தான் இது சாத்திய மாகும்.

ஐ. நா. ஸ்தாபனம் பலவீனமாக இருந்துங்கூடப் பல பகுதிகளில் போரைத் தடுத்திருக்கிறது. தகராறுகளைப் பரவ விடாமல் தடுத்திருக்கிறது. அமைதியைத் துரிதமாக நிலைநாட்டியிருக்கிறது. சில சமயங்களில் ஐ.நா.வின் சாதனைகள் விஷயத்தில் நமக்குப் பூரண திருப்தி ஏற்படாவிட்டால்கூட, ஐ. நா.வுக்கு அதன் எல்லா முயற்சிகளிலும் நாம் தொடர்ந்து ஆதரவளித்து வந்திருக்கிறோம். ஏனென்றால், ஜவாஹர்லால் நேரு கூறியிருப்பதுபோல, ஐ. நா. ஸ்தாபனம் பலவீனமடைந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நாம் பலவீனமாயிருப்பதுதான்; நாடுகள் பலவீனமாயிருப்பதுதான்; அவை கொள்கை பலமற்றவையாய் இருப்பதுதான்; அவை நேர்மையற்றவையாய் இருப்பதுதான் என்பதை நாம் உணர்கிறோம். நமது மன உறுதியும் பலமும் மட்டுமே மனித குலத்தின் இந்த நம்பிக்கைக்கு, உலக நீதியின் அரணுக்கு உயிர்நாடியாக இருக்கமுடியும். இந்நாட்டிலுள்ள நாம் ஐ. நா.வைப் பலப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். எனவேதான் இந்தக் கொண்டாட்டம்.!

# குடிசை மாற்றும் பணியல்ல இனிய வாழ்வுக்கு அடித்தளம்!

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் மொழிக்கேற்ப அவர்களால் உருவாக்கப்பட்டது இந்த அரசு. அவர் மறைந்த பிறகும் அவர் வழி நின்று தொண்டாற்றுவோம் என்று இந்த அரசின் சார்பில் தூய முழக்கத்தை அறிவித்து நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றோம்.

குடிசைப் பகுதிகளை மாற்றுவது மட்டுமல்ல; தமிழகத்தில் இருக்கின்ற ஏழை—எளிய—பாட்டாளிகள்—தொழிலாளர்கள்—கிராமத்து விவசாயிகள் ஆகியோரது வாழ்வில் நல்லொளி பாய்ந்திட வேண்டும் என்ற உறுதிபடைத்த நெஞ்சத்தோடு இந்த ஆட்சியை நடத்தி வருகின்றோம்.

குடிசை வாழ் மக்களை நல்ல வீடுகளில் குடியமர்த்த வேண்டும் என்கிற அதே நேரத்தில், இரந்து வாழ்கின்ற மக்களுக்கு—பிச்சையெடுத்து வாழ்கின்ற மக்களுக்கு நல்வாழ்வளிக்கும் திட்டத்தை — இந்தியாவிலேயே வேறெந்த மாநிலத்திலும் அறிமுகப்படுத்தப்படாத திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தி நடத்தி வருகின்றோம்.

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, 72-ஆம் ஆண்டுக்குள் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி செய்துதரப்படும் என்கிற தீவிரத் திட்டத்தை வகுத்து, அதனடிப்படையில் மூன்று நான்கு மாவட்டங்களில் மின்சார வசதி வேலை முழுமையாக முடிவுற்று மிச்சமிருக்கின்ற மாவட்டங்களிலும் 72-ஆம் ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும் என்கிற நிறைந்த நம்பிக்கையை அரசின் சார்பில் அறிவித்துக் கொள்கிறேன்.

முழுமையாக எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெறுவதென்றால் பெரிய கிராமங்கள் என்பவை மட்டுமல்ல; பத்துப் பன்னிரண்டு பேர்கள் வாழ்கின்ற இடங்களிலும்கூட விளக்கு வசதி செய்து தரப்படவேண்டும் என்கிற முறையில் திட்டம் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றோம்.

சென்னை நகரில் தீராத பிரச்சினையாக இருந்து வந்தது, குடிசை வாழ் மக்களுக்கு நல்ல வீடுகள் தரவேண்டும் என்ற பிரச்சினையாகும்.

பல்வேறு மாநிலங்களில்—டில்லி போன்ற இடங்களில் குடிசைகளை மாற்றி இருக்கிறார்கள். ஆனால் அங்கே வாழ்ந்த மக்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

குடிசைப் பகுதிகளால்—நகரத்தின் அழகு குறைகிறதே; நகரத்தின் எழில் குலைகிறதே; ஆகவே, நல்ல வீடுகளாக மாற்றினால்தான் வெளி நாட்டுக்காரர்கள் பாராட்டவும்—புகழவும் ஏற்றதாக இருக்கும்; சுற்றுலாவுக்கு உகந்ததாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் மற்ற மாநிலங்களில் குடிசைப் பகுதிகள் மாற்றப்படுகின்றன.

நகரத்தின் அழகு சோபிதமாக இருக்கத்தான் குடிசைகளை மாற்றி நல்ல வீடுகளை அமைக்கிறார்கள்.

அப்படிப்பட்ட வீடுகளில் குடியேற வருகிறவர்கள் இலட்சாதிபதிகளாகவோ — தொழிலதிபர்களாகவோ—வசதி வாய்ப்புள்ளவர்களாகவோஇருக்கலாம்.

குடிசைகள் மாற்றப்படுவதன் மூலம் இருக்கின்ற கோரம் போக்கப்பட வேண்டும்—அலங்கோலம் மாற்றப்பட வேண்டும்—அழகு மிளிர வேண்டும்—என்ற அடிப்படையில் அவர்கள் பிரச்சினைகள் முடிகின்றன.

ஆனால், தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கின்ற இந்த வாரியம் குடிசைப்பகுதிகளை மட்டும் மாற்றவேண்டும் என்று கருதவில்லை; அங்கிருக்கின்ற மக்கள் வாழ்வையே மாற்ற வேண்டும் என்று கருதுகிறது.

அந்தப் பகுதிகளில் யார் யார் வாழ்ந்தார்களோ அதே மக்கள்—அதே நபர்கள் மாற்றப்பட்ட இடத்தில் வாழும் உரிமையைச் செய்து அளிக்கும் அரசு இந்தியாவிலேயே தமிழக அரசுதான்!

நமது இலட்சியமே குடிசையில் வாழ்கின்ற மக்களை அதே இடத்தில் கட்டப்படும் மாடி வீடுகளில் குடியமர்த்த வேண்டும் என்பதுதான்.

குடிசையில் வாழ்கின்ற மக்களை வேறு இடங்களுக்குச் செல்லும்படிச் சொல்லும்போது அவர்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது மட்டுமல்ல, தொழில் வசதியையும் பார்க்க வேண்டும்.

பார்வதி கக்கன் காலனியில் குடியிருக்கிறவர்களைக் கோட்டூருக்குப் பக்கத்தில் குடியிருக்கச் சொல்கிறோம் என்றால், அவர்களின் தொழில், மற்ற வாழ்க்கை வசதிகள் இந்தப் பகுதியில் இருக்கும். ஆகவே, தொழில் வசதி கெடாத அளவுக்குக் குடியேற்றப்படவேண்டும் என்கிற கொள்கையையும் ஏற்றுக்

கொண்டு பணி செய்து வருகிறோம்.

சென்னையில் மொத்தம் 602 குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் இன்னும் ஏழாண்டுக் காலத்தில் வேரோடு மாற்றி, இந்த இடங்களெல்லாம் 'முன்பு குடிசைப்பகுதிகளாக இருந்த இடங்கள்' என்று சொல்லத்தக்க விதத்தில் மாடி வீடுகளாக ஆக்குவோம் என்ற சபதத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மொத்தமுள்ள 602 குடிசைப் பகுதிகளில் இந்த ஆண்டு 75 குடிசைப் பகுதிகள் மாற்றி அமைக்கப்படும்.

இந்த ஆண்டு 75 பகுதிகள் என்றால் அடுத்த ஆண்டு இதை விட அதிகமாக மாறும்.

ஆகவே, அடுத்த ஆண்டு 100 இடங்களுக்கு மேல் மாற்றப்படும். அதற்கும் அடுத்தடுத்த ஆண்டுகள் மேன்மேலும் வேகமாக இந்தப்பணி நிறைவேற்றப்படும்.

ஏழாண்டுக் காலத்தில் திட்டத்தை முடிக்க வேண்டும் என்று கருதினாலும் போகிற போக்கில் ஐந்து, ஆறாண்டுக் காலத்திலேயே குடிசைப்பகுதிகள் எல்லாம் மாடி வீடுகளாக மாற்றப்படும் நிலை இருக்கிறது.

சென்னையில் இந்த வேலை நடக்கிற அதே நேரத்தில் தமிழகத்தில் படிப்படியாக இந்த மாவட்டத்தில் இன்ன நகர் என்கிற அளவுக்கு இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டு வேலை தொடரும்.

மற்றவர்கள் பெயரை மாற்றுவதில்—பெயரைச் சூட்டுவதில் அக்கறை காட்டினார்கள். ஆனால், மக்கள் வாழ்வை மாற்றிட அக்கறை காட்டவில்லை. இந்த அரசு அதைச் செய்து வருகிறது. ஏற்கெனவே இருந்த பெயர்களை மாற்ற வேண்டும் என்று இந்த அரசு கிஞ்சிற்றும் எண்ணவில்லை. அந்த அளவுக்கு நமது பரந்த மனப்பான்மைக்கு அடையாளமாகத்தான்—இருக்கின்ற அந்தப் பெயரே நல்லபெயர்—நிலைத்திருக்கட்டும் என்று கருதுகிறோம்.

பார்வதி கக்கன் காலனியா? மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேறியதா — மாநகராட்சியின் ஒப்புதல் பெறப்பட்டதா? என்றெல்லாம் ஆராயவில்லை—அப்படிப்பட்ட மிகக் குறுகிய மனப்பான்மையோடு ஆராய்ச்சி நடத்தவில்லை.

பார்வதி கக்கன் யார்? கக்கனின் துணைவியார். கக்கனாவது அமைச்சராக இருந்தவர். ஏன் துணைவியார் பெயர்? என்று கேட்கவில்லை. கேட்க மாட்டோம். ஏனென்றால் நாம் படித்த பள்ளி—நாம் பயின்ற பாசறை அப்படிப்பட்டதல்ல! பெருந்தன்மைக்கே பெயர் பெற்ற அண்ணாவின் பாசறையில் பயின்றவர்கள் நாம்!

"பார்வதி கக்கன் காலனி" என்ற பெயரை மாற்றினால்தான் இந்தப் பகுதியை மாற்றுவோம் என்று சொல்லிடவில்லை—எண்ணிடவில்லை.

மத்திய அரசு தகுந்த உதவி செய்யவில்லை என்றாலும் எத்தனையோ இடையூறுகளுக்கிடையே இந்தக் காரியத்தை நிறைவேற்றி வருகிறோம்.

யார் உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும் கவலையில்லை என்று தமிழக அரசு 4 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது. காரியம் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொகுதியில் 75 குடிசைப்பகுதிகள் இருக்கின்றன. இந்த ஆண்டு 10 பகுதிகளாவது மாற்றப்படும்.

பெரம்பூர்த் தொகுதியில் அதிகப்பகுதிகள் இந்தத் திட்டத்தினால் பயன் அடைகின்றன. இந்த ஆண்டு மட்டும் ரூ. 1 கோடியே 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனது சைதைத் தொகுதியை விட, அதிக வசதியைப் பெரம்பூர்த் தொகுதி பெறுகிறது என்பதைப் பார்க்கும்போது கொஞ்சம் பொறாமையாகக் கூட இருக்கிறது. என்றாலும் சைதைத் தொகுதியைவிட இந்தத் தொகுதியில் குடிசைகள் ஏராளம். பள்ளத்தாக்குகள் நிரம்பிய சேறும் சகதியும் உள்ளது இந்தத் தொகுதி.

இங்கே வாழ்கின்ற மக்களை புழுவாய் நெளிந்தும், வளைந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிற தன்மையிலிருந்து விடுவிக்க—உய்விக்க இந்த அரசு கடமையாற்றி வருகிறது.

வள்ளலார் பாடினார்;

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றார்.

நாங்களும் ஏழைகள்—பாட்டாளி மக்கள் வாடிக்கொண்டிருக்கக் கண்டு வாடுகிறோம். அவர்கள் வாழ்வின் மலர்ச்சிக்காகப் பாடு படுகிறோம். மக்கள் வாழ்வின் ஒளியை மையமாக வைத்துப் பாடுபட்டுப் பணியாற்றுகிறோம்.

இன்னும் ஆறாண்டுக் காலத்தில் இந்தப் பகுதி எப்படியெல்லாம் மாற்றம் அடையப் போகிறது என்கிற நினைப்போடு அந்தக் காரியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

கிரேநகர் பள்ளம் — என்கிற பகுதி, பெயரே பள்ளம்; அப்படிப்பட்ட இடத்தில் அடிக்கல் நாட்டி இரும்புத் தூண்களையெல்லாம் நட்டு அங்கே கட்டடம் கட்டப்பட இருக்கிறது.

இப்படியெல்லாம் சிரமங்கள் ஏன்? மந்திரிகளுக்கு வீடு கட்டவா? வாரியத் தலைவருக்குப் பங்களா கட்டவா? இலட்சாதிபதிகளுக்கோ—சீமான் வீட்டுப் பிள்ளைகளுக்கோ இடம் தரவா? அல்ல! அல்ல!

# முதல்வர்

எங்களின் தோழர்களாகிய பொதுமக்களுக்காக—உடன் பிறவாச் சகோதர சகோதரர்களாகிய பொது மக்களுக்காக—எங்களின் இரத்தமாய்—உணர்ச்சியாய்—விளங்கும் சொந்தக்காரர்களாகிய பொது மக்களுக்காக—எங்கள் உறவினர்களாகிய பொதுமக்களுக்காக - பொது மக்களால் அமைக்கப்பட்ட இந்த அரசு—பாடு பட்டு வருகிறது.

# செய்திப் படங்கள்...


சென்னை நகர், தஞ்சை, மதுரை கோவை மாவட்டங்களின் ஆலயத் திருப்பணிக்காக ரூ.4·75 கோடி செலவு செய்ய அரசு திட்டமிட்டு உள்ளது.


தலைமை நீதி மன்றம்
தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டம் செல்லாது என்று தனி நபர் ஒருவர் தொடர்ந்த வழக்கில், மேற்படி சட்டம் செல்லுபடியாகும் என்று இந்தியத் தலைமை நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.


அரசுப் போக்கு வரத்துத் தொழிலாளர்களான ஓட்டுநர், நடத்துநர் பரிசோதகர், நேரக் காப்பாளர், ஆய்வர் மேலாளர் ஆகியோர்க்கு இந்த ஆண்டு 8⅓ சதவீத போனஸ் தரப்பட்டிருக்கிறது.


தனியார் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கும் அக்டோபர் முதல், வீட்டு வாடகைப் படி கொடுப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது.


சென்னை நகரை அழகு நகராக்கும் திட்டத்தின் அடிப்படையில் - ஐ.நா. நிபுணர் ஒருவர் வரவழைக்கப்பட்டுள்ளார்.


1
சனவரி
சம்பளம்
அ. ஆ
இ
வருகின்ற சனவரித் திங்கள் முதல், தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும், முதல் தேதியன்றே சம்பளம் கிடைப்பதற்கு, அரசு ஏற்பாடு செய்துள்ளது.
கோபன்...



தமிழரசு
இதழில்
முதல்வர், டாக்டர் கலைஞர் எழுதும்
குறளோவியம்
விரைவில் தொடர்ந்து வெளிவரும்

# முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி!



# முல்லைக்குப் பேர் கொடுத்தார் கலைஞர்

**கொ**ழு கொம்பின்றித் தவித்த முல்லைக் கொடிக்குத் தன் தேரையே ஈந்தான் கடை எழு வள்ளல்களில் ஒருவனான பாரி! அந்தப் பாரி வள்ளலின் நினைவாகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள உயர் விளைச்சல் தரும் முல்லைக்குப் ''பாரி முல்லை'' என்று பெயரிட்டார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர்!

கலைஞர் அவர்களால் பெயரிடப் பெற்ற ''பாரி'' முல்லையை மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 26–9–71 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவின்போது, வெளியிட்டார். பாரி முல்லை மலர்களால் அமைக்கப்பட்டிருந்த இரு பூச்செண்டுகளை மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் வழங்கினார். பாரி முல்லையின் மணம், விழா மேடையில் அமர்ந்திருந்தோரின் மனத்தைக் கவர்ந்து மகிழ வைத்தது!

முல்லையில் பலரகங்கள் உள்ளன! அவற்றில் சில நீண்ட பூக்காம்புகளை உடையனவாயும், சில குட்டையான பூக்காம்புகளை உடையனவாயும் இருக்கின்றன. ஆனால் நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகங்களையே முல்லை மலர் விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகள் விரும்பி அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். ஏனெனில், நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகப் பூக்களே சரமாகத் தொடுப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கின்றன. ஆனால் நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகங்களைச் சிலந்திப் பூச்சிகள் (Gall mites) அதிக அளவில் தாக்கிப் பெருஞ் சேதம் விளைவிக்கின்றன. முல்லைச் செடியின் இலைகள், தண்டுகள், துளிர்கள் ஆகியவற்றைச் சிலந்திப் பூச்சிகள் தாக்கி முல்லை சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் நீண்ட பூக்காம்பு உடைய முல்லை ரகங்களைப் பயிரிட, முல்லைச் சாகுபடி செய்யும் உழவர்கள் முன்வருவதில்லை.

முல்லைச் சாகுபடி செய்யும் உழவர்களின் இப்பெருங் குறையைத் தீர்ப்பதற்காகத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் தற்பொழுது இணைக்கப்பட்டுள்ள, கோவை வேளாண்மைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு பிரிவான மலர்வகை ஆராய்ச்சி நிலையத்தில், முல்லை ரகங்கள் குறித்துப்பல ஆண்டுகளாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த ஆராய்ச்சியின் பயனாகவே, சிலந்திப் பூச்சிகள் தாக்காத, உயர் விளைச்சல் தரக்கூடிய முல்லை இனம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது!

அந்தப் புதிய ரக முல்லைக்குத்தான் மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''பாரி முல்லை'' என்று பெயரிட்டார்கள்.

## பாரி முல்லையின் சிறப்புகள்

*தற்பொழுது சாகுபடியில் உள்ள ரகங்களைக் காட்டிலும் 4 மடங்கு பூக்களைத் தரக் கூடியது.

*மற்ற முல்லை ரகங்கள் 9 அல்லது 10மாதமே பூக்களைக் கொடுக்கும். ஆனால் பாரி முல்லையோ பிப்ரவரி முதல் டிசம்பர் வரை 11 மாதங்களும் பூக்கின்றன.

*நீளக்காம்பு வகையைவிடச் சிறிதளவே குறைவாக இருப்பதால், வியாபாரிகள் விரும்பி வாங்குகின்றனர்.

*சிலந்திப் பூச்சிகளின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது.

*ஏக்கருக்கு 4,300 கிலோ கிராம் பூக்களைக் கொடுக்கும். கோவை வேளாண்மைக் கல்லூரியில் ஏக்கருக்கு 7,888 கிலோ கிராம் பூக்களைப் பாரி முல்லை கொடுத்துள்ளது.

*அதிக மணமுள்ளது.

*பாரி முல்லை ஏக்கருக்கு ரூபாய் 7,000 முதல் ரூபாய் 8,000 வரை நிகர வருவாய் அளிக்கும் ஆற்றல் படைத்தது.

பாரி எவ்வாறு ஏழை எளிய உழவர் பெருமக்களைக் காப்பாற்றினானோ அதுபோலவே பாரி முல்லையும், முல்லைச்சாகுபடி செய்யும் ஏழை எளிய உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கிக் கொடுத்து, அவர்களின் வாழ்வை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

''பாரி முல்லை'' பயிரிடும் முறையைச் சற்று பார்ப்போம்.

பாரி முல்லைச் சாகுபடிக் குறிப்புகள்

**வயது:** பாரி முல்லைச் செடிகள் 50 ஆண்டுகட்கு மேலும் உயிருடன் இருந்து பூக்கும் தன்மையுடையது. ஆனால், ஒரே நிலத்தில் 15 முதல் 18 ஆண்டுகள் வரை பயிரிடுவதே சிறந்தது.

**பதியம் போடுவதற்கு ஏற்ற பருவம்:** ஜூன்-ஜூலை முதல் அக்டோபர்-நவம்பர் வரையான மழைக் காலமே பதியம் போடுவதற்கு ஏற்றப் பருவமாகும்.

**பதியம் நடும் பருவம்:** ஜூன் முதல் டிசம்பர் வரையுள்ள காலமே சிறந்தது.

**இடைவெளி:** பதியங்களை நடுவதற்கு ஒரு வாரம் முன்பாக, குழிக்குக் குழி $1\frac{1}{2}$ மீட்டர் இடைவெளி விட்டு, 45 முதல் 60 சென்டி மீட்டர் வரை நீளம், அகலம், ஆழம் உள்ள குழிகளைத் தோண்டிக் காய விட வேண்டும். இந்தஇடைவெளியில் பதியங்களை நடுவதற்கு, ஏக்கருக்கு 1,500 முதல் 2,000 பதியங்கள் தேவைப்படும்.

**அடி உரமிடுதல்:** ஒவ்வொரு குழிக்கும் 20 கிலோ தொழு உரம் அல்லது கம்போஸ்ட் எரு விட்டு, மண்ணைக்கொண்டு மூடி நிரப்பித் தண்ணீர் விட்ட பின்பே பதியங்களை நடவேண்டும்.

**ஊடு சாகுபடி:** (1) பாரிமுல்லை நடப்பட்ட முதலாண்டில் செடிகளுக்கு இடையில் காய்கறிச் செடிகளையோ அல்லது கனகாம்பரம், சாமந்தி போன்ற மலர்ச் செடிகளையோ ஊடு பயிராகச் சாகுபடிசெய்யலாம். (2) ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர், ஜனவரியில் காவாத்து செய்ய வேண்டும். காவாத்து செய்ய நில மட்டத்திலிருந்து 2 அடி உயரம் வரை கிளைகளை விட்டு, மீதிப் பகுதியை வெட்டி எடுத்துவிட வேண்டும். கிளைகளில் உள்ள இலைகளையும் உருவி எடுத்துவிட வேண்டும். இவ்வாறு காவாத்துச் செய்வதால் அதிக பூக்கள் கிடைப்பதுடன், கிளைகளிலிருந்து பூக்களை எளிதாகவும் கொய்ய முடியும். (3) மூன்று மாதத்திற்கு ஒரு முறை மண் வெட்டியால் நிலத்தைக் கொத்திவிட வேண்டும்.

**மேலுரமிடுதல்:** டிசம்பர்—ஜனவரியில் செடிகளுக்குக் காவாத்துச் செய்த பின்பு ஒரு தடவையும், ஜூன்-ஜூலையில் ஒரு தடவையும் ஆக ஆண்டிற்கு இரு முறை கீழ்க்கண்ட அளவு உரத்தை ஒவ்வொரு செடிக்கும் ஒவ்வொரு தடவையும் இட வேண்டும்.

அமோனியம் சல்பேட்— 300 கிராம்.

சூப்பர் பாஸ்பேட்— 750 கிராம்.

மூரியேட் ஆப் பொட்டாஷ்— 200 கிராம்.

தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு—15 கிலோ.

செடியைச்சுற்றி உரங்களை இட்டு நன்கு கொத்திவிட வேண்டும். உரமிட்டவுடன் நீர்ப்பாசனம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**நீர்ப்பாசனம்:** பூக்கும் காலம் வரை, வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூக்கும் காலத்தில் வாரம் இருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அக்டோபர் மாதத்தில் பூப்பது நின்றவுடன் தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்திவிட வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு:** 15 நாட்களுக்கொருமுறை பாலிடாலும், கந்தகமும் கலந்து தெளித்து மொட்டுப் புழுக்களையும், சிலந்திப் பூச்சிகளையும் தடுக்கலாம். பாரி முல்லை, சிலந்திப் பூச்சிகளின் தாக்குதலைப் பெருமளவில் தாங்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்தது. இந்த ரகத்தில், சிலந்திப் பூச்சிகளின் தாக்குதல் 4 சதத்திற்கும் குறைவாகவே காணப்படும். சிலந்திப் பூச்சியின் தாக்குதல் மிகவும் கடுமையாகக் காணப்படின் வாரமொரு முறை கந்தகம் தூவ வேண்டும். அல்லது தியோவிட் மருந்து 1 பவுண்டை 50 காலன் தண்ணீரில் கலந்து வாரமொருமுறை தெளித்துத் தாக்கப்பட்ட இலைகளை அப்புறப் படுத்திவிட வேண்டும். அல்லது 'டிரைதியான்' (150 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து வாரமொரு முறை தெளிக்க வேண்டும்.)

**மலர் கொய்தல்:** இரண்டாம் ஆண்டிலிருந்து தொடர்ந்து மலர் கொய்யலாம். மார்ச்சு மாதத்திலிருந்து அக்டோபர் வரை தொடர்ந்து பாரி முல்லை அதிகமாக மலரும். மற்ற மாதங்களிலும் ஓரளவு மலரக் கூடும்.

**மகசூல்:** ஒரு ஏக்கரி லிருந்து ஆண்டுதோறும் சராசரியாக 4,000 கிலோ முதல் 4,300 கிலோ வரை மகசூல் கிடைக்கும். முறையான சாகுபடி முறைகளையும், சிறந்த பராமரிப் பினையும் மேற் கொண்டால்ஏக்கருக்கு 7,800 கிலோ மகசூல் வரை பெறமுடியும்.



**செலவும் வரவும்:** பாரி முல்லையைப் பயிரிட முதலிரண்டு ஆண்டுகளில் ஆண்டுதோறும் ஏக்கருக்கு ரூபாய் 2,000 முதல் ரூபாய் 3,000 வரையிலும் செலவாகும். மூன்றாம் ஆண்டிலிருந்து ரூபாய் 4,000 முதல் ரூபாய் 5,000 வரைச் செலவாகும். மூன்றாம் ஆண்டிலிருந்துஅதிகமாக மலர்களைக் கொடுக்கும்பொழுது ஒரு ஏக்கரிலிருந்து மொத்த வருவாயாக ரூபாய் 12,000 கிடைக்கும். பாரி முல்லைத் தோட்டத்தைப் பராமரிப்பதில் செலுத்தப்படும் கவனத்திற்கேற்ப, மூன்றாம் ஆண்டிற்குப் பிறகு ஆண்டுதோறும் நிகர லாபமாக ரூபாய் 8,000 பெற முடியும்



### வீட்டுத் தோட்டத்திற்கும் ஏற்றது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மலர் வகை ஆய்வுக் கூடத்தில் 1970-ஆம் ஆண்டில், எட்டு வயதான ஒரு பாரி முல்லைச் செடியிலிருந்து 6,489 கிராம் மலர்கள் கிடைத்துள்ளன. எனவே, பாரி முல்லையை வணிகத்திற்காக மட்டுமல்லாமல், வீட்டுத் தோட்டங்களிலும் ஒரு சில செடிகளை நட்டு, நன்கு பேணி வளர்த்தால், வீட்டிற்கு வேண்டிய மணமுள்ள மலர்களைப் பெற்று மகிழலாம்.

பாரி முல்லை மலர், இதர மல்லிகை இன மலர்களை விட மணமுள்ளதாகவும், நன்றாக மலர்ந்த பின்பும் 24 முதல் 36 மணி நேரத்திற்கு வாடாமலும், அதிக தூரமுள்ள இடங்களுக்கு விற்பனைக்காக எடுத்துச் செல்லும்போது கெட்டுவிடாத தன்மையுடையதாகவும் இருக்கிறது. ஆனால், மற்ற மல்லிகை இனங்களின் மலர்கள் குறுகிய காலத்திற்கே தாங்கக்கூடியவை. மல்லிகை மொட்டுகள் கொய்த 12 மணி நேரத்திற்குள் மலர்ந்து, விரைவில் வாடிவிடும் தன்மையுடையவை. இத்தகைய சீரிய பண்புகளைப் பெற்றுள்ள பாரி முல்லையை வீட்டுத் தோட்டத்திலும், வணிக முறையிலும் பயிரிட்டுப் பயனடையலாம்.

## கீரையோ கீரை . . . . . . . .

| | | |
|---|---|---|
| வெந்தயக் கீரை | — | மார்பு வலிக்கும், இடுப்பு வலிக்கும் ஏற்றது. |
| முள்ளங்கி இலை | .. | மதுமேக நோயாளிகளுக்கேற்றது. |
| வல்லாரைக் கீரை | | அண்ட வீக்கத்தைப் போக்கும். |
| வள்ளைக் கீரை | ... | பிரசவித்த பெண்களுக்குப் பாலூ சுரப்பு உண்டாக்கும். |
| சோலிக் கீரை | .. | சூதகச் சிக்கலை நீக்கும். |
| துத்தி இலை | ... | மூலாதாரத்திலுள்ள வாயுவைக் கண்டிக்கும். |
| சிறு பசலைக் கீரை | .. | வெள்ளை நோயுள்ளவர்கள் தினமும் ஒருவேளை இதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். |
| அரைக்கீரை | ... | நீரிழிவுக்காரர்களுக்கு ஏற்ற கீரை இது. |
| கரிசலாங்கண்ணிக் கீரை. | | கையாந்தகரை என்று சொல்லப்படும் இந்த இலையை வாயில் போட்டு மென்று பல்லினைத் தேய்க்கப் பல் சம்பந்தமான வியாதிகள் போகும். |
| சிறு கீரை | ... | காச நோயுள்ளவர்கள் தினசரி உணவில் இதை உட்கொள்ள வேண்டும். |

# அரசு ஆணைகள்-அறிவிப்புகள்



(இப் பகுதியில் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள ஆணைகளின் சுருக்கமும், அறிவிப்புகளின் சுருக்கமும் அரசு ஊழியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வெளியிடப்பட்டுள்ளது).

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குக் காலத்தில் சம்பளம் வழங்குவது பற்றிய தமிழ்நாடு அரசின் ஆணை.**

*அரசு ஆணை எண் 2281, நாள் 11–10–1971, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை.*

ஊராட்சி கல்வி நிதி விசாரணைக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கூடங்களிலும், ஊராட்சி ஒன்றிய எல்லையில் உள்ள உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை, ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் இதர அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது போலவே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே அரசாங்கக் கருவூலத்திலிருந்து பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதன்படி, ஆசிரியர்களுக்குரிய சம்பளம் முழுவதும், முதலில் ஊராட்சி ஒன்றியத்திடம் கொடுக்கப்படும். அதன்பின் ஊராட்சி ஒன்றியப் பங்குத் தொகை மீண்டும் அரசாங்கக் கணக்கில் ஈடு கட்டப்படும். ஊராட்சி ஒன்றியத்தின் பங்கினை நிர்ணயிக்க ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு குறிப்பிட்டுள்ள 6 வகைகளைப் பின்பற்றலாம்.

இந்தத் திட்டம் 1–1–1972 முதல் நிறைவேற்றப்படும். (அதாவது 1971-ஆம் ஆண்டின் டிசம்பர் மாதச் சம்பளம், ஜனவரி 1972-ல் வழங்கப்படும்).

இத் திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றிய தனித்தனி விவரமான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

**தனியார் கல்லூரி ஊழியர்கட்கு வீட்டு வாடகைப் படி:—**

தமிழ்நாட்டில் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்குவதுபோல், அந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி கொடுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காகும் செலவில் பாதியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

இச் சலுகை 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்படுத்தப்படும்.

இத் தகவலை மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.

---

# அழகான கண்கள் அமைய வேண்டுமா?



நெஞ்சத்தின் நிலையை உணர்த்தும் கருவியாக விளங்குவது கண்களே! இதனால் தான் ஒருவருடைய கண்களைப் பார்த்தே அவரது நெஞ்சத்தில் குடிகொண்டுள்ள எண்ணங்களை அறிய முடிகிறது.

அழகான ஒளிவிடும் கண்கள் அமைய வேண்டுமானால், நாள்தோறும் காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கண்களின் மேல் குளிர்ந்த நீரைத் தெளித்துத் துடைக்க வேண்டும்.

கண்கள் சோர்வு அடைந்திருக்கும்பொழுது, பருத்திப் பஞ்சினால் ஆகிய இரு சிறு அட்டைகளைக்(Pads) குளிர்ந்ததேநீரில் நனைத்து எடுத்து, ஒவ்வொரு கண்ணின் மேலும் ஒரு பஞ்சு அட்டையை வைத்துக்கொண்டு, கொஞ்ச நேரம் ஓய்வு எடுக்கவேண்டும். அதன்பின் அவைகளை அகற்றிவிட்டு எழுந்திருக்கும் பொழுது, கண்களில் இருந்த சோர்வு மறைந்து, புத்துணர்வும் புத்தொளியும் ஏற்பட்டுள்ளதை உணர்வீர்கள்.

நீண்ட கண்ணிமை மயிர்கள் பெற விரும்பினால் ஒவ்வொரு நாளும், இரவில் தூங்குவதற்கு முன்பு, சில துளி தூய்மைப்படுத்தப்பட்ட விளக்கெண்ணெய்யை (Refined Caster Oil) உங்கள் கண்ணிமை மயிர்களின் மேல் தடவிக் கொள்ளுங்கள். இம்முறையில் மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து செய்துவந்தால், உங்கள் கண்ணிமை மயிர்கள் நீண்டு வளர்ந்தும் கருமையாகவும், அடர்த்தியாகவும் காணப்படும்.

உங்கள் புருவம் மிகவும் கருமையாகத் தோன்ற வேண்டுமானால், புருவங்களின் மேல் கொஞ்சம் விளக்கெண்ணெய் தடவி வாருங்கள்.

மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு வந்தால், பிறர் உள்ளம் கவரும் கண்கள் உங்களுக்கு அமையும்.



# பரனூரில் ஒரு பயனுள்ள இல்லம்

பரனூர்.

இயற்கை வளம் நிறைந்த சூழ்நிலை. நோயாளிகள் இருப்பிடத்திற்கேற்ற அமைதியும், நல்ல காற்றோட்டமும், பச்சைப் பசேலென்ற இயற்கைக் காட்சியும், அழகிய குன்றுகளும் அமைந்த இடந்தான் பரனூர். செங்கற்பட்டுக்கு அருகே, அதாவது சென்னையிலிருந்து 51 கி. மீட்டர் தூரத்திலிருக்கிறது இச்சிற்றூர்.

இங்குதான் ''தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்'' முதல்வர், டாக்டர், கலைஞர் அவர்களால், அக்டோபர் 2-ல் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ரூ. 7 இலட்சம் செலவில் கட்டப்பட்டிருக்கும் இந்த மறுவாழ்வு இல்லம், தமிழ்நாட்டில் முதல் கட்டமாகப் பரனூரில், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இன்னும் ஐந்து இடங்களில் இம்மாதிரியான இல்லங்கள் அமைக்கப்படும். அவை. 1. உளுந்தூர்ப்பேட்டை, 2. பருகூர், 3. புதுக்கோட்டை. 4. இராமநாதபுரம், 5. திருவண்ணாமலை. **பரனூரைச் சேர்த்து ஆறு இடங்கள் ஆகின்றன.**

பரனூரை அடுத்து, உளுந்தூர்ப்பேட்டையிலும், பருகூரிலும் உடனடியாக இந்த இல்லங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்து வருகின்றன.

பிச்சைக்காரர் மறு வாழ்வுக்காக முதன் முதலில் துவக்கப்பட்ட பரனூர்இல்லத்தில்,தொழு நோயாளருக்கான எட்டுக் குடியிருப்புகள் இருக்கின்றன. ஆடவருக்கும், மகளிருக்கும் தனித் தனியாக இல்லங்கள் இருக்கின்றன. ஆடவருக்கான இல்லங்கள் நான்கும், பெண்களுக்கான இல்லம் ஒன்றும், குடும்பத்தோடு (மனைவி மக்களோடு இருப்பவர்கள்) இருப்பவர்க்கான இல்லம் ஒன்றும், தொழிற்கூடத்துக்கும், தற்காலிக அலுவலகத்துக்கும் ஒவ்வொன்றுமாக இல்லங்கள் இங்கு உள்ளன.

இந்த மறு வாழ்வு இல்லத்தில், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் 118 பேர் தங்கிச் சிகிச்சை பெறுகிறார்கள். அவர்களில் 84 ஆண்களும், 7 பெண்களும் இருக்கின்றனர். இவர்களைத் தவிர, 13 குடும்பங்களும் உள்ளன. அதாவது மனைவி மக்களோடு இருப்பவர்கள் இவர்கள். மூன்று குடும்பங்களுக்கு ஒரு குழந்தை வீதம் இருக்கிறது.

குழந்தைகளுக்கு இந்நோய் பரவாமலிருக்க, இவர்களுக்காகத் தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தலாமா என்ற யோசனையும் இருக்கிறது.

இது சம்பந்தமாக மாநிலத் தொழு நோய் அதிகாரி அவர்கள் கூறுவதாவது :

'' இங்குள்ளவர்களெல்லாம் பல இடங்களிலிருந்தும் வந்தவர்கள். செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, வியாசர்பாடி வில்லிவாக்கம் ஆகிய இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டுச் சிகிச்சை பெறுகிறார்கள்.

'' இங்குள்ள தொழு நோயாளிகள் மிகவும் தெம்பாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் இங்குத் தரப்படுகின்றன. மனத்துக்கு இதம் அளிக்கும் அமைதியான சூழ்நிலையில் அவர்கள் இங்குப் பல்வேறு பயனுள்ள காரியங்களில் ஈடுபடுகின்றனர்.''

அவர் வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை இங்கு வருகிறார். நோயாளிகளைப் பரிசோதித்து, அவரவர்களுக்கேற்றவாறு மருந்துகளை எழுதித் தருகிறார்.

'' காலை பகல், இரவு மூன்று வேளையும் மருந்து, மாத்திரைகள் தருகிறோம். சிலருக்கு டாக்டர் யோசனைப்படி ஊசியும் போடுகிறோம். சிகிச்சை செய்துகொள்ளக் கூட வழியில்லாமல், தெருத் தெருவாய் அலைந்து வந்த இவர்கள், இங்குச் சிகிச்சையும், வேளா வேளைக்கு நல்ல உணவும் பெற்று, ஓரளவு தம் நோயை மறந்து மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்'' என்று மருந்தாளுநர் கூறுவதிலிருந்து அவர்கள் நன்கு கவனிக்கப்படுவதை நாம் பார்க்க முடிகிறது.

ஆடவர் இல்லத்திலும் சரி, மகளிர் இல்லத்திலும் சரி, அவர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து உரையாடி மகிழுவதையும், குடும்பத்தினர் தம் குழந்தைகளோடு குதூகலமாய் இருப்பதையும் கண்டால், நமக்கே மகிழ்ச்சியாக இருக்கிறது. முன்பு போலத் தெருக்களிலும், நடைபாதைகளிலும் அலைய வேண்டியதில்லை. உட்கார்ந்த இடத்திலிருந்தே தங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைத்தால் யார்தான் மன நிம்மதி பெற மாட்டார்கள் ?

அதனால்தானோ என்னவோ, முதல்வர் இங்கு வந்தபோது, ''தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளித்த மன்னவனே வருக, வருக'' என்ற வைர எழுத்துக்களைப் பொறித்தனர் போலும்.

காலை 7-30 மணிக்கு உப்புமாவும், தேநீரும் எல்லாத் தொழு நோயாளிகளுக்கும் வழங்கப்படுகின்றன. பகல் 12 மணிக்கு

அரிசிச் சாதம், சாம்பார், பொரியல்; மாலை 4 மணிக்குத் தேநீர். இரவு 7 மணிக்கு அரிசிச் சாதம், ரசம், அல்லது புளிக் குழம்பு, பொரியல். இப்படி உணவுக்கு மட்டும் ஓர் ஆளுக்கு ரூ. 1·50 செலவு ஆகிறது.

இங்கேயே சமையல் எல்லாம் செய்யப்படுகிறது. இதற்காக இரண்டு சமையற்காரர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆண்களுக்குக் கைத்தறி வேட்டியும், சட்டையும், பெண்களுக்குப் புடவையும் இரவிக்கையும் கொடுக்கப்படுகின்றன.

ஒரு கூடத்தில் தற்காலிகமாக அலுவலகம் ஒன்று செயல்படுகிறது. இங்குக் கண்காணிப்பாளர், மருத்துவ வல்லுநர், நிருவாக அலுவலர், பண்டகக் காப்பாளர், கணக்கர், செவிலியர், மருந்தாளுநர், மற்ற ஊழியர்கள் இருந்து பணிபுரிகின்றனர். இவர்களனைவரும் இந்நோயாளிகளிடம் மிகப் பரிவுடன் பேசிக் கவனித்து வருவதைக் கண்டால், ‘ஒருவருக்கொருவர் உதவி செய்வதாலன்றோ இவ்வுலகம் வாழ்கிறது’ என்ற உண்மை புலப்படுகிறது.

இந்த மறு வாழ்வு இல்லத்தில் நிரந்தர மருத்துவ அதிகாரி ஒருவரை அரசு நியமித்திருக்கிறது. இவர் இங்கேயே தங்கி, இந்நோயாளிகளுக்கு உறுதுணையாக இருந்து வருவார். மாநிலத் தொழுநோய் அதிகாரிக்கு உதவியாக இன்னும் ஒரு டாக்டரும் பணிபுரிகிறார். இவர்கள் தமிழ் நாட்டில் இன்னும் ஐந்து இடங்களில் துவக்கப்படவிருக்கும் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்களைப் பார்வையிடுவார்கள்.

இந்தப் பரனூர் மறு வாழ்வு இல்லத்துக்கு இன்னும் அறுபது தொழு நோயாளிகள் வரவழைக்கப்பட விருக்கின்றனர். ஓரிரு நாட்களில் அவர்கள் இங்கு வந்து தங்கிச் சிகிச்சை பெறுவார்கள்.

நோயாளிகள் தம் நோயை மறந்து, செயல்பட இங்குத் தொழிற்கூடம் ஒன்றை நிறுவியிருக்கிறார்கள். இப்போது முதல் கட்டமாகப் பாய் நெசவு நடைபெறுகிறது. தொழு நோயாளிகள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டும், பாடிக்கொண்டும் நெய்வதைக் கண்டு களிப்படையாதார் யார்?

படிப்படியாகக் கைத்தறித் துணி நெசவு, தோட்ட வேலை, தச்சுவேலை, காலணிகள் செய்தல், கோழிப் பண்ணை நடத்துதல் போன்ற பயனுள்ள வேலைகளில் இவர்களுக்குப் பயிற்சிதரப் படும். இதற்கென ஒவ்வொரு தொழிலிலும் தேர்ந்தவர்கள், இவர்களுக்கு அந்தந்தத் தொழிலைக் கற்றுக் கொடுப்பார்கள்.

யார் யாருக்கு எந்தத் தொழிலில் விருப்பமோ, அவரவர் அந்தந்தத் தொழிலைக் கற்றுக் கொள்ளலாம். காலை 8 மணியிலிருந்து 11 மணி வரையும், பிற்பகல் 3 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் இந்தத் தொழிலில் நோயாளிகள் ஈடுபட்டு, ஒரு பயனுள்ள பொழுது போக்கினையும், மனத் தெம்பினையும் பெறுகின்றனர்.

டாக்டர் ஒரு நோயாளியைப் பார்த்து “நீ எந்தக் குழு? (Group)” என்று கேட்கிறார். அதற்கு அந்த நேயாளி “நான் வில்லிவாக்கம் குழு” என்று பதில் சொல்கிறார். ஒவ்வொரு ஊரிலிருந்து வரவழைக்கப்பட்டவர்களை, அந்த ஊர்ப் பெயரிலேயே ஒரு ‘குரூப்’பாக அமைத்திருக்கிறார்கள். உதாரணமாக, சைதாப்பேட்டையிலிருந்து வந்தவர்கள் சைதாப்பேட்டைக் குழு.

பரனூரில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மறு வாழ்வு இல்லத்தில் 750 பிச்சைக்காரர்கள் தங்க வசதி இருக்கிறது. இதே போல் தமிழ்நாட்டில் துவக்கப்படவிருக்கும் மற்ற மறுவாழ்வு இல்லங்களிலும் இதே தொகையினர் தங்க வசதி செய்யப்படும்.

இந்த மறு வாழ்வு இல்லத்தில் ஓரளவு படித்தவர்களும் இருக்கிறார்கள். எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு முதியோர் கல்வித் திட்டமும் விரைவில் இங்குச் செயல்படவிருக்கிறது. ஒரு தொழு நோயாளி எட்டாவது வரை படித்திருக்கிறார். அவர் அலுவலக வேலைக்கு உதவியாகவும் இருக்கிறார்.

முதல்வர் அவர்கள் இந்த இல்லத்தைத் துவக்கி வைக்கும் போது, தொழு நோயால் பாதிக்கப்பட்ட முகமது அலி என்ற கவிஞர் வாழ்த்துப்பா பாடினார். அந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுக் கலைஞர் அவர்கள், “இங்கு முகமது அலி என்ற தோழர் கவிதை இயற்றி அதனை இசையாக உணர்ச்சி கொப்புளிக்கப் பாடினார். அவருக்குக் கை விரல் இல்லை. ஆனால் கவிதை வளம் இருக்கிறது. உடலில்தான் நோயே தவிர, உள்ளம் புனிதமானது. சிலருக்கு உடை பளபளப்பாக இருக்கும். ஆனால், உள்ளே தொழு நோய் தேம்பி அலையும்” என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு கூறிய முதல்வர், “முகமது அலி உணர்ச்சிப் பிழம்



பாகப் பாடினர் அதில் என்னைப் புகழ்ந்து பாடினர் என்பதற்கு அவர்களிடம் நான் கொண்டிருக்கிற பற்றுதான் காரணம் '' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

முப்பத்தைந்து வயது இளைஞரான முகமத அலி தொழு நோய்க்குச் சிகிச்சை பெற்றுவரும் கவிஞர். கலைஞருக்கு வாழ்த்துப்பா பாடித் தனது வெள்ளை உள்ளத்தை வெளிக்காட்டினர். இவர் தொழு நோயாளிகள் நலனில் மிகுந்த அக்கறை செலுத்துபவர். தொழு நோயாளர் சங்கத்தின் செயலாளராக இருக்கும் இவர் நிறைய நாடகங்கள் எழுதியுள்ளார். சில நாடகங்கள், கவிதைகள் வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. தமிழ் உள்ளம் கொண்ட இவர் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும், '' நான் தமிழால் வாழ்கிறேன். தமிழ் என் நோயை மறக்கச் செய்கிறது '' என்கிறர் இவர். இவர் எழுதிய நாடகங்களில் நடித்தவர்கள், பரனூர் இல்லத்தில் கூடச் சிலர் இருக்கிறர்கள்.



பரனூர் இல்லத்தில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளி என். எஸ். சுகதேவன் சொல்கிறர் :

'' நான் பிறந்தது மதுரை. என் நோயைக் குணப்படுத்திக் கொள்ள முதலில் செங்கல்பட்டு வந்தேன். அங்கு இடமின்மையால் ஒரு தனியார் நடத்தும் வியாசர்பாடி இல்லத்துக்கு வந்தேன். இப்போது அங்கிருந்து இங்கு வந்துள்ளேன். இங்கு எனக்கு எல்லாவிதமான வசதிகளும் கிடைக்கின்றன.

''உண்ண உணவு, உடுக்க உடை, படுக்கப் பாய், குளிக்கச் 'சோப்பு' எல்லாம் தருகிறர்கள். நல்ல காற்றேட்டமான இந்த இடத்தில் இருந்து சிகிச்சை பெறுவது மனத்துக்கு இதமாக இருக்கிறது. டாக்டரும் எங்களிடம் பரிவாக இருக்கிறர். விரைவில் என் நோய் குணமாகிவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. உடல் நிலை குணமானதும், எனக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொல்லியுள்ளார்கள்.''

இருபத்தாறு வயதுள்ள இலட்சுமி என்ற பெண்மணி என்ன சொல்கிறர் ?

'' நான் திருத்தணி வங்கனூரைச்சேர்ந்தவள். நான் அங்கு இருக்கும்போது மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இங்கு அந்தக் கஷ்டமில்லாமல் இருக்கிறேன். வேளா வேளைக்குச் சோறு கிடைக்கிறது. குளிப்பதற்குத் தனிஅறை இருக்கிறது. அரசாங்கம் எங்களை வாழவைக்க இவ்வளவு வசதியும் தருகிறது. இதற்கு நாங்க என்ன கைம்மாறு செய்வோம்......''

பரனூர் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்துக்கான இந்தப் பரந்த இடத்தின் பரப்பளவு 22·5 ஏக்கர். இன்னும் 16 குடியிருப்பு இல்லங்கள் கட்டப் போவதாக ஒரு கட்டட அதிகாரி கூறினர். மருத்துவ மனையோடு சேர்ந்த அலுவலகம், கண்காணிப்பாளர் இல்லம், செவிலியர் இல்லம் ஆகியவை கட்ட வேண்டியுள்ளதாம்.

இப்போதுள்ள ஒவ்வொரு குடியிருப்பும் 85 அடி நீளமும் 16 அடி அகலமும் உடையதாக, வசதி மிக்கதாக இருக்கிறது. இந்த இல்லத்துக்கு அருகே இருக்கும் 'வெட்டியான் குன்று' என்னும் மலையில் குடி தண்ணீர்த் தொட்டியொன்றை அமைத்திருக்கிறர்கள். இது 6,000 காலன் நீர் கொள்ளும் அளவு உடையதாகும். குன்றுக்கு அருகே 'பெரிய ஏரி' என்ற பெயரில் ஒரு ஏரி நீண்டு வளைந்து ஓடுகிறது.

பரனூர் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம், ஒரு பயனுள்ள இல்லமாகத் திகழ்கிறதென்றல் அதற்கு மூலகாரணம் கலைஞரின் வெள்ளை உள்ளமும், அவருக்குப் பக்க பலமாக நிதிகளை அள்ளி அள்ளித் தந்த பொதுமக்களுமே என்றல், அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

—பி. வி. கிரி


தமிழ்நாடு
கதர்ப்பட்டு
விற்பனை
10 சதவிகிதம்
தள்ளுபடி
கொடுக்கப்படும்
உங்கள் தேவைக்கு
கதர் கிராமத்தொழில்
விற்பனை
நிலையங்களுக்கு
வருகை தாருங்கள்!

# அரசுக்குச் சொந்தமான

# முதல் வணிகவரி அலுவலகம்

தமிழ்நாட்டின் மொத்த வருமானத்தில், ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு, வணிக வரி மூலம்தான் கிடைக்கிறது! ஆண்டொன்றுக்குச் சுமார் ரூபாய் 100 கோடி வணிக வரி மூலம் கிடைக்கிறது! ஆயினும் வணிக வரி வசூலிக்கும் அலுவலகத்திற்கென்று இதுவரை ஒரு கட்டடம் கூடத் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமாக இருக்கவில்லை! அந்தக் குறையைப் போக்கிவிட்டது நீலகிரி மாவட்டம்!

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான முதலாவது வணிகவரி அலுவலகக் கட்டடம், ரூபாய் ஒன்றரை இலட்சம் செலவில் உதகமண்டலத்தில் கட்டப் பெற்றுள்ளது. இந்தக் கட்டடம் இரண்டு மாடிகளைக் கொண்டது. இதில், வணிகவரி செலுத்த வரும் மக்கள் வசதியாக உட்காருவதற்கும், அலுவலக வேலைகள் தடையின்றி நடைபெறுவதற்கும் ஏற்ற வகையில் 14 அறைகள் உள்ளன.

அந்த 14 அறைகளும், நீலகிரி மாவட்டத்திலிருந்து ஆண்டுதோறும் 14 இலட்சம் ரூபாய் வணிக வரியாக வசூலிக்கப்படுகிறது என்பதை நினைவூட்டுவதாக அமைந்துள்ளன!

14 அறைகள் கொண்ட நீலகிரி மாவட்ட வணிக வரி அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25—9—1971 அன்று திறந்து வைத்தார். அக்கட்டடத்தைத் திறந்து வைத்த முதல்வர் அவர்கள் தமிழ்நாடு அரசின் வரி வசூலிக்கும் கொள்கையைத் தெளிவுபடுத்திப் பேசினார். அவர் குறிப்பிட்டதாவது :—

''நீலகிரியை, மலைகளின் ராணி என்று சொல்வார்கள். ராணிக்குத் தேவையானது மலர். ஆகவே, உதகை நிகழ்ச்சிகளில் முதலாவதாக நான் மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்தேன், ராணிக்காக, அடுத்தபடியாக, ராஜா போடுவது வரிதான். அந்த வரிகள்—அந்தக் கேளிக்கைகள் தாங்க முடியாதவை என நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது ராணியும் இல்லை! ராஜாவும் இல்லை! மந்திரிகள் தான் இருக்கிறோம்!

அதுவும் இந்த அமைச்சரவை தாங்கக் கூடியவர்களுக்கு வரி-தாங்க முடியாத ஏழை எளியவர்களை வாழவைப்பதற்காகப் போடும் வரி-என்ற வரிக் கொள்கையைத் தான் கடைப்பிடித்து வருகிறது.

வரியில்லாமல் எந்த அரசையும் நடத்த முடியாது! தாங்கக் கூடியவர்கள் மீது, தாங்கும் அளவில், வரி விதிப்பதுதான் தமிழக அரசின் கொள்கையாகும்.

மலரிலே இருக்கின்ற தேனை, வண்டு எப்படி மலரும் நோகாமல்-தானும் நோகாமல் எடுக்கிறதோ-அப்படி வரி கொடுப்பவர்களும் நோகாமல்-வாங்குகிறவர்களும் நோகாமல் இருக்கும் அளவில் வரி விதிக்கப்பட வேண்டும் என்பதே நமது கொள்கையாகும்.

மக்களுக்கு வசதி பெருக்கிட முயற்சி செய்யும் அரசுக்கு வரி தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் நமது வரிக் கொள்கை இருக்கிறது.

அண்ணா வழி அறவழி; அமைதி வழி; அவ்வழி நின்று அதிகாரிகளும்-பொது மக்களும் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்க, வரி வசூலிப்பதில் அனைவரும் ஒத்துழைப்பு நல்குவோமாக.



# நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும் ஸ்டாம் F-34 தயாரித்திருக்கிறோம்

களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா! மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34—குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!






இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா

STAM F-34 என்ற பெயரும், ஃப்ளாஸ்க்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை.

P.9868

# ஏழையின் வாழ்வும் வளம் பெற்றது

"பத்தொன்பது ஆண்டுகளாகப் பட்டா கிடைக்காமல் கஷ்டப்பட்டு வந்த நான், தங்கள் ஆட்சியில் தான் பட்டா பெற்றேன். நீங்கள் என் மகன் மாதிரி. தாங்கள் பல்லாண்டுக் காலம் வாழ்ந்து மகராசனாக இருக்க வேண்டும்!" என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களை வாழ்த்தி மாலை அணிவித்துவிட்டுத் திரும்பினார் 65 வயது மூதாட்டி ஒருவர்.

யாரும் எதிர்பாராமல் ஒரு நொடியில் நிகழ்ந்துவிட்ட இவ்வரிய நிகழ்ச்சியைக் கண்டு, சுண்டப்பாளையம் கலைமகள் திரையரங்கில், 26—9—1971 அன்று நடைபெற்ற 20,428 நில, வீட்டுமனை, தனிப்பட்டா வழங்கு விழாவிற்கு வந்திருந்த அனைவருமே வியப்படைந்தனர்.



கள்ளங் கபடற்ற அந்த ஏழைத்தாயின் வாழ்த்தைக் கேட்டு நம் முதலமைச்சர் அவர்கள் மகிழ்ந்தாரோ இல்லையோ தெரியவில்லை! ஆனால், நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!

பறவைக்கும் கூடு உண்டு. பாம்புக்கும் புற்று அல்லது புதர் உண்டு. பூச்சிப் பூரான்களுக்கும் பொந்து உண்டு. ஆனால், பாவம் ஏழைக்கோ வீடில்லை என்றிருந்த அவலநிலையை மாற்றி, ஏழை எளியவர்களுக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்கச் செய்து வரும் கலைஞரின் கருணையை எண்ணி வியந்தேன். என் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் சுரந்து, கன்னங்களில் வழிந்தது!

அதுகண்டு அருகில் இருந்த செய்தியாளர் ஒருவர், "என்ன தம்பி" ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

"நான் அழவில்லை! ஆனந்தக் கண்ணீர் இது!" என்றேன்.

முதல்வருக்கு ஏழை எளிய மக்கள் அன்புடன் மாலையணிவித்துக் கொண்டிருந்தனர்! விழா மேடைக்கு அருகில் ஏராளமான பேர் மாலை போடுவதற்காக அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர்! எல்லாரையும் மாலை போட அனுமதிப்பதானால், மாலை போடுவதற்கு மட்டுமே குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும் போலிருந்தது! அடுத்து, வேளாண்மைப் பல்கலைக் கழகத் துவக்க விழாவிற்கு முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும் செல்ல வேண்டியிருப்பதால், மாலை போடும் நிகழ்ச்சியைக் குறைத்துக் கொள்ளுமாறு ஒருவர் ஒலிபெருக்கி மூலம், அன்பு வேண்டுகோள் விடுத்தார். ஒரு சில அலுவலர்கள் மாலை போட வருபவர்களைத் தடுத்துக் கூடப் பார்த்தனர். ஆனால், அன்பினால் உந்தப்பட்ட மக்கள், அலுவலர்களின் தடுப்பையும் மீறி, ஆர்வத்துடன் விரைந்து ஓடி வந்து முதல்வருக்கு மாலை போட்டுக் கொண்டே இருந்தனர். மக்களின் அன்பு வெள்ளத்தை யாரால்தான் தடுக்க இயலும்? மாலைகள் மலையெனக் குவிந்து கொண்டிருந்தன!

ஏழை, எளிய, பாட்டாளி, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் முதலமைச்சரிடம் காட்டும் அன்பை எண்ணிச் சிந்தையிலாழ்ந்தேன்! என் உடல் தான் அங்கு இருந்ததே ஒழிய உள்ளம் அங்கே இல்லை! எங்கெங்கோ எண்ணச் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது! பட்டா வழங்கும் விழாவிற்கு வரும் வழியில் கண்ட காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக, என் மனத்திரையில் ஓடியது!

சுண்டப்பாளையத்தை நோக்கி நாங்கள் பயணம் செய்து கொண்டிருந்த ஜீப் விரைந்து சென்று கொண்டிருந்தது. கோவை நகரின் வீதிகளிலே புத்தம் புதிய வண்ண வண்ணக் கார்கள், எண்ணற்றுப் போய்க் கொண்டிருந்தன. அந்த வீதிகளின் இரு மருங்கிலும் அழகு மிளிர் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் காட்சியளித்தன. இந்தக் காட்சிகளைக் கண்ட என் உள்ளம் கோவை நகரின் வளர்ச்சி கண்டு பெருமிதமடைந்தது. மேட்டுக் குடியினர் எனப்படும் மாளிகை வாசிகளும், தங்கள் மாளிகையை விட்டு வெளியே வந்து சாலையின் இரு மருங்கி




லும், தங்கள் குடும்பத்தினருடன் முதலமைச்சர் அவர்களின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் முகம் மலர்ந்திருந்தது! அவர்களின் கண்கள், மேட்டுக்குடியினராகிய எங்களிடம் இறுமாப்பு இல்லை என்று எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன.

அண்ணா வழியில் அமைதியாக ஆட்சி நடத்தும் முதல்வரைக் காணப் பணக்காரர்கள் காத்துக் கொண்டிருந்த காட்சி உண்மையிலேயே கண்கொள்ளாக் காட்சி யாகும்! ஏழையின் தோழனும் முதல்வரைக் காண



ஏழை எளிய மக்கள் திரண்டிருப்பதில் வியப்பில்லை. ஆனால், பணக்காரர்கள், அதுவும் தொழிலதிபர்கள், தங்கள் குடும்பத்துடன் முதல்வர் அவர்களைக் காணக் காலை இளம் வெய்யிலிலே காத்திருந்தது, முதல்வர் அவர்களின் பாரபட்சமற்ற ஆட்சியை வெளிப்படுத்துவதாகவே இருந்தது.

நகர எல்லையின் முடிவில் ஓர் குடிசைப் பகுதி. அந்தப் பகுதியில் வாழும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிசை வாழ் மக்கள் கூடியிருந்தனர். அவர்களின் கையிலே மலர்கள்! மனத்திலே மகிழ்ச்சி! உழைத்து உழைத்துக் கூனிக் குறுகிப் போன அவர்கள் தாங்கள் அன்றாடங் காய்ச்சிகள் என்பதையும், அன்று வேலைக்குச் செல்லாவிட்டால் அன்றிரவு அவர்கள் வீட்டு அடுப்பு, புகையாது என்பதையும் பொருட்படுத்தாது கலைஞர் அவர்களைக் கண்டு, மலர் தூவி, வாழ்த்துத் தெரிவிக்கக் கூடியிருந்த காட்சி என் நெஞ்சை உலுக்கியது! நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன்! எங்கள் ஜீப்பைக் கண்ட குடிசை வாழ் மக்கள், முதலமைச்சர் அவர்கள் விரைவில் வரப் போகிறார் என்பதை உணர்ந்து கொண்டு, முதல்வரைக் கண்டு களிக்க வேண்டும் என்ற பேரார்வத்தோடு முன்னேறிச் சாலையின் குறுக்கே வர ஆரம்பித்தார்கள்.

அவர்கள் கண்களை உற்றுக் கவனித்தேன்! அப்பப்பா! என்ன ஆசை! எத்தனை ஆர்வம்! குழி விழுந்த கண்கள் என்றாலும் அவைகளிலே எத்துணை ஒளி!

'கலைஞர் வாழ்க!' என்ற ஒரு குரல் ஒலி கேட்டது! அதைத் தொடர்ந்து அங்குக் கூடியிருந்த மக்கள், 'கலைஞர் வாழ்க!' என்று விண்ணதிர முழக்கினர். அவர்களுடைய வாழ்த்தொலிகள் கலைஞர் அவர்களின் மேல் ஏழை எளிய மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவே இருந்தன! என் கண்களில் மகிழ்ச்சியால் கண்ணீர் துளிர்த்தது!

அதுபோலவே வழி நெடுகிலும் கிராமப்புற மக்கள் சுண்டப் பாளையம் வரை—ஏழு மைல் தூரத்திற்கு நின்றிருந்த காட்சி—அரும்புகள் என்று சொல்லக் கூடிய கிராமப்புறச் சிறுவர்கள் ஆவலோடு காத்திருந்த காட்சி—எவர் மனத்தையும் தொடக் கூடியதாகவே இருந்தது!

சுண்டப்பாளையம் கலைமகள் திரையரங்கை நெருங்கினோம். மேளதாளங்கள் முழங்க, முதல்வரை வரவேற்க மக்கள் திரண்டிருந்தனர். விழா மேடைக்குச் செல்லும் வழியின் இருபுறத்திலும் சீரணிப் படையினர், தமிழகத்தின் தளபதி கலைஞர் அவர்களுக்கு மரியாதை செலுத்த அணி வகுத்து நின்றனர்.

கலைமகள் திரையரங்கில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. பட்டாப் பெறவந்த ஏழைமக்கள், வட்டம் வாரியாக அமர்ந்திருந்தனர்.

சற்று நேரத்தில் முதலமைச்சர் வந்துவிட்டார்! மாலைகள் அவர் கழுத்திலே குவிந்தன! குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவ்வாறு நினைவு அலைகளுக்கிடையே நீந்திக் கொண்டிருந்த பொழுது "கழக அரசை அமைத்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் முதன் முதலாகப் பேசுகிற நேரத்தில், இந்த அரசு தீட்டும் திட்டங்கள் எதுவானாலும் ஏழை, எளிய, பின்தங்கிய, கிராம மக்களின் நன்மையைக் கருதி—திட்டத்தின் பயன்கள் அவர்களுக்குச் சென்றடையும் விதத்தில் திட்டங்கள் தீட்டப்படும் என்று கோடிட்டுக் காட்டினார்" என்று முதலமைச்சர் அவர்கள் தமக்கே உரிய, வெண்கலக் குரலில், குறிப்பிட்டது என் காதில் விழுந்தது! நினைவு அலைகளிலிருந்து விடுபட்டேன்! முதலமைச்சரின் பேச்சை எழுதுவதற்கு ஆயத்தமானேன். அவர் பேசினார். உணர்ச்சி மயமான அவர் பேச்சைக் கேட்கும் உள்ளக்



களிப்போடு குறித்துக் கொண் டேன். அந்தக் குறிப்புகள் இதோ!

'ஏழை எளியவர்களை வாழ வைக்கும் திட்டங்களைச் செயல் படுத்தும் விதத்தில் அண்ணு அவர்கள் தனது பணியைத் தொடங்கினுர். அவரே அவற்றை முடித்து வைப்பார் என்று எதிர் பார்த்தோம். ஆனுல், இயற்கை செய்த சதி அவரை நம்மிட மிருந்து பிரித்து விட்டது. அவரது சிந்தனையோட்டத்தைப் பல ஆண்டுகளாக அறிந்து அன்புத் தம்பிகளாகிய நாங்கள், தொடர்ந்து அவர் வழியில் சென்று, ஏழைஎளிய மக்களாகிய உங்களுக்காகப் பணியாற்றி வரு கிறேம். அந்த வகையில் தான் வீட்டுமனை நிலப்பட்டாக்களை ஏழைகளுக்கு வழங்கி வருகிறேம்.

இந்தியா சுதந்திரம் அடைந்த 22 ஆண்டுக் காலமாக இப்படிப் பட்டது கிடைக்கும் என்று எண்ணிய ஏழை மக்களுக்கு மிஞ்சியது ஏமாற்றம் தான்! கிராமத்துப் பாமர மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் நாங்கள் பணியாற்றி வருகிறேம். எங்களது ஆட்சியில், தங்களது வாழ்வில் புதிய ஒளி ஏற்படும் என்று ஏழை மக்களுக்கு நம் பிக்கை ஏற்பட்டு இருக்கிறது.

குடிசை வாழ் மக்களின் அன்பைப் பெற்றுத்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். நீங்கள் விவசாயிகள்—கள்ளங்கபட மற்ற வர்கள்—பால்போன்ற உள்ளம் படைத்தவர்கள்! வெகுளித்தன



மான இயல்பு படைத்தவர்கள்! முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் இந்தக் காரணங்களாலேயே உங்களை அலட்சியப் படுத்தி வைத்தார்கள்! இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் இந்தக் காரணங்கள் பற்றியே உங்களை விரும்புகிறுர்கள்!

நாட்டின் நாடி நரம்புகளாகிய உங்கள் நெஞ்சம் நெகிழாமல் இருந்தால்தான், ஏழை எளிய மக்களின் வாழ்வு குளிர்ந்தால் தான், நாடு நலம் பெறும் என்பதை அறிந்து நாங்கள் திட்டங்களைத் தீட்டி வருகிறேம். நல்லரசு நிலைத்தால்தான் ஏழை களுக்கு வசதி ஏற்படும்.

'1960-ஆம் ஆண்டு முதல் 1966-ஆம் ஆண்டு வரை கோவை மாவட்டத்தில் 3,117 பேருக்குத் தான் நிலஒப்படை செய்யப்பட்டு இருந்தது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நாலரைஆண்டுக் காலத்தில்கோவைமாவட்டத்தில் 8,471 பேர்களுக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது' என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரி வித்துக் கொள்கின்றேன்.

ஏழு ஆண்டுகளில் 9,981 ஏக்கர் நிலத்தைக் கடந்த ஆட்சி, வீட்டு மனைக்காக ஒப்படை செய்தது.

இந்த நாலரை ஆண்டுக் காலத்தில் 22,776 ஏக்கர் நிலம், ஏழை மக்களுக்கு, வீட்டு மனை களுக்காக, வழங்கப்பட்டு இருக் கிறது.

1960 முதல் 1967 வரை, வீட்டு மனைப் பட்டா பெற்ற மக்களின் எண்ணிக்கை 8,578

நாலரை ஆண்டு ஆட்சியில் 46,595 பேருக்கு நாங்கள் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி இருக்கிறேம்.

அடுத்து, கூட்டுப் பட்டாப் பிரச்சினை! கோவை மாவட்டத் தில் முன்பிருந்த ஆட்சியாளர் களால் 13,000 பேருக்கு மட்டுமே பட்டாப் பிரச்சினை தீர்க்கப் பட்டது.

இந்த நாலரை ஆண்டுக் காலத்தில் 65,000 பேர்களுக்குப் பட்டாப் பிரச்சினை தீர்க்கப் பட்டுள்ளது.

## 1972 க்குள் மின் வசதி

மின்சார வசதி 1933 முதல் 1966வரை 33ஆண்டுக் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் 25 சதவிகித கிராமங்களுக்குத்தான் தரப் பட்டிருக்கிறது. 1972-க்குள் எஞ்சியுள்ள 75 சதவிகித கிராமங் களிலும் மின்வசதி செய்துதரப் படவிருக்கிறது. 1972-க்குள் தமிழ்நாடு முழுவதிலும் மின் சார வசதி இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லும் அளவுக் குத் திட்டங்கள் தீட்டிச் செயல் படுத்தி வருகிறேம்.



## குடிநீர் வசதி

சுதந்திரம் அடைந்த 22 ஆண்டுகளில் எல்லாக் கிராமங்களிலும் குடிதண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்த்து வைத்து இருக்க முடியும். ஆனால், அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தயக்கம் காட்டி வந்து இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டுக் குடிதண்ணீர் வசதி அளிக்கப் பலகோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி (Protected water supply) அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## இணைப்புச் சாலை வசதி

கிராமப்புறங்களில் ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன் இறந்துவிட்டால் அவனது பிணத்தைப் புதைக்க இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லவும் வழியில்லை. வயல் வரப்புகளின் வழியாகத் தூக்கிச் செல்லும் இழிநிலையைப் பார்க்கிறோம். இந்த நிலையினைப்போக்கக் கிராம இணைப்புச் சாலைகளை (Link roads) அதிகமாக்கத் தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

## வேலை வாய்ப்பு

விவசாயம் செய்யும் நேரம் போக மிச்சமுள்ள நேரத்தில், வேறு வேலைவாய்ப்புகளில் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழகம் முழுவதும் 30,000 பேருக்குவேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்ற இனிமையான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்படி ஏராளமான திட்டங்கள் கிராமங்களுக்கு—கிராம மக்களுக்கு—இன்றைய ஆட்சியில் போடப்பட்டிருக்கிறது.

## இரண்டே போதும்

திட்டங்கள் போடுகின்ற அதே நேரத்தில் மக்கள் தொகையும்




கூடுகிறது! கூடுகிறது என்பது கூடச் சரியல்ல; மக்கள் பெருக்கம் அதிகமாகிறது!

மூன்றும் ஐந்தும் எட்டு என்று கணக்கிடுவதும், ஏழும் நான்கும் பதினொன்று என்று கணக்கிடுவதும் கூட்டல்!

ஆனால் ஏழு— நான்கு என்று கணக்கிட்டு, இருபத்தெட்டு என்றால் அது பெருக்கல்! இந்த விகிதத்தில்தான் மக்கள் தொகை பெருகிவருகிறது!

இந்தப் பெருக்கத்தை நிறுத்த வேண்டும். ஏதோ ஆண்டவன் தந்தான் என்று பிள்ளைகுட்டிகளைப் பெருக்கிக் கொண்டிருந்தால், அரசு போடும் திட்டங்களின் பயன் சரிவர மக்களுக்குப் போய்ச் சேராது.

ஒரு குடும்பத்தில் இரண்டு பிள்ளைகள் இருந்து 200 ரூபாய் வருமானம் என்ற அளவுக்குக் குடும்பம் இருந்தால், 100 ரூபாய் வீட்டுச் செலவுக்கும். 100 ரூபாயைக் குழந்தைகள் படிப்புக்கும் செலவிடலாம். ஆனால் 4 பிள்ளைகள் என்று குடும்பம் வளர்ந்தால், 25 ரூபாய்தான் ஒவ்வொரு குழந்தைக்கும் செலவிடக்கூடிய இக்கட்டான நிலை ஏற்படும். ஆகவே வீட்டுக்கும், நாட்டுக்கும் ஏற்படும் சங்கடத்தைத்தவிர்த்துக் குடும்பத்தைக் கட்டுப்பாட்டோடு வைத்துக்கொள்வதுதான் சாலச் சிறந்ததாகும். இரண்டு குழந்தைகள் போதும் என்ற முடிவைக் கிராம மக்கள் எடுக்க வேண்டும்.

தமிழக அரசின் நல்ல திட்டங்களை ஏழை எளியமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசு எடுக்கும் நல்ல காரியங்களுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்" என்று கூறி முதலமைச்சர் தன் உரையை முடித்துக் கொண்டார்.

கூடியிருந்த மக்கள் கூட்டம் எழுப்பிய கையொலி, அரசுக்கு உறுதுணையாக இருப்போம் என உறுதியளிப்பதுபோல் இருந்தது! திருவிழா ஒன்றிற்குக் குதூகலமாகச் சென்று வந்ததைப்போல் மக்கள் கலைந்து சென்றனர்!

அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டுவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்கு விரைந்து சென்றோம். வழிநெடுகிலும் ஏழைஎளியமக்கள் திரண்டு நின்று முதலமைச்சருக்கு வாழ்த்துக் கூறக் காத்து நின்றனர். அவர்களின் கனவுகளை நினைவாக்கும் கலைஞரை, கோவை மாவட்ட மக்கள் இதுவரை இல்லாத அளவுக்கு வாழ்த்தி வணங்கினர். ஏழைகள் வாழ்வும் வளம் பெறுகிறது என்பதற்கு இதைவிடச் சான்று வேறென்ன வேண்டும்!


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,

தமிழரசு அலுவலகம்,

அரசினர் தோட்டம்,

சென்னை- 2

# செய்திகள்

திருடனைக் காட்டிக் கொடுக்கும் புதிய கருவி ஒன்று குளோப் நிறுவனத்தின் சார்பில் அண்மையில் சென்னையில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கருவி ''குளோப் டிடெக்டிவ் ஏஜன்சி பிரைவேட் லிமிடெட்'' என்னும் தனியார் நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் பிரேம் குமாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

மிக மலிவான, அழகான அதன் விலை ரூ. 350. இதிலே சிறியதும் இருக்கிறது. இதைத் தொழிற்சாலைகளில் மட்டுமின்றி, வீடுகளிலும் வைக்கலாம். கதவு, சாளரம் இவற்றை யாராவது திறந்தால் இந்தக் கருவி உடனே சத்தம் எழுப்பிக் காட்டிக் கொடுத்துவிடும்.

* * *

தமிழ்நாட்டின் சிறந்த ஆசிரியர் என்ற பெயரைப் பெல்ஜியம் நாட்டுப் பெண்மணி ஒருவர் பெற்றுள்ளார்! அவருடைய பெயர் ' லிண்ட்ரிடா.'

நாகர்கோவிலுள்ள புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளிக் கூடத்தில் 1963–ஆம் ஆண்டிலிருந்து தலைமைஆசிரியையாகப் பணியாற்றி வரும் 'லிண்ட்ரிடா' அவர்களுக்கு 8–10–1971 அன்று, தமிழ்நாடு அரசின் சார்பில் பரிசு வழங்கப்பட்டது.

இந்தியாவுக்கு 1954–ஆம் ஆண்டில் வந்த ' லிண்ட்ரிடா ' அவர்கள், அதுமுதல் 1963-ஆம் ஆண்டு வரை திருவில்லிப்புத்தூரில் உள்ள புனித சூசையப்பர் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியையாகப் பணியாற்றியுள்ளார்.

* * *

புது டில்லியிலுள்ள இந்தியக் கூட்டுறவுக் கழகம், மாநிலங்களிலுள்ள மாநிலக் கூட்டுறவுக் கழகங்கள், வேறு சில மாநிலக் கூட்டுறவு நிறுவனங்கள், சில மத்திய வங்கிகள், மாவட்டக் கூட்டுறவுக் கழகங்கள் ஆகியன, கூட்டுறவு இயக்கச் சம்பந்தமாகக் கிழமை

# செய்திகள்

வெளியீடுகள், திங்கள் வெளியீடுகள், இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியீடுகள், எனச் சுமார் 1,000 கூட்டுறவு இயக்கச் சம்பந்தமான பத்திரிகைகளை வெளியிடுகின்றன. அனைத்திந்தியாவிலும் உள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பல்வேறு பத்திரிகைகளில், கூட்டுறவுப் பத்திரிகைகள் மட்டும் 10 சதமாகத் திகழ்கின்றன.

* * *

1972, சனவரி, பிப்ரவரி திங்கள்களில் புது டெல்லியில் உலகப் புத்தகச் சந்தை நடைபெற இருக்கிறது. 1972–ஆம் ஆண்டினை அனைத்துலகப் புத்தக ஆண்டாகக் கொண்டாட வேண்டுமென்று 'யுனெஸ்கோ' முடிவு செய்திருக்கிறது.

* * *

சோவியத் நிபுணர்கள் அனுப்பிய லூனுகோட் என்ற ' ஜீப் ' கார் 1970-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் நிலவில் இறங்கியது. ஆள் இல்லாத அந்தக் காரை, பூமியில் இருந்தபடியே சோவியத் நிபுணர்கள் இயக்கி வைத்தார்கள்.

அந்தக் கார் நிலாத் தரையில் ஓடி, பல ஆராய்ச்சிகளை நடத்தியது. அந்தக் காருக்குத் தேவையான மின்சாரம் சூரிய வெளிச்சத்திலிருந்து கிடைத்துவந்தது.

நிலவில் பகற் காலமான 14 நாட்களில் மட்டும் அந்தக் கார் ஓடிக்கொண்டிருந்தது. இரவுக் காலமான 14 நாட்களில் அந்தக் கார் ஓடாமல் நின்றுவிட்டது. அதற்குக் காரணம், சூரிய வெளிச்சம் இல்லாததால் மின்சாரம் கிடைக்காமலிருந்ததே யாகும்.

கடந்த ஓராண்டுக் காலமாக அந்த ' ஜீப் ' கார் மொத்தம் 6½ மைல் தூரம் ஓடி, ஆராய்ச்சி செய்து, ஏறத்தாழ 20,000 படங்களைப் பூமிக்கு அனுப்பியுள்ளது.

இனிமேல் அந்த ' ஜீப் ' கார் ஓடாது! பரிசோதனையும் செய்யாது! ஏனெனில், நிலா ஜீப் காரின் உட் பகுதியை எப்பொழுதும் சூடாக வைத்திருக்கும் கருவி தற்பொழுது ஆற்றல் இழந்து விட்டது.

# செய்திகள்

நிலாத் தரையில், முதன் முதலில் ஆள் இல்லாமல் ஓடி, சாதனை புரிந்த அந்த ' ஜீப், கார் நிபுணர்கள் எதிர் பார்த்ததைவிட அதிக நாட்கள் வேலை செய்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

* * *

பிரான்சு நாட்டில் ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளர் ஏழாண்டுகளாக ஒரு குகையில் ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார். ஆராய்ச்சியின்போது ஒரு மண்டை ஓடு கிடைத்திருக்கிறது. அந்த மண்டை ஓடு 2 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதனின் மண்டை ஓடு என்று கருதப்படுகிறது. கல்லில் செய்யப்பட்ட 1 இலட்சம் ஆயுதங்களும் அந்தக் குகையில் கிடைத்துள்ளன.

* * *

அமைதிக்குப் பாடுபட்டதற்காக, இந்த ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த வில்லி பிராண்ட் என்பவருக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. இதுவரை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த நான்கு பேர்களுக்கு அமைதிக்குரிய நோபல் பரிசு கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

* * *

உலகத்தில் மிக அதிகமாக சைக்கிள் தயாரிக்கும் நாடுகளில் இந்தியா ஐந்தாவது இடம் வகிக்கிறது. இங்கே ஆண்டுக்கு மொத்தம் 19 இலட்சம் சைக்கிள்கள் உற்பத்தி ஆகின்றன. சோவியத் யூனியன், அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளில்தான் இந்தியாவை விட அதிகமாக சைக்கிள்கள் செய்கிறார்கள்.

இந்தியாவில் 1965-ஆம் ஆண்டு உற்பத்தி 37,000 சைக்கிள்கள்தான். 1969–70-ல் மொத்தம்1,32,911 சைக்கிள்கள் ஏற்றுமதி செய்து, ரூ. 1·56 கோடி வருமானத்தை ஈட்டியது.

* * *

# விவசாயத்திற்கும், வீட்டிற்கும் கிராமகுடிநீர்த்திட்டங்களுக்கும்

## பலவித ஈசன் பம்புகள்




## ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிட்

6-7 செகண்ட் லேன் பீச், சென்னை-1. தந்தி: EASUN போன்: 2934



# சிலம்பு விளம்பும் தமிழக ஒருமைப்பாடு!

சிலப்பதிகாரம் ஒரு வரலாற்றுக் காப்பியம். இது கண்ணகி, கோவலன் வரலாற்றைக் காப்பியச் சுவை கூட்டிக் காட்டும் நூல். கண்ணகியது கால் அணிகலனும் சிலம்பு, இவ்வரலாற்றில் சுக்கானாக அமைந்தது. இச்சிலம்புபற்றிய நிகழ்ச்சி மேம்பட்டு- அதிகாரப்பட்டு—வரலாற்று முனையை இட்டுச்செல்வதால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. இது கட்டுக் கோப்பான நூலமைப்பில் அமைந்தது. ஆற்றொழுக்கான நிகழ்ச்சி ஒட்டத்தை உடையது.

கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நிகழ்ந்து, தனிமனை வாழ்வு தொடங்கியது முதல், அவர்கள் இருவரும் மதுரைப் பயணத்தை மேற்கொண்டு கவுந்தியடிகள் துணையுடன் சோழநாட்டின் வளங்களைக் கண்டவாறே உறையூரை அடையும் வரையுள்ள நிகழ்ச்சிகள் சோழநாட்டில் நிகழ்ந்தவை. இவை பத்துக் காதைகளாய் உள்ளன. காதை என்பதற்குச் செய்யுள் என்பது பொருள். செய்யுளால் அமைந்த ஓர் உட்பகுதி என்னும் கருத்தில் இங்கு அமைந்துள்ளது. பத்துக் காதைகளும் ஒரு காண்டமாய்ச் சோழ நாட்டின் தலைநகராம் புகார் நகரின் பெயர் பெற்றுப் புகார்க்காண்டம் என அமைந்துள்ளது.

வரலாறு பயணத்தோடு தொடர்கிறது.

பயணத்தை உறையூரினின்றும் மேற்கொண்டது முதல் கண்ணகி மதுரையின் மேற்கெல்லையில் உள்ள கொற்றவை முன்னர்த்தன் பொற்றொடியைத் தகர்த்து, வையையாற்றின் கரைவழியே நெடுவேள்குன்றத்தில் அடிவைத்தேறி, 14 நாட்கள் அவலத்தோடு நின்று, கோவலன் காட்சி கண்டு மறைந்தது வரையுள்ள நிகழ்ச்சிகள் பாண்டிய நாட்டில் நிகழ்ந்தவை. இவை பதின்மூன்று காதைகளாய் உள்ளன. பதின்மூன்று காதைகளும் ஒரு காண்டமாய்ப் பாண்டிய நாட்டின் தலை நகரமாம் மதுரை நகரின் பெயர்பெற்று மதுரைக் காண்டம் என அமைந்துள்ளது.

**கோவை இளஞ்சேரன்**

மேலும் வரலாறு அமைகிறது.

கண்ணகி குன்றின்மேல் நின்று மறைந்ததைக் கண்ட குன்றத்துக் குறவர்கள் குரவையாடிப் போற்றியது முதல், கண்ணகிக்குச் செங்குட்டுவன் கோட்டம் அமைத்துக் கண்ணகியிடம் வரம்பெற்றது வரை நிகழ்ந்த நிகழ்ச்சிகள் சேரநாட்டில் நிகழ்ந்தவை. இவை ஏழு காதைகளாய் உள்ளன. இவை ஒரு காண்டமாகிச் சேர நாட்டின் தலை நகரமாம் வஞ்சி நகரின் பெயர்பெற்று வஞ்சிக் காண்டம் என அமைந்துள்ளது.

இவ்வமைப்பில் சிலம்பு மூன்று காண்டங்களில் முப்பது காதைகளாய் விரிந்து ஒலிக்கிறது. இம்முப்பதும் வேறு பல முப்பது ஒலிகளாய் ஒலிக்கின்றமையும் ஒரு அமைப்பாகிறது.

தமிழ் மூன்று (இயல், இசை, கூத்து). மூன்று நாடு (சோழ, பாண்டிய, சேரநாடு). மூன்று நகர்

(புகாரி, மதுரை, வஞ்சி). மூன்று ஆறு (காவிரி, வையை, பேரியாறு). மூன்று தலைமக்கள் (கண்ணகி, கோவலன், மாதவி). மூன்று மன்னர் (சோழர், பாண்டியர், சேரர்). மூன்று இலாஞ்சனை (புலி, மீன், வில்). மூன்று மலர் (ஆத்தி, வேம்பு, பனை). மூன்று சமயம் (சமணம், சைவம், வைணவம்). மூன்று கருத்து (கற்பு, செங்கோல், ஊழ்). இவ்வாறு உள்ளொளிகள் மூன்று மூன்றாய் முப்பதாகி நூலெங்கும் பரவலாய் ஒலித்து நெஞ்சை அள்ளுகின்றது.

தமிழகம் முற்காலத்தில் சோழநாடு, பாண்டியநாடு, சேர நாடு எனப் பிரிந்திருந்தது. இவ்வரலாறு இயல்பாகவே அம் முப்பெருநாடுகளிலும் நிகழ்ந்தது. இவ்வியல்புக்கு ஏற்பவே இந்நூல் மூன்று பெரும் பகுப்புகளாக—காண்டங்களாக—அமைக்கப் பட்டுள்ளது. இவ்வமைப்பு நூல் அமைப்புக்குரிய நிறைவுகளில் ஒன்றுகிறது.

இவ்வமைப்பையே வேறு ஒரு வகையில் குறையாக நோட்டமிடலாம்.

'தமிழ் மன்னர் தமக்குள் பகைத்துப் பிரிந்து நின்றவர் ஆவாரே; தமிழர்க்குள் பிரிந்த அப்பகை நிலையை நினைப்பூட்டும் வகையில் இந்த மூவகைப் பகுப்பு நிற்கிறதே! மன்னர்தாம் தனித்தனியே பிரிந்து நின்றார்களே; நூலிலும் அப்பிரிவோ வேண்டும்? நூல் அமைப்புக்கு இப்பிரிவு பாங்கானாலும், கருத்து நோட்டத்தில் தீங்காகிறதே'—என்னும் கருத்துத் தோன்றலாம்.

இக்கருத்தோடு நூலில் நுழைந்து நோக்கினால் இதற்கு மாறுபட்ட முடிவே முடிசூடித் தோன்றும்.

நூலாசிரியர் இளங்கோவடிகளாரது நோக்கங்களில் ஒன்று முடிமன்னர் மூவரையும், மூன்று நாட்டையும் தம் நூலிலாவது ஒன்றுபடுத்தித் தமிழகத்து ஒருமைப்பாட்டைக் காணவேண்டும்—காட்டவேண்டும் என்பது. இதனை வாய்ப்பில் காட்டியும், அமைப்பில் நாட்டியும் நிறைவேற்றுகின்றார்.

நூலில் வாய்ப்பு என்பது, ஆசிரியன் தன் உட்கிடக்கையைத் தனியாகத் தலைப்பிட்டுக் கருத்து விளக்கமாகக் கூறுவது அன்று. வரலாற்று ஓட்டத்தில் தன் கருத்தைத் குறிப்பதற்கு ஓரளவேனும் பொருந்தும் இடத்தில் புகுந்துகொண்டு கூறுவது.

இளங்கோவடிகள் பல முனையான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு பிளவுபட்டுக் கிடந்த மன்னரையும், நாட்டையும் ஒன்றித்துக் கண்டு தமிழ்நாட்டு ஒருமைப் பாட்டை உருவாக்கிக் காட்டினார்.

வேனிற் காதையைத் தொடங்குகின்றார். இளவேனிற் பருவத்தில் மாரவேள் (மன்மதன்) ஆட்சியை வண்ணிக்கிறார். அப்பருவத்தில் மாரவேள் மூன்று நாடுகளிலும் கொட்டம் போடுகின்றான். இங்குக் குறிக்கப்பட வேண்டியது சோழ நாடு ஒன்றே. எனினும், பரந்த மனப்பாங்கை முன்வைத்து வடவேங்கடம், தென்குமரிக்கடல் எல்லைக்குட்பட்ட தமிழகம் என்று தொடங்குகின்றார்

"நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும்

தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு"

—என்று முழுமைத் தமிழகத்தைக் கூறி அத் தமிழகத்திற் சிறந்த,

"மாட மதுரையும், பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும், ஒலிபுனற் புகாரும்
(மாரவேள்) அரைசு வீற்றிருந்து"—என

நான்கு நகரங்களைக் குறிக்கிறார். மூன்று நாட்டுப் பிரிவைக் காட்டுதல் அவருக்கு எண்ணமாக இருக்குமானால், மூன்று தலை நகரங்களை மட்டும் குறித்திருக்க வேண்டும். நான்கு நகரங்களைக் குறித்துள்ளதை நோக்கின் நாட்டுப் பிரிவைக் காட்டுதல் அவரது நாட்டம் அன்று என்பது விளங்கும்.

கட்டுரைக்காதையில் மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் பாண்டியரது சிறப்பைச் செப்பிச் செல்கிறது. ஒரு கதை சொல்கிறது. அதை ஒரு வாய்ப்பாக்கினார் அடிகளார்.

'சோழநாட்டுப் பராசரன் என்பான், சேரநாட்டில் அறக்கொடை பெற்று, அதைப் பாண்டிய நாட்டில் வழங்கினான்'

—என ஓர் இரவலன் கதைவழியே தமிழகத்தை ஒருமைப்படுத்திக் காட்டுகிறார்.

இடைக்குல மடந்தை மாதரி பாண்டியனது அரண்மனையில் எழுந்த காலை முரசொலியைக் கேட்கிறாள். தனக்கு அன்று அரண்மனைக்கு நெய் படைக்கும் முறை எனத் தன்மகள் ஐயையிடம் சொல்கிறாள். தன் மன்னனும் பாண்டிய மன்னனது இமய வெற்றியைக் குறித்து வாழ்த்தத் தொடங்குகின்றாள். இங்கே இளங்கோவடிகள் மற்றிரு மன்னர்களது இமய வெற்றியையும் கூட்டிப் பேச வைக்கிறார்.





"கயல் எழுதிய இமய நெற்றியில்
அயல் எழுதிய புலியும் வில்லும்"—என்கிறாள் மாதரி. இவள் கூற்றில் கயல் முதற்கண் சிறப்பாய் அமைந்து புலியும் வில்லும் அதற்கு அயலாய் அமைந்துள்ளனவே என்று எண்ணலாம். அரசன் தொடர்பில் குடிமக்களோ அரசு அலுவலரோ பேசினால் அரசனை வாழ்த்திவிட்டுப் பேச்சைத் துவங்குதல் அக்கால மரபு. அம்மரபுப்படி பாண்டியன் ஒருவனே வாழ்த்தப்பட வேண்டிய முறையினன். அதனால், அவனை முற்கூறவைத்துப் பின்இரண்டு இலாஞ்சனைகளையும் இணைத்தார்.

இவ்வாறு ஒன்றோடு இரண்டை இணைக்காமல் மூன்று இலாஞ்சனைகளையும் ஒரு சேரக் கூறும் வாய்ப்பைப் பகைவன் பேச்சில் வைப்பது ஒரு திறம் எனலாம்.

வடவாரிய அரசராம், கனக விசயர் பேசியதைக் குறிக்கும் இடம்: "இமய நெற்றியில் விளங்கு வில், புலி, கயல் பொறித்த நாள் எம் போலும் முடிமன்னர் சங்கில்லைப் போலும்" என்பது பகைவர் பேச்சு. அவர் வாயில் மூன்றும் ஒருங்கு இணைந்துவரச் செய்கிறார். இவ்வாறு செய்தவர் பகைவரைத் தாக்க எழும் பேச்சிலும் ஒன்றிப்பை வைக்கிறார்:

கல் கொணரச் சேரன் செங்குட்டுவன் வடநாடு செல்ல விரும்புகின்றான். வில்லவன் கோதை என்னும் அமைச்சன் இதனை ஓலைவழி வடநாட்டு மன்னர்க்கு அறிவிக்கச் சொல்கிறான். இவன் உள்ளத்தில் தென்னாட்டாரது பிளவு—பகைப்பு தோன்றுகிறது. சேரனிடம் சொல்கிறான் :

"நும்போலும் வேந்தர் நும்மொடு இகலிக்
கொங்கர் செங்களத்துக் கொடுவரிக்
கயற்கொடி
பகைப்புறத்துத் தந்தனர் ஆயினும்"

—என மற்றிரு தமிழ் மன்னரது தோல்வியைக் குறித்தவன் வடபுலத்தாரை எண்ணி ஒருமைப்பாட்டில் முடிக்கிறான்:

"வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி
மண்டலை யேற்ற வரைக"

—என வடவர்க்கு அனுப்பும் ஓலையில் முத்திரையாக மூன்று இலாஞ்சனைகளையும் பொறிக்கச் சொல்கிறான். இவ்வாறு இவனைச் சொல்லவைத்து இளங்கோவடிகளார் தமிழக ஒருமைப்பாட்டைக் காட்டினார்.

அடுத்து ஒன்று.

கண்ணகி மறைந்த நெடுவேள் குன்றத்து வேங்கைக் கானலில் கண்ணகி கோவிலாம் "மங்கல மடந்தைக் கோட்டம்" உருவாகியுள்ளது. அங்கு நடு கல்லாய் நாட்டக் கண்ணகிச் சிலையைச் சேரன் செங்குட்டுவன் உரியாருடன் கொண்டு செல்கிறான். இவ்விடத்தில் கண்ணகியின் பெருமையைப் பேச முனைகிறார் இளங்கோவடிகளார். இமயத்தில் கல்லெடுத்துச் சிலை செய்த சேரன் இவ்விடத்தில் பாராட்டப்பட உரியவன். அவ்வெண்ணத்தை முந்திக்கொண்டு மூவேந்தரையும் ஒன்றுபடுத்திக் காட்டும் நோக்கம் முனைகின்றது. இந்நோக்கத்தைத் திறமையாகக் கொண்டு செலுத்துகின்றார்:

'செங்கோல் ஆட்சி யின்றேல் பெண்டிரது கற்பு சிறக்காது. இது பண்டையோர் நல்லுரை. கண்ணகி தன் கற்புத் திறத்தை வெளிப்படுத்தியதால் சோழனுக்குச் செங்கோல் ஆட்சிப் பெருமையை அளித்தவள் ஆனாள்'.

'கண்ணகியது வழக்குரையின் வெற்றியால் பாண்டியன் உயிர் துறந்த வகையில் செங்கோல் கெடின் உயிர் வாழார் பாண்டியர் எனப் பாண்டியனுக்குச் செங்கோல் ஆட்சிப் பெருமையை அளித்தவள் ஆனாள்.'

'சிலைக்குரிய கல்லாய்க் கண்ணகி கனக விசயர் தலைமேல் வந்தாள். இமயக் கல்லைக் கொணர்வேன் என்று வஞ்சினம் கூறிய சேரன் அதில் தவறாதவன் எனக் கல்சுமந்த பகைவரையே அறியச் செய்தவள் ஆனாள்.'

இவ்வாறு கண்ணகிச் சிலையை வாய்ப்பாக்கி முரண்பட்ட மூவரையும் அரண்கட்டி ஓரிடத்தே அமைத்தார்.

இவ்வொற்றுமைப் பாடலின் அடிகள் இவை:

"அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர் கற்புச் சிறவா
தெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ்
நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாதலின்
ஆர்புனை சென்னி அரசர்க் களித்துச்
செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலங் காவல் மன்னவர்க் களித்து
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின் மன்னர் அறியக்
குடதிசை வாழுங் கொற்றவர்க் களித்துச்"

சிலையான நங்கை என்கிறார். கண்ணகியின் வாய்ப்பில் இவ்வாறு ஒன்று சேர்ப்பினும், மூவர் பெயரையும் தனித்தனியே குறிக்க நேர்ந்தது. இவ்வாறு தனித்தனியன்றி ஒன்றாகவே குறிக்க ஒரு வாய்ப்பில் புகுந்தார் அடிகளார்.

அது ஒரு பெண் ஒப்பாரி தொடங்கும் இடம். அப்பெண் கண்ணகியின் தோழி தேவந்தி என்பாள். இவள் கண்ணகி கோட்டத்திற்கு வந்து கண்ணகி முன் நின்று ஓல மிடுகின்றாள். ஒற்றுமைக் கருத்தை வைக்க இவ்விடம் பெரிதும் இயைபுடையது அன்று. உள்நோக்கம் இவ்விடத்தையும் வாய்ப்பாக்கிக் கொண்டது. கண்ணகிச் சிலை இமயக்கல்லில் உருவான கருத்தை அமைத்துத் தேவந்தியை,

''முடிமன்னர் மூவரும் காத்தோம்பும் தெய்வ
வடபே ரிமய மலையிற் பிறந்து''

—என்று அரற்ற வைக்கிறார். இது ஒப்பாரி. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து புறப்படும் சொற்களைக் கொண்டது ஒப்பாரி.



அந்த ஒப்பாரியிலும், முட்டிக்கொண்டிருந்த மூவரையும் ஒட்டிக்கொண்டு இமயத்தைக் காக்க வைக்கிறார்.

இவ்வாறு இளங்கோவடிகளார்,
இயற்கை வண்ணனையை,
கதை ஓட்டத்தை,
வாழ்த்து மரபை,
பகைப் பேச்சை,
அறிவிப்புப் போக்கை,
கற்புத் திறத்தை,
ஓலமிடும் அவலத்தை
வாய்ப்பாகக் கொண்டு,

நகர்களை ஒன்றித்தார்;
மூன்று நாடுகளை இணைத்தார்;
இலாஞ்சனைகளை ஒருசேரப் பொறித்தார்;
மன்னர்களை ஒருமைப்படுத்தினார்,

இவை நமக்கு வாய்ப்பில் காட்டப்பட்ட தமிழக ஒருமைப்பாடு.

அடுத்து,

நூல் அமைப்பில் இளங்கோவடிகள் எவ்வாறு ஒருமைப்பாட்டை நாட்டியுள்ளார்?

நூலில் அமைப்பு என்பதைப் பெரும் பகுப்புகள், உட்பிரிவுகள், அவற்றின் விரிகள் ஒரு முறைப்படத் திட்டமிடப்பட்டு அமைத்தல் எனலாம். இதனை இலக்கண நூல்,

''நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு
—என உவமை.

காட்டி விளக்கும். இதற்கேற்பச் சிலப்பதிகாரம் எந்த அமைப்பில் நடக்கிறது என்பதைக் காணலாம்.

நூலின் முன்னுரையாகப் பதிகம் என்னும் பகுதி அமைந்துள்ளது. நூல் முன் காட்டப்பட்டவாறு மூன்று காண்டங்களில் முப்பது காதைகளாய் அமைந்துள்ளது. ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் கட்டுரை என்று ஒவ்வொரு அகவற்பா அமைந்துள்ளது. இவை அவ்வக்காண்டத்தின் உள்ளீடான கருத்தைச் சுருக்கித் தருபவை. இதுபோன்றே நூலின் இறுதியில் நூற்கட்டுரை ஒன்று அகவற்பாவில் உள்ளது. இது நூற்கருத்தைக் குறிப்பது.

இவையன்றிக் காதையின் உள்ளீடான கருத்தைக் கூறும் வெண்பா ஒன்றோ, இரண்டோ, மூன்றோ ஒவ்வொரு காதையின் இறுதியிலும் அமைந்தமை தெரிகின்றது. இவ்வமைப்பு பத்துக் காதைகளில் ஒவ்வொரு வெண்பாவும், வேனிற் காதையில் இரண்டும், வழக்குரை காதையில் மூன்றுமாக உள்ளது. பிற காலப் போக்கில் காலமாயின போலும்.

இவ்வெண்பாக்களுக்கு அருஞ்சொல் உரையாசிரியரும், அடியார்க்குநல்லாரும் உரை எழுதியுள்ளனர். காணப்படாத வெண்பாக்களுக்கு இவர்களது உரைகளும் காணப்படாமையால் இவர்கள் காலத்திற்கு முன்னரே பிற வெண்பாக்கள் காணாமற்போயின என்று கொள்ளலாம். இவ் வெண்பாக்களின் நடையையும், சொல்வழக்கையும் கூர்ந்துநோக்கின் இவை நூல் எழுந்து அதற்குப் பதிகம் எழுந்த காலத்திற்குப் பின்னரும், இருபெரும் உரையாசிரியர்கள் காலத்திற்கு முன்னருமாகிய இடைக்காலம் ஒன்றில் எவராலோ எழுதிச் சேர்க்கப்பட்டவை என்பது புலனாகும்.

எனவே, சிதைந்துள்ள இவ்வெண்பா அமைப்பைக் கைவிட்டுப் பிற அமைப்புகள் கொண்டு எடுத்துக் கொண்ட ஒருமைப்பாட்டுக் கருத்தைக் காண நேர்கிறது.

ஒவ்வொரு காண்டமும் ஒவ்வொரு நாட்டு நிகழ்ச்சியைக் கொண்டது என்பதைக் கண்டோம். காண்டத்தின் இறுதியில் அமைந்த கட்டுரை அக்காண்டத்தை முடித்துவைத்துக் கடைகாப்புச் செய்வது. இக்கட்டுரை என்பது முதலில் அரசர் குலத்தைச் சுட்டிக் கூறித் தொடர்ந்து மூதூர், ஊர்நிகழ்ச்சி, ஆறு, இசை, கூத்து, காண்டக்கருத்து எனச் செல்கிறது. மூன்று காண்டத்துக் கட்டுரைகளும் இப்போக்கிலேயே மாற்றமின்றி அமைந்துள்ளன. ஒவ்வொன்றின் முடிவும்,

''ஒருபரிசா நோக்கிக் கிடந்த
புகார்க் காண்டம் முற்றிற்று''
''. . . . . . .ஒருபரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக் காண்டம் முற்றிற்று''
''. . . . . .ஒருபரிசா நோக்கிக்
கிடந்த வஞ்சிக் காண்டம் முற்றிற்று''

—என ஒரே முறையில் ஒரு வகைச் சொற்றொடரில் அமைக்கப்பட்டுள்ளது. இடையில் அமைந்த கருத்துக்களும் ஏறத்தாழ ஒரே வகையான சொற்றொடர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிலாவது சில சொல் மாற்றங்களைக் காண முடிகிறது. தொடக்கமோ, ஏமாற்றம் இல்லாத ஒத்த சொற்றொடராக இளங்கோவடிகளின் உள்ளக் கிடக்கையை வெளியிடுகின்றது.

சோழ நாட்டின் காண்டமாம் புகார்க் காண்டக் கட்டுரை சோழரையும், சோழ நாட்டையும் குறிப்பதாக அமைவதாயினும், அதனைத் தொடங்கும் இளங்கோவடிகள் சோழகுலத்தைத் தனித்து மொழியாமல்,

''முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழகுலத்
துதித்தோர்''

—என மூவரையும் ஒன்றுபடுத்தி ஒருமை காட்டி அவருள் ஒருவரைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இது போன்றே,
''முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டிய
[குலத்தோர்''

என மதுரைக் காண்டத்தும்,

''முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
குடதிசை யாளும் கொற்றங் கொண்டு
ஆர மார்பிற் சேரகுலத் துதித்தோர்''

—என வஞ்சிக் காண்டத்தும் ஒருங்கு கூறிச் சுட்டுகின்றார். ''முடிகெழு வேந்தர் மூவர்'' என மீண்டும் மீண்டும், கூறிக் கூறி மகிழ்ந்தார் போலும்.

காண்டக் கட்டுரைகளில் தமிழக மன்னர்களது ஒருமைப்பாட்டைக் குறித்தவர் நூற் கட்டுரையில் தமிழ்நாட்டு ஒருமைப்பாட்டை நாட்ட எண்ணினார். தமிழ் நாட்டின் சுற்றெல்லை கூறி ஒருமைப்பாட்டிற்கு வேலி கோலுகின்றார்:

''குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி மருங்கில் தண்டமிழ் வரைப்பு''

—என்பது நூற்கட்டுரையின் தொடக்கம். நான்கு எல்லையிலும் தெற்கெல்லையை முதற்கண் அமைத்து ஒரு புதுமையையும் சிறப்பையும் கூட்டினார். நூலின் முடிவுரையாய் அமைந்த இந்த நூற் கட்டுரையில் தமிழக ஒருமைப்பாடு எவ்வகைப் பிரிவும் இன்றி நாட்டப்பட்டுள்ளது.

நூலுக்குள்ளும் மேலும் ஓர் அமைப்பால் இளங்கோவடிகள் தம் உட்கிடக்கையை நாட்டியுள்ளார்.

வாழ்த்துக் காதை,
தேவந்தி. காவற்பெண்டு, அடித்தோழி
ஆகியோரது பேச்சு, அரற்று,
செங்குட்டுவன் வியப்பு,
கண்ணகியாரது தெய்வநிலைப் பேச்சு,
வஞ்சிமகளிர் விளி,
வஞ்சிமகளிர் மன்னரை வாழ்த்தல்,
அம்மனை வரி, கந்துக வரி,
ஊசல் வரி, வள்ளைப்பாட்டு.

—எனும் அமைப்புக்களை உடையது.

புகார்ப் பெண்களாகிய தேவந்தி முதலியோர் அரற்றி ஓலமிட்டனர்; செங்குட்டுவன் வியந்து பேசினான்; கண்ணகியார் ஒலி தந்தார். வஞ்சிமகளிர் வம்மின் என்று அழைத்தனர். இவற்றின் பின்னர் அமைந்த அமைப்புக்களே இங்கே கொள்ளத் தக்கவை.

வஞ்சிமகளிர் கண்ணகியாரைப் போற்றி அவள் தொடர்பில் தமிழகத்து மும்மன்னர்களை வாழ்த்திப் பாடுகின்றனர். அப்பாடல்கள் பலவகை மகளிர் விளையாட்டுகளுக்கேற்பப் பாடப்படும் வரிப்பாடல்கள். பாடி விளையாடத் தொடங்குமுன் பொதுவில் வாழ்த்திப்



பாடுகின்றனர். இத்தொடக்கத்தில் இளங்கோவடிகளார் மும்முடி மன்னரையும் பாட வைக்கிறார் ; பாடுகின்றனர்;

''வாழியரோ வாழி, வருபுனல்நீர் வையை
சூழும் மதுரையார் கோமான்றன் தொல்
[குலமே''
''வாழியரோ வாழி வருபுனல்நீர்
[ஆன்பொருனை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன்
[தொல்குலமே''
''காவிரி நாடனைப் பாடுதும்
பூவிரி கூந்தற் புகார்''

—இவ்வாறு ஒரே அமைப்பில் மூவரையும் அடுத்தடுத்து அமைத்துப் பாடுகின்றனர்.

தொடர்ந்து அம்மனை வரி (அம்மனைக்காய்கள் மூன்று அல்லது நான்கை இரு கைகளிலுமாகக் கொண்டு மூன்று பெண்கள் நின்று, எறிந்தும், பிடித்தும் ஆடும் ஆட்டத்தின்போது பாடப்படும் பாடல்), கந்துகவரி (பந்தாடிக் கொண்டு பாடப்படும் பாடல்), ஊசல் வரி (ஊஞ்சலை ஊக்கிக்கொண்டும் ஆடிக்கொண்டும்

பாடப்படும் பாடல்) ஆகியவற்றைப் பாடி விளையாடுகின்றனர்.

இவற்றுள், முதற்கண் அம்மனை வரிப்பாடலைச் சோழனை வாழ்த்துவதற்கு அமைத்தார். அடுத்த கந்துக வரிப்பாடலைப் பாண்டியனை வாழ்த்துவதற்கு அமைத்தார். அடுத்த ஊசல் வரிப்பாடலைச் சேரனை வாழ்த்துவதற்குஅமைத்தார். இவை ஒவ்வொன்றும் மும்மூன்று பாடல்களைக் கொண்டவை. அவ்வவற்றின் ஒவ்வொரு அடியை மட்டும் காண்பதே போதுமானது ஆகும்.

அம்மனை வரி:

''சோழன் புகார்நகரம் பாடேலோர்
[அம்மானை''

கந்துக வரி:

''தென்னன் வாழ்க வாழ்கவென்று
[சென்றுபந்த டித்துமே''

ஊசல் வரி:

''விறல்விற் பொறிபாடி ஆடாமோ
[ஊசல்''

இவ்வாறு மூன்று வகையில் மூவரையும் தனித் தனியே வாழ்த்திய பின் முடிவாக வள்ளைப்பாட்டுப் (பெண்கள் நெல்லைக் குற்றும் போது பாடும் உலக்கைப் பாட்டு) பாடுகின்றனர். இளங்கோவடிகளார் மூன்று மன்னர்களையும் ஒரு சேர இந்த வள்ளைப் பாட்டில் அமைத்துப் பாடச் செய்துள்ளார்.

அவற்றின் பகுதிகள்:

''ஆழிக் கொடித்திண்டேர் செம்பியன்
[வம்பலர்தார்
பாழித் தடவரைத்தோட் பாடலே
[பாடல்'' (சோழன்)
''மீனக் கொடிபாடும் பாடலே பாடல்,
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே
[பாடல்'' (பாண்டியன்).
''பனந்தோடு உளங்கவரும் பாடலே
[பாடல்'' (சேரன்)

பொதுவாழ்த்தாக வஞ்சி மகளிர் தொடங்கியது முதல் இவ்வள்ளைப் பாட்டு முடிய இளங்கோவடிகளார் அமைத்த அமைப்பை நோக்கின்,

தொடக்கத்தில் முடிமன்னர் மூவரையும்
[வாழ்த்தி,
மூன்றுவகை வரிப்பாடல்களில் தனித்
[தனியே வாழ்த்தி,
வள்ளைப் பாட்டில் முடிந்த முடிபாக மூவ
ரையும் வாழ்த்தித்

தமிழ் மன்னரிடையே ஒருமைப்பாடு திகழ வேண்டும் என்பதைக் குறிப்பில் உணர்த்தினார். இதன் வாயிலாகத் தமிழக ஒருமைப் பாட்டைக் கருத்தால் நாட்டினார்.

''வாழ்க இளங்கோ வடிகள் திருப்பெயர்'' என்று நாம் வாழ்த்துவோம். இன்று அரசியல் இயக்கத்தால் பிளவுற்றுக் கிடக்கும் தமிழகத்தைச் சில பொது நிகழ்ச்சிகளில் யாவரையும் ஒன்றுகூட்டி ஒருமைப்பாட்டைக் காட்டும் டாக்டர் கலைஞரை நாம் வாழ்த்தி மகிழ்வாம். ''வாழ்க டாக்டர் கலைஞர்''.


## தங்கபஸ்பம் சிட்டுக்குருவி லேகியம்



Dr. S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப் பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள், முதலியவற்றைக் குணப்படுத்திப்புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்— விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ரத்ன

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IMD), V.V.S., A.M.I.H
பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி, S.I.
போன்: 14 தந்தி: சித்தர்

சென்னை கிளை ஆபீஸ்!

61, அருணாசலம் தெரு, G. T., சென்னை-1.
போன்: 21448

## நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் ப்ளவர் மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
''கோபுரம்'' மார்க்
மைதா, ரவை
மற்றும்
''கப்பல்'' மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

டெலிபோன் எண், 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

# செலவைக் குறைக்கும் உழவுக் கருவி - 1

ஏக்கருக்கு 3,000 கிலோ புரதச் சத்து மிகுந்த தானியத்தையும், 15 முதல் 20 டன் வரை சத்துள்ள கால்நடைத் தீவனத்தையும் 100 முதல் 110 நாட்களுக்குள் கொடுப்பதால், வீரிய மக்காச்சோளம் தீவிரச் சாகுபடிக்கும், பரவலான சாகுபடிக்கும், பலபயிர் சாகுபடிக்கும் ஏற்றதாக இருக்கிறது. இதன் காரணமாகவே, இந்தியாவில் வீரிய மக்காச் சோளச் சாகுபடி விரைவாகப் பரவி வருகிறது. வீரிய மக்காச் சோளத் தானிய உற்பத்தியும் ஆண்டுக்காண்டு அதிகமாகி வருகிறது.

வீரிய மக்காச்சோளத்தைப் பயிரிடும் உழவர்கள், மக்காச் சோளக் கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்து எடுப்பதற்குப்படும் சிரமம் சொல்லுந் தரமன்று! பெரும்பாலான உழவர்கள், ஏராளமான கூலியாட்களைக் கொண்டு மக்காச் சோளக் கதிரை மூடியுள்ள தோகைகளை அகற்றிவிட்டு கதிர்களைத் தடிகொண்டு அடித்து மணிகளைப் பிரித்துத் தூற்றி எடுக்கின்றார்கள். ஏராளமான கூலியாட்கள் இவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுவதால், அதிகக் கூலிச் செலவு ஏற்படுகிறது; கால விரயமும் ஏற்படுகிறது. அத்துடன் இம்முறையில் மக்காச் சோள மணிகள் உடைந்து சேதமாவதுடன் தரமும் குறைந்துவிடுகிறது.

ஆனால் வசதி படைத்த சில உழவர்கள் மட்டும் மக்காச் சோளக் கதிரை மூடியுள்ள தோகைகளை கைகளால் அகற்றிவிட்டு, அவைகளைக் கையால் இயங்கும் அல்லது விசையினால் இயங்கும் மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியில் ஒவ்வொன்றாகச் செலுத்தி, மணிகளைப் பிரித்தெடுக்கின்றார்கள். ஆனால் இம்முறையிலும் மக்காச் சோளக் கதிரிலிருந்து மணிகளைப் பிரித்தெடுக்க அதிகச் செலவும், கால தாமதமும் ஏற்படுகிறது.

வீரிய மக்காச் சோளக் கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்தெடுப்பது பெரும் சிக்கலானதும் செலவு மிகுந்ததுமான செயலாகவும் இருப்பதால், பெரும்பாலான உழவர்கள் பெரும்பரப்பில் வீரிய மக்காச் சோளத்தைப் பயிரிடத் தயங்கி வந்தார்கள். குறைந்த செலவிலும், விரைவாகவும், மக்காச்சோளக் கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்தெடுப்பதற்கு ஏற்ற ஒரு கருவி இல்லையே என்று கவலைப்பட்டார்கள்.

அவர்களின் கவலையைப் போக்கிட முன் வந்தது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சித்தொழிற் கூடம்! ஆராய்ச்சிப் பொறியாளர்களின் அரு முயற்சியால், அந்த ஆராய்ச்சித் தொழிற் கூடத்தில், புதிதாக மக்காச் சோளக் கதிரடிக்கும் பொறி ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியில் மக்காச்சோளக் கதிர்களை மூடியிருக்கும் தோகைகளை உரிக்காமலேயே அப்படியே போட்டுத் தோகை வேறாகவும், தூசு வேறாகவும், மணிகள் வேறாகவும், மணிகள் ஒட்டியிருக்கும் தக்கைகள் (வெற்றுப் பூட்டைகள்) வேறாகவும் பிரிக்க முடிகிறது. இக்கருவியில் கதிர்களைப் போடும் வாய், சுழலும் உருளை, மணி நீக்கிய வெற்றுப் பூட்டையை வெளியே எறியும் பகுதி, மணிகளைத் தூய்மைப்படுத்தும் பகுதி, தூய்மைப்படுத்தப்பட்ட மணிகளை மேலே தூக்கிச் சென்று வெளியே கொண்டுவரும் பகுதி முதலியன உள்ளன. இக்கருவியைக் கொண்டு மக்காச் சோளக் கதிர்களிலிருந்து குறைந்த செலவிலும், விரைவாகவும் மணிகளைப் பிரிக்க இயலுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமான வேளாண்மைப் பொறியியல் ஆராய்ச்சித் தொழிற்கூடம், மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியில் 2 வகைகளை உருவாக்கியுள்ளது. அவற்றில் ஒன்று 5 குதிரை ஓட்டச் சக்தி கொண்ட மின்சார மோட்டாரினால் இயங்குவது. மற்றொன்று



டிராக்டருடன் இணைந்து இயங்கும் திறன் கொண்டது.

சிறு நிலக்கிழார்கள் மின்சாரத்தால் இயங்கும் மக்காச்சோளக் கதிரடிக்கும் கருவியை வாங்கி உபயோகித்துப் பயன் பெறலாம். இக்கருவியை எண்ணெய் இயந்திரம் மூலமாகவும் இயக்க இயலும்: இக்கருவியின் விலை (மின்சார மோட்டாரின் விலை நீங்கலாக) ரூபாய் 750. இந்த இயந்திரம் 8 மணி நேரத்தில், 6 டன் மக்காச் சோளக் கதிர்களை அடித்து மணிகளைப் பிரித்துக் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்தது.



டிராக்டர் வைத்துள்ள பெரு நிலக்கிழார்கள், டிராக்டருடன் இணைந்து இயங்கும் திறன்கொண்ட மக்காச் சோளக் கதிரடிக்கும் கருவியை வாங்கி உபயோகிப்பது பெரும் பயன் அளிக்கும். டிராக்டரின் பின்புறம் அமைந்துள்ள சக்தி தரும் தண்டுடன் இணைந்து இக்கருவியை இயக்க இயலுமாதலின், டிராக்டர் வைத்துள்ளவர்களுக்கு இக்கருவியே ஏற்றதாகும். இக்கருவியின் விலை ரூபாய் 1,500. முப்பத்தைந்து குதிரை ஓட்டச் சக்தியுள்ள டிராக்டரால் இயக்கப்படுமானால், இக்கருவி 8 மணி நேரத்தில் 10 டன் மக்காச் சோளக் கதிர்களை அடித்து, மணிகளாகவும், வெற்றுக் கதிர்களாகவும் பிரித்துக் கொடுக்க வல்லது.

இவ்விருவகைக் கருவிகளும், எளிதில் மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியான அமைப்புகளைப் பெற்றிருக்கின்றன. இக்கருவிகளில் சக்கரங்கள் பொருத்தப் பட்டுள்ளதால், விளை நிலங்களுக்கே கொண்டு சென்று கதிரடிக்கலாம்.

சிறுநிலக் கிழார்களும், பெருநிலக் கிழார்களும் மேற்கூறிய மக்காச் சோளக்கதிரடிக்கும் கருவிகளை வாங்கி உபயோகித்தால், மக்காச் சோளக் கதிரடிக்கும் செலவைக் குறைத்து அதிக இலாபம் பெறலாம். செலவைக் குறைத்துச் சிக்கனத்தை ஏற்படுத்தும் இக்கருவியை, உழவர்கள் கூட்டு அடிப்படையில் வாங்கி உபயோகித்தும் பயன் பெறலாம்.



மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களை அணுக வேண்டும். உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார். ஆனால், அதற்கு முன்பாக உங்கள் ஊராட்சி மன்றத்தைக் கூட்டி, உங்கள் ஊரில் வான வெளி மருந்துத் தெளிப்பு ( Aerial Spraying ) மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி, அத்தீர்மானத்தை உங்கள் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு அனுப்பி, ஊராட்சி ஒன்றிய கௌன்சில் கூட்டத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் வானவெளி மருந்துத் தெளிப்பு மேற்கொள்ள முடியும். தங்கள் ஊரில் 50 ஏக்கர் அல்லது 100 ஏக்கரில் மட்டுமே விமானம் மூலம் மருந்து தெளிக்க வேண்டுமென்று கேட்டால், அதை நிறைவேற்றி வைப்பது எளிதல்ல. குறைந்தது ஒரே தொடர்ச்சியாக 500 ஏக்கர் நிலத்திலாவது ஒரே வகைப் பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்தால்தான் விமானம் மூலம் மருந்து தெளிக்க முடியும். எனவே இதையெல்லாம் நன்கு கவனித்த பின்பு வான வெளி மருந்து தெளிக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

**வினா :** விமானம் மூலம் மருந்து தெளித்த பின் அதற்கான செலவு விவசாயிகளிடமிருந்து எவ்வாறு வசூலிக்கப்படுகிறது? மருந்து தெளிக்க முன் பணம் கட்ட வேண்டுமா? அரசு என்ன சலுகையளிக்கிறது?

—கபிலமலை வானொலி மன்றம், சேலம் மாவட்டம்.

**விடை :** விமானம் மூலம் மருந்து தெளிப்பதற்கான செலவு, உழவர்களிடமிருந்து மறு ஆண்டு நிலத் தீர்வையுடன் சேர்த்து வசூலிக்கப்படுகிறது. இதற்கு வட்டி கிடையாது. மருந்து தெளிக்க முன்பணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. ஊராட்சி மன்றத் தீர்மானமும், ஊராட்சி ஒன்றியத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டாலே போதுமானது.

விமானம் மூலம் தெளிக்கப்படும் மருந்துகளுக்கு 15 சத மானியம் வழங்கப்படுகிறது. மருந்து தெளிப்பதற்காக விமானத்திற்கு ஆகும் செலவில் ஏக்கருக்கு ரூபாய் 5 மட்டுமே உழவர்களிடமிருந்து மறு ஆண்டு வசூலிக்கப் படுகிறது.

மீதிச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது.

**வினா :** விவசாயிகள் தெளிப்பான் மூலம் சொந்தமாக மருந்து தெளிக்கும் அளவு, விமானம் மூலம் மருந்து தெளிப்பது பலன் தராது என்று ஒரு அங்கத்தினர் கூறுகிறார். இது சரியா?

—வரிச்சிக்குடி உழவர் விவாதக் குழு, புதுவை மாநிலம்.

**விடை :** தெளிப்பான் மூலம் சொந்தமாகக், குறிப்பிட்ட பரப்பில், மிகவும் கவனத்துடனும், சரியான முறைப்படியும் தெளிப்பதால் நல்ல பலன் ஏற்படுகிறது என்று உங்கள் அங்கத்தினர் கருதி இருக்கக்கூடும். ஆனால் அவருடைய கருத்து முழு அளவில் சரியல்ல.

பூச்சிகள் ஒவ்வொரு நாளும் கணக்கிட முடியாதபடி பெருகி வருகின்றன. உழவர் ஒருவர் மருந்தடித்தால், அந்தச் சமயத்தில் பூச்சிகளில் சில, மருந்து தெளிக்காத வயலுக்குச் சென்று பிழைத்துக்கொள்வதுடன், தன் இனத்தைப் பெருக்கிவிடுகின்றன. நோயும் இவ்வாறே பெருகி விடுகின்றது. இதைத்தடுக்க வேண்டுமானால், ஒரே சமயத்தில் பூச்சிகள் தாண்டிச் செல்ல முடியாத அளவிற்குப் பெரும் பரப்பில் விரைந்து மருந்து தெளிப்பதுதான் பூச்சிகள் அல்லது நோய்களை அறவே ஒழிப்பதற்குள்ள சரியான வழியாகும். இது விமானம் மூலம் மருந்து தெளிப்பதன் மூலம்தான், சாத்தியமாகும். மேலும் விமானம் மூலம் மருந்து தெளிப்பது சுலபமானது; சிக்கனமானது; விரைவானது.

கையில் பணமில்லை என்பதால், எத்தனையோ சிறு உழவர்கள் மருந்து தெளிக்காமல் விட்டு விடுகின்றார்கள். இதனால் அவர்களது வயலில் உள்ள பயிர்கள் பூச்சிகள் அல்லது நோய்களால் பாதிக்கப்படுவதுடன், அக்கம் பக்கத்து வயலில் உள்ள பயிர்களுக்கும் அவை பரவுவதற்கு ஏதுவாகிவிடுகிறது.

ஹெலிகாப்டர் மூலம் ஒரே நாளில் சுமார் 1,500 ஏக்கரிலும், ஆகாய விமானம் மூலம் ஒரு நாளில் சுமார் 2,500 ஏக்கரிலும் மருந்து தெளிக்க முடியும். இதனால் பூச்சிகளையும், நோய்களையும் நன்கு கட்டுப்படுத்த முடியும். எனவே விமானம் மூலம் மருந்து தெளிப்பதுதான் மிகுந்த பலனைத் தருவதாகும். ஆகவே உங்கள் அங்கத்தினர் கூறுவது சரியல்ல.

---

**தமிழரசு இதழுக்கு அனுப்பப்படும் கவிதை-கதைகள் முதலியன எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பப்படமாட்டா. அவை வெளியிடுதல் பற்றிய கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ள இயலாது! அஞ்சல் தலைகளோ அஞ்சல் அட்டைகளோ அனுப்ப வேண்டாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

— ஆசிரியர்

---



# குழலும் யாழும்

புலவர் செ. வரதராசன்

அன்பியலா; அறிவியலா; பண்பாட்டியலா, பகுத்தறிவியலா; இல்லறமா, துறவறமா; நட்பா, காதலா; உழவா, மருத்துவமா—எத்துறை பற்றியதாயினும் அவ்வத்துறைகளைக் கட்டிக் காத்து, வழிகாட்டி, நடத்திச் செல்லும் அறிவுரைகளையும் தெளிவுரைகளையும் வாரி வழங்கி வாழ்வளிப்பவர், வான்புகழ்த் திருவள்ளுவரே யன்றோ!

ஆம்!

''எல்லாப் பொருளும்
இதன்பால் உளவிதன்பால்
இல்லாத எப்பொருளும்
இல்லையால் ....''

என்பது மதுரைத் தமிழ்க்



குமரனாரின் திருக்குறளைப் பற்றிய மதிப்புரையாகும்.

எனில், இன்று, சிவப்பு முக்கோணத் துணையோடு, 'அளவோடு பெற்றுவளத்தோடு வாழ்வோம்', 'நாமிருவர், நாம் பெறுவதும் இருவர்'; 'இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்' என்ற கருத்துத்தெளிவுற்று தமிழகத்தே மட்டுமின்றி, நமது இந்தியத் துணைக் கண்டம் முழுவதும்—ஏன், உலகின் பற்பல பகுதிகளிலும் கூட, வாழ்க்கையில் கையாளப்பட்டு வருகின்ற 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றி, திருவள்ளுவர் தெரிவிக்கும் கருத்துக்கள் யாவை—என்பன பற்றி நாம் சிந்திக்க வேண்டுமன்றோ?

ஆம்! வாழ்க்கை முறைகளை—அறங்களை—தத்துவங்களை எல்லாம் வகைப்படுத்தி உரைத்திட்ட திருவள்ளுவர், வாழ்க்கையில் எண்ணற்ற பிள்ளைகளைப் பெற்று, இடிபட்டு, நலிபட்டு, துன்பத்திற்காளாகித் தவிக்கும் குடும்பங்களைக் காண விரும்புவாரா? மக்கள் தொகை மிக்கதாகி நாடும் உலகும் நலியும் நிலையினை விரும்பி வரவேற்பாரா? இல்லை; இருக்கமுடியாது!

மேலும், தம்மக்கள், அறிவறிந்த மக்களாய்; பழி பிறங்காப் பண்புடை மக்களாய், தம் பொருள் என்று உரிமை கொள்ளுதற்குரிய மக்களாய் இருந்து, உடல் தீண்டும்போதும் சொற்கேட்கும்போதும் இன்புறுதற்குக் காரணமான மக்களை, அவர்களுடைய அறிவுடைமை, தமக்கு மகிழ்ச்சியினைத் தருவதனை விட மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இருக்க வேண்டும் என்று கருதுதற்குரிய மக்களை, சான்றோராகக் கேட்டு மகிழ்தற்குரிய மக்களை அவர்தம் சிறப்பாய், 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' என்று உலகு போற்றுதற்குரிய புகழைத் தருகின்ற மக்களை அளவற்றுப் பெற்று, நலமற்று வாழ வழி வகுத்திருப்பாரா, வள்ளுவர்?

என்றால், ஆசிரியர் திருவள்ளுவர் குடும்பக் கட்டுப்பாடு பற்றி யாது கூறுகின்றார்? 'அளவோடு பெற்று வாழ்க!' என்றே சொல்லுகின்றார். அதுவும், 'இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்' என்பவர் போல் சொல்லி இருக்கின்றார்.

எப்படி? திருக்குறள் 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தில், திருவள்ளுவர் மழலைச் சொல்லின்பத்தினை எடுத்தியம்புகின்றார் அன்றோ?

'குழலினிது யாழினிது
என்பதம் மக்கள்
மழலைச்சொல்
கேளா தவர்.'

என்று, 'அம்மழலைச் சொல்லின்பத்திற்கு ஈடு, இணை ஏதேனும் உண்டோ?' என்று எண்ணிப் பார்த்து, இரண்டு உவமைகளை எடுத்து இயம்பக் கருதி, அவையும் இம்மழலைச் சொல்லுக்கு ஈடு இல்லை என்று முடிவு செய்து, இம் மழலைச் சொல்,



தமிழில் வழிபடக்கூடாது என்பது, தமிழர்களுடைய உணர்ச்சிகளைக் குத்துகின்ற பிரச்சினை! கோவில்களில் தமிழுக்கு இடம் கிடைக்காவிட்டால் "தமிழ் தெரியாத ஆண்டவனுக்கும் நமக்கும் என்ன தொடர்பு? வடமொழி மட்டுமே தெரிந்த ஆண்டவன் வடநாட்டுக்கே போய் விடலாமே!" என்று கேள்வி கேட்க வேண்டிய அளவுக்குத் தமிழ் மக்கள் ஆர்த்தெழுவார்கள் என்பது நிச்சயம்.

தாம் உவமை கூறக் கருதிய குழலிசையினும் யாழிசையினும் சிறந்ததாய்—சிறப்பில் மிக்கதாய் இருப்பதனைச் சிந்தித்து, அம்மழலைச் சொல் கேளாதவர்தாம், 'குழலினிது, என்று கூறி மகிழ்வர்' என்று சொல்லி, மழலைச் சொல்லின்பத்தைச் சிறப்பிக்கின்றார்.

இக் குழலின் இசையும் யாழின் இசையும் எவ்வளவு இனிமையுடையன என்று எடுத்துக் கூறுதல் இயலுமோ! குழலிசைக்குத் தம் உள்ளத்தைக் கொள்ளை கொடுக்காத மக்களும் உளரோ? பாம்பும் பசுக்களும் போன்ற அஃறிணை உயிர்களும் மயங்கும் போது, மக்களைப் பற்றி உரைத்திடல் [illegible] இல்லை என்பர். ஆனால், யாழின் வழிவந்த வீணை இன்று இருக்கின்றதன்றோ? இதன் இசைக்கு ஈடாகக் கூறும் இசையும் வேறு உண்டோ?

அதிலும், இக்குழல், யாழ் இசையோ, மனிதனின் உள்ளுணர்வினைத் தொட்டிழுத்து, இன்பப் புளகத்தை மட்டின்றிப் பெய்து, மெய் மறக்கச் செய்து, ஐம்புலன்களையும் ஒருவழிப் படுத்தித் திகட்டாத தேன் சுவை கொட்டும் மகிழ் நலத்தைத் தந்து, திளைக்கச் செய்வதன்றோ!

இப்படிக் காட்டி மழலைமொழியைச் சிறப்பிப்பதற்குத் திருவள்ளுவர் எடுத்துக் கொண்டவை, குழலும் யாழும் ஆகிய இரண்டு மட்டுமேயன்றோ! இஃது ஏன், என்பதனை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவர் கருதியிருந்தால் இந்த இரண்டு என்ன, இவற்றினும் அதிகமாக, மேலும், சில பலவற்றைக் குயிலிசை, கிளி மொழி போன்ற எத்தனையோ பொருள்களை எடுத்துக் கூறியிருக்கலாம்.

'ஏரினும் நன்றாம் எரு
விடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'

'உற்றவன், தீர்ப்பான்,
மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து'.

'கண்டு, கேட்டு, உண்டுயிர்த்து,
உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள'.

என்றெல்லாம் பற்பல செய்திகளையும், செயல்களையும் ஒவ்வொரு குறட்பாவிலும் நிறைத்துக் கூறும் ஆற்றலுடைய திருவள்ளுவருக்கு இஃது ஒன்றும் முடியாததன்று.

எனினும், 'குழல், யாழ்' இரண்டினை மட்டுமே மழலை நலத்தைக் காட்டுவனவாக எடுத்துக் கூறுகின்றார், என் பதில்தான் வள்ளுவரின் குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைச் சிறப்பினை நாம் சிந்தித்துப் பார்க்க இடம் கிடைக்கின்றது.

'குழலும் யாழும் போல இரண்டு குழந்தைகள்—இரண்டே இரண்டு மக்களைப் பெற்றால், பெற்றுக்கொண்டு மகிழ்ந்தால், மகிழ்ந்து வாழ்ந்தாலே ஒரு குடும்ப வாழ்வு நிறைவு பெறு

யதற்குப் போதுமானதாகும்' என்று கருதியே இவ் விரண்டினை மட்டும் எடுத்துக் கூறியுள்ளார்.

அப்படிப் பெறும் இரு பிள்ளைகளும் தமது இனிய தோற்றத்தாலும் பயனாலும் பிறர்க்கும் பிற உயிர்க்கும் மகிழ்ச்சி நலம் பொழிகின்ற குழலும் யாழும் போலச்சிறந்தவர்களாகஇருத்தல் வேண்டும் என்பது மட்டுமன்று, திருவள்ளுவரின் கருத்து.

'மக்கட் பேறு' அதிகாரத்தில் காட்டும் ஏனைய ஒன்பது குறட்பாக்களில் கூறும் சிறப்புகளை எல்லாம் உடையவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றார்.

மேலும், அவ்விரு மக்களும் ஆண்பிள்ளைகளாகவோ பெண் குழவியராகவோ இருந்துவிடாமல், ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக அமைந்திடப் பெற்றால் நல்லது என்றும் கருதியுள்ளார்.

எப்படி? குழல்—ஆண் இயல்பினை உடையது. குறிஞ்சி நிலங்களில் ஓங்கி வளர்ந்துள்ள மூங்கில் காடுகளில் நுழைந்து, தேடித் தேர்ந்தெடுக்கும் பெரு முயற்சியின் அரும்பயனைக் கொண்டு வரப்பெற்ற மூங்கிலிலிருந்து செப்பனிட்டுச் செய்யப் பெறும், இக்குழல், இசைக் கலைஞருள் ஆடவர்களாலேயே பயன்படுத்தப் பெறுவதனைக் காணலாம்.

அன்றியும், குழலின் ஆரவாரமற்ற தன்மையோடுள்ள எழிலும் ஏற்றமும் கூடிய தோற்றமும் ஓர் ஆண்மகனையே நினைவு படுத்துவதனைக் கருதலாம்.

கண்ணனும் ஆநாய நாயனாரும் போன்ற ஆடவரோ குழலிசைத்துச் சிறப்புச் செய்தவராகவும் சிறப்புப் பெற்றவராகவும் புராண நூல்களும் புகலுகின்றன.

ஆனால், யாழோ, பெண்மை இயல்பினதாகும். அந்த யாழ் வழி வந்துள்ள இன்றைய வீணையும் கலை நலனும் செயல் சிறப்பும் எழில் வளமும் பெற்ற ஏற்றமுடையதாய் — பெரும்பாலும் பெண்களாலேயே பயன் படுத்தல் பெறுவதனைக் காணுகின்றோம்.

இன்னும், இவ்வீணையின் எழில் நலமும் செழுமையான அமைப்பும் இனிய தோற்றமும் எழில் நல மகளிரையே நம் நினைவின் முன் நிறுத்தி இன்புறுத்துவதனையும் உணர்கின்றோம்.

புராணங்களோ கலைமகளும் மலைமகளும் போன்ற மகளிர் தம் கைகளிலேயே இவ்விசை நல வீணையினைக் கொடுத்து நமக்குக் காட்டுகின்றன.

இவற்றினும் மேலாக, இசை நூல்களில், இவ்விசைக் கருவிகளைப் பற்றிக் கூறும் விளக்கங்களில், குழல், ஆண்மை இயல்பினதாகும் என்றும், யாழ் பெண்மைச் சிறப்பினதாகும் என்றும் சொல்லப்படுவதனையும் நோக்குக!

ஆக, வள்ளுவரும், 'நாமிருவர், நமக்கிருவர்' என்பது போல ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கையில், 'ஆணும் பெண்ணுமாகிய இரு மக்களையே பெற்று இன்புற்று வாழ்க!' என நம்மை வாழ்த்துவதனை உணர்கின்றோமல்லவா?




# எழில்குலுங்கும் நீலமலையில் தொழில் பெருக்க வாய்ப்புகள்!



நல்ல மழை, மலை வளம், அருவிகள், பலவகையான மரங்கள் அடர்ந்த காடுகள், மின் நிலையங்கள், தேயிலைத் தோட்டங்கள், இவை அனைத்தையும் கொண்டு இயற்கைப் பூங்காவாக எழில் குலுங்க நிற்கும் நீலகிரி மாவட்டத்திற்கு வேறு தனிச் சிறப்புகளும் உண்டு. கோடையிலே இளைப்பாறுவதற்கேற்ற குளிர் நகராய், மலை நகரங்களின் ராணி என விளங்கும் உதக மண்டலம், நீலகிரி மாவட்டத்தின் தலைநகராகப் பெரும் புகழும் பெற்றுள்ளது. இதன் அழகை வெளிநாட்டுத் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். வேறு மலைப் பகுதிகளில் இல்லாத அளவில் நல்ல சாலைகள், ரயில் பாதைகள், இத்துடன் எல்லா ஊர்களும் மின்சார வசதி பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு இயற்கை எழில் மண்டிக் கிடக்கும் அளவுக்கு இந்த மாவட்டத்தில் இயற்கை வளங்கள் நிறைந்திருப்பதாகச் சொல்ல முடியாது. இருக்கும் வசதிகள் கூட, முழு அளவுக்கு இயந்திரத் தொழில் பெருக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. அண்மைக் காலத்தில்தான் பெருந் தொழில்கள் வகையில் இரண்டு தொழிலகங்கள் ஏற்பட்டன. பொதுத் துறையில் ஒன்றும் தனியார்த் துறையில் ஒன்றுமாக இப்பெருந் தொழிற்சாலைகள் வந்த பின்புதான் மாவட்டத்தைத் தொழில் மயமாக ஆக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மாவட்ட மக்கள் நல்ல முறையில் உணர்ந்தனர்.

## லாரி—ரயில் போட்டி

மலைகள் நிறைந்ததும் மொத்தம் 2.54 (982 சதுர மைல்) ஹெக்டேர் பரப்புள்ளதுமான நீலகிரி மாவட்டம் மூன்று வட்டங்களைக் கொண்டது. அவை; உதகமண்டலம், குன்னூர், கூடலூர் ஆகும். உதகமண்டலம் கடல் மட்டத்துக்கு மேல் 2,287 அடி உயரம் உள்ளது. மாவட்டத்தில் 1,349 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் உள்ளன. உதகை, குன்னூர் நகரங்களும் மற்றும் சில இடங்களும் ரயில் வசதி பெற்றுள்ளன. மாவட்டத்தின் மக்கள் தொகை சுமார் 5 லட்சம்.

இந்த மாவட்டத்தில் சரக்குப் போக்குவரத்துக்கு ரயில் வசதியை விடச் சாலை வசதியைத்தான் பெரிதும் விரும்புகிறார்கள். ஏனெனில் சாலைப் போக்குவரத்துத்தான் மலிவானதாகவும் விரைவானதாகவும் இருந்து வருகின்றது. மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்கு லாரியில் சரக்குக் கொண்டு செல்லக் குவிண்டாலுக்கு ரூ. 2·15 ஆகின்றது. ஆனால் ரயிலில் கொண்டு சென்றால் ரூ. 6·00 ஆகின்றது.

> நீலகிரி மாவட்டத்தில் புதிய தொழில்கள் தொடங்குவது குறித்தும் தொழில் பேட்டை அமைப்பது பற்றியும் தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வு ஒன்றைத் தமிழக அரசு மேற்கொண்டது. அந்த ஆய்வு அறிக்கையின் சுருக்கம் கட்டுரை வடிவில் இங்குத் தரப்படுகின்றது.

## சக்தியின் கோயில்கள்

நீர் மின்சார உற்பத்தியில் தலை சிறந்து விளங்குவது நீலகிரி மாவட்டம். மாநிலத்தின் மூன்று முக்கிய நீர்மின்சார நிலையங்களான பைகாரா, மோயார், குந்தா ஆகியவை இம் மாவட்டத்தில்தான் அமைந்துள்ளன. இம் மாவட்டத்தில் தோன்றக் கூடிய புதுத் தொழில்களுக்கு மின்சாரப் பஞ்சம் வராது.

இம்மாவட்டத்தில் கல்வி வளர்ச்சி, மாநிலத்தின் சராசரி அளவை விட உயர்ந்தே உள்ளது. கல்வி அறிவைப் பெருக்க அரசு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் இப்பகுதியில் முனைந்து பணியாற்றுவதே இதற்குக் காரணம். மாவட்டத்தில் தற்சமயம் மூன்று கல்லூரிகள் உள்ளன. தொழில் பயிற்சி வசதிகளிலும் இம்மாவட்டம் சிறப்பான இடம் பெற்றுள்ளது. தொழில் நுட்ப ஊழியர்கள் விஷயத்திலும் இம்மாவட்டத்தில் பற்றாக்குறை கிடையாது.

## தயக்கம் நீங்குமா?

மாவட்ட மக்களின் முக்கியத் தொழில், விவசாயம். மலைத் தோட்டங்கள் வைத்திருப்போ



1-11—6

ரும் சரி, மற்ற விளைபயிர்களைப் பயிரிடுவோரும் சரி, குறைந்த அளவில் நிலம் வைத்துள்ளவர்களே யாவர். ஒரு வரம்புக் குட்பட்ட வருமானமே கிடைக்கிறது. பெரிய அளவில் மலைத் தோட்டங்களும், விவசாய நிலங்களும் வைத்திருப்போர் கூடத் தொழில் முயற்சிகளில் ஈடுபடத் தயங்குகின்றனர். இதிலே ஆறுதலாகக் கொள்ளத் தக்க ஓர் அம்சம், அண்மையில் உள்ள கோவை மாவட்டம் தொழில் மிகுந்த பகுதியாக இருப்பதும் அங்குள்ள தொழில் முனைவர்கள், இந்த மாவட்டத்திலும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்பக்கூடும் என்பதுமாகும்.

எனவே, நீலகிரி மாவட்டத்தைத் தொழில் மயமாக்குவதில் முன்னோடியாக உள்ள தேவைகள் மூன்று —

1. மாவட்டத்தின் வளங்களைக் குறித்து, அவற்றைத் தொழில் பெருக்கத்துக்கு எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது குறித்து நல்ல முறையில் எடுத்துச் சொல்லி விளம்பரப் படுத்த வேண்டும்.

2. தொழில்கள் தொடங்கச் சலுகைகள், மற்றும் ஊக்கமூட்டும் செயல் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. பொதுத் துறையில் மேலும் மேலும் தொழில்களை அமைத்துச் சிறு அளவு தொழில் முனைவர்களுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

## தேயிலைத் தொழில்கள்

நீலகிரி மாவட்டத்தின் மலைத் தோட்டங்களில் தேயிலையும் காப்பியும் முக்கியமான விளை பொருள்கள். தேயிலை தயாரிக்க 160-க்கு மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. தேயிலை, காப்பித் தோட்டங்களிலும், தேயிலைத் தொழிற்சாலைகளிலுமாகச் சுமார் 70,000 பேர்கள் வேலை செய்கிறார்கள்.

சிறு தொழில்கள் வகையில், மாநிலத் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்ட 62 தொழிலகங்கள் மட்டுமே உள்ளன. சுமார் 24 தேயிலைத் தொழிற்சாலைகள் இதில் உள்ளடங்கியவை. மற்றச் சிறு தொழில்களில் குறிப்பிடத் தக்கவை: தேயிலைத் தொழில் இயந்திரங்கள், துணை உறுப்புகள், பெட்டிகள் செய்தல், மரச் சாமான்கள், அட்டைப் பெட்டிகள், பிளாஸ்டிக் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், வீட்டு உபயோகங்களுக்கான பொருட்கள், பழம் பதனிடுதல் முதலியன.

## நீலகிரித் தைலம்

உதகை, குன்னூர் வட்டங்களில், நீலகிரித் தைலம் இறக்குவது பேர் பெற்ற குடிசைத் தொழிலாக இருந்து வருகின்றது. மாவட்டத்தில் நீலகிரித் தைலம் இறக்கும் சுமார் 350 தொழிலகங்களில் 1,500-க்கு மேற்பட்ட நபர்கள் வேலை செய்து வருகிறார்கள். மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 70 இலட்சம் பெறுமான நீலகிரித் தைலம் உற்பத்தியாகிறது. புல்லிலிருந்து சத்தெண்ணெய்களும் இறக்கப்படுகின்றன. தோல், பாத அணிகள், மூங்கில் கூடைகள் முதலியன இம் மாவட்டத்தின் மற்ற குடிசைத் தொழில்களாகும்.

நீலகிரி மாவட்டத்தின் பெருந் தொழில்கள் மூன்று. அவற்றுள் இரண்டு பொதுத்துறையாலும், ஒன்று தனியார் துறையாலும் நடத்தப்படுகின்றன.

### 166 வயது இளைஞர்!

சோவியத் நாட்டில் அசர் பைஜான் பகுதியைச் சேர்ந்த சிவிலிமிஸ்லினோவ் என்பவர் தமது 166-வது பிறந்த நாளைச் சுறுசுறுப்போடு கொண்டாடினார். இந்த வயதில் கூட அவர் தமது தச்சுப் பட்டறைக்குச் சென்று பணி செய்து வருகிறார்.

மிஸ்லினோவ் குடும்பம் பெரியது. பேரன், பேத்தி, கொள்ளுப்பேரன் எல்லாம் சேர்த்து மொத்தம் 209 பேர் இவர் குடும்பத்தில் உள்ளனர்.

ரஷியாவில் இதுபோல் நூறு வயதைத் தாண்டியவர்கள் 4200 பேர் உள்ளனர் என்று கூறப்படுகிறது.

## வெடிமருந்து

அரவங்காட்டில் உள்ள கார்டைட் தொழிற்கூடம், பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ்ச் செயல்படுகின்றது. பாதுகாப்புத் துறைக்குத் தேவையான வெடி மருந்துப் பொருட்கள் அதில் தயாரிக்கப்படுகின்றன.

உதகையில் அமைந்துள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, போட்டோ பிலிம்களை உற்பத்தி செய்யும் மிக நவீன தொழிற்சாலையாகும். இதற்காக 300 ஏக்கர் பரப்புள்ள இடத்தை மாநில அரசு இலவசமாக வழங்கியது. இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன், முன்பு திட்டமிட்டபடி, ஆண்டு ஒன்றுக்கு 58 இலட்சம் சதுர மீட்டர் பிலிம்களாகும். நான்காவது திட்டக் காலத்தில் இதன் உற்பத்தித் திறனை 87 இலட்சம் சதுர மீட்டராக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

போட்டோ பிலிம் தொழிற்சாலைக்கு மிக முக்கியமான கச்சாப் பொருட்களில் ஒன்று, சில்வர் நைட்ரேட். இதன் உற்பத்திக்காக இந்த ஆலை தனி உற்பத்திச் சாலை தொடங்கியுள்ளது. நகரமைப்பு உள்பட, இந்தத் தொழிற்சாலைக்கு முதலீடு சுமார் ரூ. 12 கோடி ஆகும்.

## வகை வகையான ஊசிகள்

தனியார்த் துறையில், தையல் இயந்திர ஊசி, கிராமபோன் ஊசி போன்ற பலவகை ஊசிகள் தயாரிக்கும் ஊசிகள் தொழிற்சாலை (நீடில் இண்டஸ்ட்ரீஸ், கெட்டி) இயங்கி வருகிறது. இதன் மூலதனம் 11 இலட்சம் ரூபாய்.

இது தவிரப் பெருந்தொழில் வகையில் புரொட்டீன் பிராடக்ட் ஆப் இந்தியா லிமிடெட் உருப் பெற்று வருகின்றது. ஜிலேடைன், ஒஸ்ஸீன், டைகால்சியம் பாஸ்பேட் ஆகியவற்றின் உற்பத்திக்கான இத்தொழிற்சாலைக்கு முக்கியக் கச்சாப் பொருட்கள் எலும்புத் தூள், ஹைட்ரோ குளோரிக் ஆசிட், சுண்ணாம்பு ஆகியனவாகும்.

தொழிலில் பின்னடைந்துள்ள நீலகிரி மாவட்டம், தொழிலாளர்களுக்குக் கணிசமான அளவில்

வேலை வசதி தரமுடியாத நிலையில் இருக்கின்றது. வேலை வாய்ப்புக்காகவும், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், இம் மாவட்டம் தொழில் மயமாவது இன்றியமையாததாகின்றது. ஓரளவுக்கே உள்ள செல்வ வள ஆதாரங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி அதிக அளவு நன்மை காண வேண்டும், இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, இந்த ஆய்வு அறிக்கை தொழில் பெருக்கத்துக்கான வாய்ப்புகள் வழி துறைகளைப் பின்வருமாறு எடுத்துக் காட்டியிருக்கிறது.

## நாட்டுப் பழம்; சீமைப் பழம்

மாவட்டத்தில் சுமார் 1,740 ஹெக்டேரில் பழ மரங்கள் பயிராகின்றன. வாழை, ஆரஞ்சு வகைகள், பீச்சஸ், பேரி, பலா ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. 1969—70-ஆம் ஆண்டில் மாவட்டத்தில் உற்பத்தியான பழங்கள் சுமார் 7,260 டன்கள், இப்பழ வகைகள் பெரும்பாலும் குறிப்பிட்ட பருவங்களில் மட்டுமே கிடைக்கின்றன என்றாலும், நீண்ட காலம் பலன் அளிப்பனவும் உண்டு. குறிப்பிட்ட விளைவுப் பருவங்களில் பழங்கள் விலை மிக மலிவு. அவைகளை வாங்கி, குளிர்பதனம் செய்து, மற்ற பருவங்களில் பயன்படுத்தலாம்.

பழங்கள் அதிக அளவில் கிடைத்தபோதிலும், தொழில் வகையில் அவை பெருமளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை. ஊறுகாய், ஜாம், ஜெல்லி, சர்பத் முதலியன தயாரிக்கக் குன்னூரில் குடிசைத் தொழில் வகையில் ஒரு தொழில் நிலையம் மட்டுமே உள்ளது. பெருமளவில் பழங்கள் கிடைப்பதைப் பார்க்கும்போது, நவீன முறையில் பழப் பதனத்துக்காக இயந்திரங்களைக் கொண்டு இயங்கும் தொழிற்சாலை ஏற்படுத்த நல்ல வாய்ப்பு இருக்கின்றது. பதனம் செய்யப்பட்ட பழங்களுக்கு மாநிலத்தில் மட்டுமின்றித் தேசம் முழுவதிலும் நல்ல விற்பனை வசதி கிடைக்கும். ஏற்றுமதியும் செய்ய வாய்ப்பு உண்டு.

இவ்வகையில் பழப்பதனத் தொழிற்சாலை ஏற்படுத்த இயந்திரங்களுக்கு ரூ. 0·90 இலட்சமும், மூன்று மாதங்களுக்கு நடைமுதல் மூல தனத்துக்கு ரூ. 0·59 இலட்சமும் ஆக 1·49 இலட்சம் ரூபாய் மூலதனம் தேவைப்படும்.

## வங்கம் செல்லும் கிழங்கு

நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விளைபொருள் உருளைக்கிழங்கு. சுமார் 8,700 ஏக்கரில் உருளை பயிரிடப்படுகின்றது. 1969–70-ல் விளைச்சல் சுமார் 76,000 டன்கள். கோஸ் பீன்ஸ், ரேடிஸ், காரட், பட்டாணி ஆகியவை சுமார் 750 ஹெக்டேரில் பயிரிடப்படுகின்றன. உருளைக்கிழங்கை உள்ளூர்ப் பகுதிகளில் பயன்படுத்துவது குறைவே. நீலகிரி உருளைக் கிழங்குக்கு, மாநிலத்தில் இதர வட்டாரங்களிலும் கேரளம், ஆந்திரம், ஒரிசா, மாராட்டியம், மேற்கு வங்கம் போன்ற வெளி மாநிலங்களிலும் கிராக்கி இருக்கிறது. இதன் காரணமாக நீலகிரி உருளைக் கிழங்கின் விலை அறுவடைப் பருவத்தில் கூடக் குறைவதில்லை. ஆகவே உருளைக் கிழங்கைத் தொழிலுக்குப் பயன்படுத்துவது இலாபகரமானதல்ல. ஆயினும் மிகக் குறைந்த விலை பெறும் கழிவு உருளைக் கிழங்குகளையும் அதிகக் கிராக்கி இல்லாத மிகப் பெரிய ரக உருளைக் கிழங்குகளையும் தொழில்களுக்குப் பயன்படுத்தலாம். உருளைக்கிழங்கிலிருந்து வற்றல் தயாரிக்கலாம்.

### எங்கு ? என்ன ?

இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழகத்திலும் உத்தரப் பிரதேசத்திலும் மாக்னசைட் என்ற உலோகத் தாதுக்கள் கிடைக்கின்றன. இவ்விரு பகுதிகளிலும் ஏறத்தாழ 710 லட்சம் டன் மாக்னசைட் உள்ளன.

மூன்று பகுதிகளில் மைக்கா கிடைக்கிறது. பீகார் மாநிலத்தில் 3880 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும், ராஜஸ்தானத்தில் 3110 ச.கி. மீட்டர் பரப்பிலும், ஆந்திரத்தில் 1550 ச.கி. மீட்டர் பரப்பிலும் மைக்கா கிடைக்கிறது. இதே மாநிலங்களில் தாமிரமும் பெருமளவில் கிடைக்கிறது.

## காய்கறிகள் உலர்ப்பதனம்

மற்றக் காய்கறிகளைப் பொறுத்த வரை, அவை அழுகும் பண்டங்கள் என்ற காரணத்தினால், அறுவடைக் காலத்தில் மிக மலிவான விலைக்கே விற்பனையாகின்றன. எடுத்துக் காட்டாகச் சொல்வதென்றால் அறுவடைப் பருவத்தில் முட்டைக் கோஸ் கிலோ 10 காசுக்கும் பீன்ஸ் கிலோ 60 காசுக்கும் விற்கப்படுகின்றது. எனவே அறுவடைக் காலத்தில் அவற்றை வாங்கித், தொழில் காரியங்களுக்குப் பயன்படுத்த நல்ல வாய்ப்பு உள்ளது. காய்கறிகளை Dehydration முறையில் பாதுகாப்பது என்பது நல்ல முறை. இப்படி உலர வைக்கும் முறையினால், அவற்றின் இயற்கைத் தன்மைகள் பழுதடையாமல் காக்கலாம். இப்படி உலர்த்தப்பட்ட, வற்றலாக்கப்பட்ட காய்கறிகள் இராணுவத்தினருக்குப் பெரிதும் தேவைப்படுகின்றன.

மற்ற அங்காடிகளிலும் இதற்கு நல்ல கிராக்கி இருக்கும். இப்படிக் காய்கறிகளை வற்றலாக்கும் தொழிற்சாலை நிறுவ ரூ. 1·21 இலட்சம் மூலதனம் தேவைப்படலாம்.

## தேயிலைக் கழிவிலிருந்து கேஃபின்

தேயிலை, இந்த மாவட்டத்தின் மிக முக்கியமான மலைத் தோட்டப் பயிர். மாவட்டத்தில் 160-க்கு மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. 1969—70-ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 18,320 டன்கள். தேயிலையைப் பதனம் செய்யும் போது கிடைக்கப் பெறும் கழிவு, ஆண்டுக்குச் சுமார் 550 டன்கள். அக்கழிவு தற்சமயம் உரமாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தக் கழிவில் 2·5 சத விகிதம் கேஃபின் உள்ளது. மருந்துத் தயாரிப்புக்காக, இதனை பிரித்தெடுத்து நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம். தேயிலைக் கழிவிலிருந்து கேஃபின் எடுக்க நாட்டில் தற்சமயம் ஒரு சில தொழிற்சாலைகள் உள்ளன. ஆனால் அவற்றின் உற்பத்தி, தேவையைச் சரிக்கட்டப் போதுமானதாக இல்லை. எனவே

தேயிலைக் கழிவிலிருந்து கேஃபின் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் தொடங்கலாம். மாதம் ஒன்றுக்கு 34 டன் தேயிலைக் கழிவை இவ்வகையில் பயன்படுத்திக் கொள்ளும் தொழிற்சாலை தொடங்க 4·81 இலட்சம் ரூபாய் மூலதனம் தேவைப்படும்.

### தைலம்—தூய்மைப்பணி

மாவட்டத்தில் சுமார் 5,500 ஹெக்டேரில் யூகலிப்டஸ் மரங்கள் பயிராகின்றன. குடிசைத் தொழில் முறையில் நீலகிரித் தைலம் இறக்கும் 350 தொழிலகங்கள் செயல்பட்டு வருகின்றன. பெரிய வர்த்தகர்கள் இந்த குருட் நீலகிரித்தைலத்தை வாங்கித் தூய்மைப்படுத்தி ஐ.பி. கிரேடு தைலமாக ஆக்குகிறார்கள். அரசு சின்கோனாத் துறையும் யூகலிப்டஸ் மரங்களைப் பயன்படுத்தித் தைலம் எடுப்பதோடு, இதர சத்தெண்ணெய்களையும் தயாரிக்கிறது.

ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 70 இலட்சம் மதிப்புள்ள ஐ.பி. கிரேடு நீலகிரித் தைலம் உற்பத்தி ஆகிறது. இந்த எண்ணெய் ஒரு கிலோ ரூ. 16·50-க்கு விற்பனை ஆகிறது. இவ்வெண்ணெய்யை மேலும் தூய்மைப் படுத்தி பி.பி. கிரேடு எண்ணெய் ஆக்கினால் அதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 19-க்கு விற்பனை ஆகிறது. எனவே ஐ.பி. கிரேடு தைலத்தை பி.பி. கிரேடு தைலமாகத் தூய்மைப்படுத்துவது இலாபகரமான ஏற்பாடு. இதற்கான சில தொழிலகங்களை ஏற்படுத்தலாம்.

வாசனை மிகுந்த எண்ணெய் தரும் ஜிரேனியம் செடி, கடல் மட்டத்துக்கு மேல் 1,500 அடி உயரமுள்ள பகுதிகளில் மணல் பாங்கான நிலத்தில் நன்கு வளர்கின்றது. மாவட்டத்தில் 400 ஏக்கர் பரப்பில் இது பயிரிடப்பட்டுள்ளது. அரசு சின்கோனாத்துறையும், தனியார் துறைத் தொழிலகங்கள் கல்ஹட்டியில் ஒன்றும் குன்னூரில் ஒன்றும், வாசனைத் தைலம் எடுக்கின்றன. சேலம் மாவட்டத்தில் ஜிரேனியம் வாசனை எண்ணெய் இறக்கும் தொழிலகங்கள் இரண்டு செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஜிரேனியம் வாசனைத் தைல உற்பத்தி சுமார் 1,470 கிலோ; மாநிலத்தில் இதன் உபயோக அளவு 1,100 கிலோ ஆகும். எஞ்சிய சரக்கு முக்கியமாக பம்பாய்க்கு அனுப்பப்படுகின்றது.

### ஜிரேனியம் தைலம்

நாடு முழுவதிலும் ஜிரேனியம் வாசனைத் தைலத்தின் தேவை சுமார் 12,000 கிலோ; உற்பத்தி அளவு 3,500 கிலோ. இந்தப் பற்றுக்குறை இப்போது இறக்குமதி மூலம் சரிக்கட்டப்பட்டு வருகின்றது. உலகின் பல்வேறு நாடுகளுக்கும் ஜிரேனியம் வாசனை எண்ணெய் அனுப்புவதில் பிரான்ஸ் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்தியா செய்யும் இறக்குமதியில் 80 சதவிகிதம் பிரான்சிலிருந்தே வருகின்றது. எனவே, தமிழகத்தில் குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் இத்தொழிலை மேம்படுத்த நல்ல வாய்ப்பு உள்ளது.

ஜிரேனியம் எண்ணெய்யிலிருந்து ரோடினால் செய்ய முடியும். ஜிரேனியம் எண்ணெய் கிலோ ரூ. 430; ஆனால் ரோடினால் விலை ரூ. 900. மாவட்டத்தில் போதிய அளவு ஜெரேனியம் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதையடுத்து ரோடினால் தயாரிப்பு குறித்தும் சிந்திக்கலாம்.

### நீலகிரியில் பசு : சென்னையில் பால்

நீலகிரி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு மொத்தப் பால் உற்பத்தி 17,000 லிட்டர்கள். ஆனால் அங்கு உபயோகிக்கப்படும் பாலின் அளவு 7,500 லிட்டர்கள். நாள் ஒன்றுக்கு உபரியாக உள்ள 9,500 லிட்டர் பால், சென்னை நகருக்கு அனுப்பப்படுகிறது. பால் பொருட்கள் இறக்குமதிக்கு அண்மைக் காலத்தில் விதிக்கப்பட்ட தடையினால் உள்நாட்டில் இறுகிய பால் உற்பத்தியும் இதர பால் பொருட்களின் உற்பத்தியும், தேவைக்குப் போதுமானதாக இல்லை. பால் பதனத் தொழிலை மேற்கொள்வதற்கு இயந்திரங்கள் வகையில் ரூ.5·06 இலட்சமும், மற்றும் மூன்று மாதக் காலத்துக்கு நடைமுதல் மூலதனத்துக்கும் சேர்த்து மொத்தம் ரூ. 13·58 இலட்சம் மூலதனம் தேவைப்படும். இதனைக் கொண்டு நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பாலைப் பதனம் செய்யலாம்.

மாவட்டத்தின் காடுகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு தேக்கு, ரோஸ்வுட், அயினி, வெண் தேக்கு மற்றும் நானாவித வெட்டு மரங்கள் சுமார் 41,000 கன அடி கிடைக்கிறது. மட்டரகமான மரங்கள் கார்குடிடிப்போவில் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. உயர்வகை மரங்கள், குறிப்பாக, தேக்கு மேட்டுப்பாளையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மரவேலை செய்யும் தொழிற்சாலைகள் இந்த மாவட்டத்தில் இருப்பினும் கூட, மாவட்டத்தில் கிடைக்கும்படியான மர வகைகள், தேர்ந்த தச்சர்கள் இருக்கும் அளவுக்கு இத்தொழில் நன்கு வளரவில்லை. கெட்டி, நீடில் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலை, அரவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை ஆகியவைகளின் மரச்சாமான்கள், மரப்பெட்டிகள் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மரவேலைத் தொழிற்சாலைகளைத் தொடங்கலாம். வேண்டுமான பிளைவுட் போன்றவைகளை, அண்டை மாநிலமான கேரளத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம். அலுவலகங்கள், பள்ளிகள் முதலியவைகளுக்கு வேண்டிய மரச்சாமான் தொழிற்சாலை தொடங்க வேண்டிய தேவையும் வெகுவாக உணரப்படுகின்றது.

உருளைக் கிழங்குகளை அனுப்பவும், மற்றும் இரசாயன உர வகைகளை வழங்கவும் பெருமளவில் கோணிப் பைகள் தேவைப்படுகின்றன. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு, இரசாயன உரங்கள் வழங்கும் வகையில் மட்டும் ஆண்டுக்கு இரண்டரை லட்சம் கோணிப்பைகள் வேண்டியிருக்கின்றன. சாதாரணச் சணல் கோணிப் பைகளை விட உறை பொருத்திய பைகளாக இருந்தால் இரசாயன உரக் கலவைகள் சேதமடையாமல் இருக்கும். எனவே உறை அமைந்த சணல் கோணிப் பைகள் தயாரிக்க ஒரு தொழிலகம் தொடங்குவது நல்லது. சணலைக் கல்கத்தாவி

லிருந்து வரவழைத்து இங்குப் பைகள் தயாரிக்கலாம்.

மாவட்டத்தில், அச்சு வேலைகள் சம்பந்தமாக பிளாக் செய்யும் பிரிவை ஏற்படுத்துவதும் அவசியமான ஒன்று.

மாவட்டத்தில் தற்சமயம் விவசாயக் கருவிகள் வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2·5 இலட்சம் பெறுமான கருவிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வேளாண்மை விரிவாக்க வேலைகள் காரணமாக இனி ஆண்டுக்கு ரூ. 3·5 இலட்சம் பெறுமான கருவிகள் தேவைப்படலாம். தற்சமயம் கேரளத்திலிருந்து கருவிகள் வரவழைக்கப்படுகின்றன. எனவே விவசாயக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றை அமைக்கலாம். இதற்காக இயந்திரங்கள் வகையில் ரூ. 43,000-மும், மூன்று மாதக் காலத்துக்கு நடை முதல் மூலதனத்துக்கு ரூ. 27,000-மும் ஆக ரூ. 70,000 முதலீடு தேவைப்படும்.

கட்டட வேலைகளுக்காக இரும்புச் சாமான்கள் தயாரிக்கும் வகையில் தமிழ்நாட்டில் 46 உற்பத்தித் தொழிற்சாலைகள் உள்ளன என்றாலும் அவ்வகையில் இந்த மாவட்டத்தில் ஒன்றுகூட இல்லை. இதற்கான தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தலாம். இதற்கு மொத்த மூலதனத் தேவை சுமார் ரூ. 1·65 இலட்சமாகும்.

1,350 கிலோ மீட்டர் (840 மைல்) நீளமுள்ள சாலைகள் உள்ள இந்த மாவட்டத்தில் 2,571 வண்டிகள் ஓடுகின்றன. சரக்குப் போக்குவரத்துக்கு ரயிலை விட, உந்துவண்டிகளை நாடுவோர்தான் அதிகம். இங்கு உந்துவண்டிகள் பழுது பார்க்கும் தொழிலகங்கள் போதுமான அளவு இல்லை. ஆகையால் பழுது பார்க்கக் கோவைக்குப் போகவேண்டியநிலையும் உள்ளது. எனவே நல்ல முறையில் உந்து வண்டிப் பட்டறைகள் தொடங்குவதற்கு வாய்ப்பு உள்ளது.

மாவட்டத்திலுள்ள மூன்று பெரும் தொழிற்சாலைகளான பிலிம் தொழிற்சாலை, ஊசிகள் தொழில் நிறுவனம், வெடி மருந்துத் தொழிற்சாலை, இனி ஏற்பட இருக்கும் புரோட்டீன் பொருட்கள் தொழிற்சாலை ஆகியவைகளுக்குத் தேவைப்படும் பொருட்களை வழங்கப் பல்வேறு துணைத் தொழில்களைத் தொடங்குவதற்குத்தேவையும் வாய்ப்பும் உள்ளன. தகரப் பெட்டிகள், தகர டப்பாக்கள், பாலித்தீன் பைகள் ஆகியவை இவ்வகையில் குறிப்பிடத் தக்கவையாகும். தேயிலைத் தோட்டங்களில் செடி வளர்ப்புக்குப் பாலித்தீன் பைகள் பெருமளவில் தேவைப்படுகின்றன.

போட்டோ காமிராக்கள் இணைப்புக்கான தொழிலகங்கள் தமிழகத்தில் ஏதும் இல்லை. நீலகிரி மாவட்டத்தில் புழுதி, தூசு இல்லாத சூழல், காமிரா தொழிற்சாலை தொடங்குவதற்கு ஏற்றதாக உள்ளது. எல்லா வகையான காமிராக்களையும் அண்டை மாநிலங்களின் தேவைகளையும் நிறைவு செய்யத் தக்க வகையில் இத்தொழிற்சாலையை அமைக்கலாம். எக்ஸ்-ரே கருவிகளையும் தயாரிக்கலாம்.

நீலகிரி மாவட்டத்தின் தட்ப நிலை, கைக்கெடிகாரத் தொழிற்சாலை தொடங்க ஏற்றதாக இருக்கின்றது. மாநிலத்தில் அத்தகையத் தொழிற்சாலை ஏதும் இல்லை. எனவே இம் மாவட்டத்தில் கைக்கெடிகாரத் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஆய்வுக் குரியதாகும்.


**தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.**

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை–1.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'    தொலைபேசி எண் : 20367

தபால் பெட்டி எண்: 226

| | (வருடத்திற்கு சதவீதம்) |
|---|---|
| கரண்ட் அக்கௌண்ட் | 0·50 |
| சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட் | 4·00 |
| **சீசன் டெபாஸிட்டுகள்—1,000-ம் அதற்கு மேலும்** | |
| 15 நாட்கள் | 2·00 |
| 46 நாட்கள் | 3·00 |
| **பிக்செட் டெபாஸிட்டுகள்—ரூ. 100-ம் அதற்கு மேலும்.** | |
| 91 நாட்கள் | 4·75 |
| 6 மாதங்கள் | 5.25 |
| 12 மாதங்கள் | 6·25 |
| 2 வருடங்கள் | 6·75 |
| 3 வருடங்கள் | 7·25 |
| 5 வருடங்கள் | 7·50 |

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1,000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கும் மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களின் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டி விகிதத்தை விட ½ சதவிகிதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள்:

| | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம். | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

**ஆர். கனகசபை,**
**தலைவர்.**

**பி. என். டி. சாரி,**
**செயலாளர்.**

# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | பை. |
|---|---|---|
| முந்திய இதழின் ஷி தொகை .. | 19,09,933 | 50 |
| மாவட்ட துணை ஆட்சியாளர், செங்கல்பட்டு. | 400 | 00 |
| துணை மாவட்ட ஆட்சியாளர், புதுக் கோட்டை. | 1,000 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், கன்னியாகுமரி. | 4,783 | 00 |
| ஷி | 1,260 | 50 |
| மாவட்ட ஆட்சியாளர் நீலகிரி .. | 150 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர் சேலம் .. | 250 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தென் ஆர்க்காடு | 5,115 | 00 |
| ஷி | 7,180 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், வட ஆர்க்காடு. | 6,457 | 84 |
| ஷி | 2,000 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி (காசோலை). | 415 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், குத்தாலம் (காசோலை). | 101 | 00 |
| தாசில்தார், மதுரை (காசோலை). | 215 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உதயன்குடி (காசோலை). | 900 | 00 |
| துணைப் பதிவாளர், கோவில்பட்டி (காசோலை). | 99 | 75 |
| மாவட்ட வனத்துறை அதிகாரி, பாளையங்கோட்டை (காசோலை). | 50 | 00 |
| திரு டி. கே. மூர்த்தி, பிலி. 1700 எப்.காய்.எம்.எஸ். பி-1 (இனூன்) போஸ்ட், ராயிங் நேபா (வழி) சதியா. | 10 | 00 |
| டாக்டர் எம். சக்திவேல், மருத்துவ அதிகாரி, பொது சுகாதார நிலையம், கயமோலி, திருநெல்வேலி (காசோலை). | 20 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தி. பரூர் (காசோலை). | 350 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், டி. பழூர் (காசோலை) | 350 | 00 |
| திருமதி அலமேலு அம்மாள், சந்திரா நகர். | 35 | 00 |
| திரு என். வீராசாமி, எம.எல்.ஏ., ஆர்க்காடு. | 15 | 00 |
| திருமதி பி. ஏ. பெரியநாயகி, நெ. 5, சர் தியாகராய ரோடு, சென்னை-17. | 201 | 00 |
| வனஜா ஜெயராமன், 33, பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி, ரோடு. | 101 | 00 |
| குமாரி டி. உஷா, 306, குன்னமிட்டா தெரு, திருப்பத்தூர். (காசோலை). | 15 | 00 |
| தி தமிழ் சாம்பர் ஆப் காமர்ஸ் (காசோலை). | 1,051 | 00 |
| மெட்ரூஸ் டையோசிசன் கவுன்சில் (காசோலை). | 10,000 | 00 |
| மணியார்டர் மூலம் வசூலான தொகை | 20 | 50 |
| ஆனந்த் கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட் மெண்டிலிருந்து வசூலானவை. | 23 | 00 |
| ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் தென்காசி. (காசோலை) | 450 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தென்காசி. (காசோலை), | 100 | 00 |
| தாசில்தார், திருநெல்வேலி (காசோலை). | 750 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஊதாங்குடி (காசோலை). | 200 | 00 |
| திரு தங்கராஜ முதலியார், ஸ்ரீசெல்லியம்மன் கோவில் டிரஸ்டி, சிதம்பரம். | 25 | 00 |
| கல்லக்குடி, தி.மு. கழகம் .. .. | 5 | 00 |
| நிர்வாக அலுவலர், ஆலங்குடி பேரூராட்சி, திருச்சி மாவட்டம். | 101 | 00 |
| ஆணையர், கருங்குளம், ஊராட்சி ஒன்றியம், செய்தங்கநல்லூர். | 1,690 | 00 |
| ஆட்சியாளர், கோயம்புத்தூர் .. | 47,616 | 00 |
| எம். சம்பந்தம், (40-வது வட்டம், எஸ்.ஐ.டி.எ. பொருட்காட்சியின் முடிவில் கொடுத்தது). | 1,001 | 00 |
| லட்சுமிபதி, நகராட்சி உறுப்பினர் | 10 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், முத்துப் பேட்டை. | 250 | 00 |

| | | |
|---|---|---|
| விவசாய வருமான வரி உதவி ஆணையர், நெல்லை. | 245 | 00 |
| துணைப் பதிவாளர், நிலவளவங்கி, மதுரை. | 2,950 | 00 |
| துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், காஞ்சிபுரம். | 490 | 00 |
| துணைப் பதிவாளர், காயல்பட்டிணம் | 10 | 00 |
| திரு. எம். சதாசிவராவ், தலைமை ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, பண்ணந்தூர், தர்மபுரி மாவட்டம். | 30 | 00 |
| துணை வணிகவரி, அலுவலர். நான்குநேரி | 400 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், திருச்சிராப்பள்ளி. | 16,222 | 62 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொரடாச்சேரி. | 750 | 00 |
| துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், திண்டுக்கல். | 1,550 | 00 |
| ஆட்சியாளர், இராமநாதபுரம் (மதுரை) | 24,883 | 50 |
| தலைமையாசிரியர், பி. எம். உயர்நிலைப் பள்ளி, பழனிச் செட்டிப்பட்டி, மதுரை மாவட்டம். | 25 | 00 |
| உரிமையாளர், பாலஸ்டிவேல்ஸ், திருநெல்வேலி சந்திப்பு. | 95 | 02 |
| நிர்வாக அலுவலர், பன்னைக்காடு ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டம். | 200 | 00 |
| தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, வகராயன் பாளையம், கோவை மாவட்டம். | 50 | 00 |
| செயலாளர், ஆல்காட்டு, அரசினர் இலவசப் பள்ளி, அடையாறு, சென்னை. | 250 | 00 |
| ஆணையர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை, செங்கல்பட்டு மாவட்டம். | 1,100 | 00 |
| தில்லை கங்காநகர் நலச் சங்கம், சென்னை-6 (முதல்வர் அலுவலக மூலம்). | 10 | 00 |
| இ. ரங்கநாதன், நகராட்சி உறுப்பினர், பார்த்தசாரதி நகர், ஆதம்பாக்கம், சென்னை. | 101 | 00 |
| ஆலந்தூர் நகராட்சி ஊழியர் நலச் சங்கம், ஆலந்தூர். | 101 | 00 |
| தமிழ் நாடு கடை நிலை அரசு ஊழியர் சங்கம், சேப்பாக்கம், சென்னை-5 | 101 | 00 |
| தொழிலாளர் நல அமைச்சர் அலுவலக மூலம். | 6 | 81 |
| எஸ். தியாகராஜன், வழக்கறிஞர், நாகப்பட்டிணம். | 51 | 00 |
| இயக்குநர்கள், குளோப் தியேட்டர்ஸ், சென்னை-2. | 101 | 00 |
| உரிமையாளர், சரவண தியேட்டர், சென்னை-12. | 101 | 00 |

| | | |
|---|---|---|
| எம். ஜி. ஆர். மூலம் ஒருவர் | 5 | 00 |
| கெ. காளிமுத்து, உதவியாளர், உள்துறை தலைமைச் செயலகம். | 5 | 00 |
| புலவர் டி. வடிவேலன், எம். ஏ., தூய யோவன் உயர்நிலைப் பள்ளி, இருங்களூர், திருச்சி மாவட்டம். | 20 | 00 |
| எஸ், ஸ்ரீராமு, அரசினர் உயர்நிலைப் பள்ளி, கோவில்பட்டி. | 2 | 00 |
| தலைவர், பொன்மனச் செம்மல், எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம், புதுவயல், இராமநாதபுரம் மாவட்டம். | 6 | 00 |
| மாணவர் திராவிட முன்னேற்றக் கழகம், என்.வி.என். செல்வம் மூலமாக. | 344 | 44 |
| தமிழ்நாடு மின்வாரியம் | 2,02,200 | 00 |
| நிர்வாக அலுவலர், டவுன் பஞ்சாயத்து, அதிராம் பட்டிணம். | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம். | 860 | 00 |
| துணை வணிக வரி அலுவலர், அம்பாசமுத்திரம். | 500 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆர்க்காடு. | 700 | 00 |
| நிர்வாக அலுவலர், டி. பி. உடையார் பாளையம். | 101 | 00 |
| துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், சிவகங்கை. | 442 | 00 |
| ரெவின்யூ டிவிஷனல் அலுவலர், காஞ்சிபுரம். | 125 | 00 |
| சோளிங்கர் கூட்டுறவு நகர்ப்புற வங்கி, லிமிடெட். | 50 | 00 |
| என். வி. என். செல்வம் (எ. எல். எஸ். புரடக்ஷன்ஸ்). | 100 | 00 |
| கார்போரண்டம் யூனிவர்சல், லிமிடெட். | 500 | 00 |
| மதராஸ் ரப்பர் பாக்டரி | 500 | 00 |
| கெ. சி. பி., லிமிடெட், திருவொற்றியூர். | 500 | 00 |
| இ. ஐ. டி. பாரி, லிமிடெட் | 500 | 00 |
| பின்னி லிமிடெட் | 500 | 00 |
| பெஸ்ட் அன் கம்பெனி, பிரைவெட், லிமிடெட். | 500 | 00 |
| பி. நாகிரெட்டி, விஜயா இண்டர் நாஷனல். | 20,000 | 00 |
| என். வி. என். செல்வம், சென்னை மாவட்ட தி.மு.க மாணவர் சங்கம். | 1,001 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செம்பொன்னார் கோயில், தஞ்சை மாவட்டம். | 1,927 | 00 |
| தலைமையாசிரியர், இந்து உயர்நிலைப்பள்ளி, மதுராந்தகம். | 100 | 00 |
| நூலகர், கிளை நூலகம், மாதவரம் | 5 | 50 |

| | | |
|---|---|---|
| அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமை கோட்டம். | 10 | 00 |
| தலைமையாசிரியர், பரப்பாடி .. .. | 12 | 50 |
| தலைமையாசிரியர், ராதாபுரம் .. .. | 12 | 50 |
| மாவட்டக் கல்வி அலுவல், திருநெல்வேலி தெற்கு மூலம் தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, மூலக்கடைப்பட்டி. | 12 | 50 |
| தலைமையாசிரியர், திருக்குறுங்குடி .. | 12 | 50 |
| தலைமையாசிரியர், ஏர்வாடி .. .. | 12 | 50 |
| தலைமையாசிரியர், நாங்குநேரி .. | 12 | 50 |
| தலைமையாசிரியர், சி. சி. எம்எச். எஸ். உடன்குடி. | 25 | 00 |
| தலைமையாசிரியர், ஸ்ரீ பரம கல்யாணி உயர்நிலைப்பள்ளி, ஆழ்வார்க்குறிச்சி. | 17 | 50 |
| தலைமையாசிரியர், பண்ணை வெங்கடராமய்யர் உயர்நிலைப்பள்ளி, கோபாலசமுத்திரம். | 25 | 00 |
| தலைமையாசிரியர், பி. எல். டபுள்யூ. ஏ. உயர்நிலைப்பள்ளி, விக்ரமசிங்கபுரம். | 17 | 50 |
| தலைமையாசிரியர், தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம். | 25 | 00 |
| தலைமையாசிரியர், செயின்ட் மேரி உயர்நிலைப்பள்ளி, விக்ரமசிங்கபுரம். | 17 | 50 |
| தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, சேரன்மாதேவி. | 12 | 50 |
| தலைமையாசிரியர், சொக்கலால் உயர்நிலைப்பள்ளி, முக்கூடல். | 25 | 00 |
| தலைமையாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, கூடங்குளம். | 10 | 00 |
| தலைமையாசிரியர், மருதகுளம் .. | 10 | 00 |
| தலைமையாசிரியர், இட்டமொழி .. | 12 | 50 |
| தலைமையாசிரியர், செயின் ஜோசப் உயர்நிலைப்பள்ளி, குட்டப்புளி. | 17 | 50 |
| தலைமையாசிரியர், தாலுக் வித்யாலயா உயர்நிலைப்பள்ளி, அம்பாசமுத்திரம். | 25 | 00 |
| தலைமையாசிரியர், சத்திரம் உயர்நிலைப்பள்ளி, கடையம். | 17 | 50 |
| போலீசு சூப்பிரண்டண்டு, திருநெல்வேலி | 1,000 | 00 |
| வாணி பார்மஸி கெமிஸ்ட்ஸ் அண்டு டிரக்கிஸ்ட்ஸ், மேற்கு ரத வீதி, சிதம்பரம். | 1,002 | 00 |
| மாணிக்கம், ஹைதராபாத் .. .. | 11 | 00 |
| தலைவர், டி. என். சி. டி. சர்வீஸஸ், அசோசியேஷன், வேலூர். | 501 | 00 |
| கல்யாணி சுந்தரம், ஸ்ரீனிவாச காந்தி நிலையம். | 101 | 00 |
| அரிமா சங்கம், ராசிபுரம் .. .. | 100 | 00 |

| | | |
|---|---|---|
| (ஒரு நபர்)ஆந்திர பாங்கு செக் 705808 (மூலம்) .. | 5,000 | 00 |
| கெ. செவன் வெள்ளன் கோவில், வேப்பம் பாசாயம் அஞ்சல், கொளப்பலூர் வழி, கோவி. | 5 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி .. | 1,830 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவேலங்காடு. | 625 | 00 |
| நிர்வாக அலுவலர், ஆர்க்காடு பேரூராட்சி. | 200 | 00 |
| கோட்டாட்சித் தலைவர், கோவில்பட்டி .. | 1,150 | 00 |
| புங்கனூர் கிராம அதிகாரி, தஞ்சை மாவட்டம். | 51 | 00 |
| பொறையனூர் பொதுக்கூட்டத்தின் மூலம் பொது மக்கள் அன்பளிப்பு. | 5 | 00 |
| நிர்வாக அலுவலர், பேரூராட்சி அன்னவாசல், திருச்சி மாவட்டம். | 100 | 00 |
| மாவட்டப் பதிவாளர், திருநெல்வேலி மாவட்டம். | 1,638 | 30 |
| மாவட்டக் கல்வி அலுவலர், கோவில்பட்டி. | 745 | 00 |
| ஸ்ரீ அரையர், ஸ்ரீ விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம், சரபோஜிபுரம், துளசியாபட்டினம், திருத்துறைப்பூண்டி, தஞ்சை மாவட்டம். | 100 | 00 |
| உதவி இயக்குநர், தொழில், வணிகத் துறை, திருநெல்வேலி. | 207 | 00 |
| தாசில்தார், செங்கோட்டை .. .. | 300 | 00 |
| நிர்வாக அலுவலர், ஸ்ரீ கற்பகநாத சுவாமி தேவஸ்தானம், திருத்துறைப்பூண்டி. | 250 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம். | 350 | 00 |
| வணிக வரி துணை அலுவலர், பாளையங்கோட்டை. | 2,177 | 75 |
| கோட்ட அலுவலர், என். எம். இ. பி. பாளையங்கோட்டை. | 20 | 00 |
| என். உமாபதி, கூட்டுறவு அச்சகம் தஞ்சாவூர். | 3 | 00 |
| கோட்ட வருவாய்த்துறை அதிகாரி சேரன்மாதேவி, திருநெல்வேலி மாவட்டம். | 11,272 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், பருதூர் | 800 | 00 |
| வேளாண்மை உதவிப்பொறியாளர், பிரைவேட் டியூப் வெல்ஸ் ஸ்கீம், திருவள்ளூர். | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவாரூர். | 1,250 | 00 |
| மொத்தத் தொகை.. | 23,17,394·53 | |

# ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

அவளது முட்டை வடிவ முகத்தின் மீதே நிலைகுத்தி நின்று விட்டன மாதவனின் கண்கள்.

திகைப்பினால் திறந்தவாய் திறந்திருக்க, அவனிடமிருந்து பறந்து வந்த பார்வையின் கூர்மையை அழுத்தத்தை—அந்தப் பாவையால் தாங்கவோ சந்திக்கவோ முடியவில்லை போலும்!

அவளது விழிகளிலே மிரட்சி தெறித்தது; அச்சம் அலைமோதியது; 'என்ன இப்படிப் பண்பாடு இல்லாமல் வெறிக்கப்பார்க்கிறானே!' என்கிற அருவருப்பும் நிழலாடியது.

அவள் வேறு திசை நோக்கித் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அதோடு, அந்த இடத்தை விட்டே நழுவவும் தலைப்பட்டு விட்டாள் மெதுவாக.

மாதவனோ . . . . .

தன் அருகே மாலையுங் கழுத்துமாய் நிற்கும் தேன்மொழியைக் கூட மறந்து விட்டான்; அவளையும் தன்னோடு அழைத்துச்செல்ல வேண்டும் என்கிற உணர்வையும் அவன் இழந்து விட்டான். எதிரே வந்தவர்களையெல்லாம் இடித்துத் தள்ளிக் கொண்டு அந்தப் பெண்ணைப் பிடித்து விட்டால் போதும் என்கிற ஒரே முனைப்போடு 'சரேல்' என்று பாய்ந்தோடினான்.

ஒரு செம்பருத்திச் செடியை ஒட்டி மறைவாக விரைந்துகொண்டிருந்த அவளுக்குப் பின்புறமாகவே சென்று தன் வலிய கரத்தினால் அவளது தோளை அழுத்திப் பற்றி நிறுத்தினான். அவளது முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பியவாறே,

"அக்கா . . . ! வள்ளியக்கா . . . . ! ஏன், என்னைப் பார்த்தும் பார்க்காத மாதிரி போறே?" —என்று கேட்டான் உணர்ச்சி பொங்க.

அவளோ மருண்டு போய் மிரள மிரள விழித்தாள். அவனுடைய கரம் பட்டதால் உண்டான அதிர்ச்சியினால் அவளது மெல்லுடல், குட்டை நீரில் தவறிவிழுந்துவிட்' கோழியைப் போலத் 'தட

## 8. அக்காள் எங்கே?

தட' வென்று ஆடிற்று— நடுங்கிற்று. 'குப்'பென்று வேர்வை கொப்புளித்து அவளது முகமெங்கும் சிறு சிறு மாதுளை முத்துக்களாகப் பளபளத்தது.

"என்னக்கா அப்படிப் பார்க்கிறே? என்னை அடையாளம் தெரியலையா? நான்தான் மாதவன்!" —அவனது குரலிலே துயர வெள்ளத்தின் செருமலோசை பிசிறு விழுந்து இரைந்தது.

ஆனால் அந்தப் பெண், அவனுக்காக இரக்கப்பட்டு எந்த விடையும் கூறவில்லை. அதே சமயம் அச்சத்தின் உச்சத்திற்கே சென்றவளாக,

"ஏ, மல்லப்பா! மல்லப்பா!" என்று உயிரைக் கொடுத்து உரக்கக் கூறினாள். தொடர்ந்து கன்னட மொழியிலே எதேதோ கத்தவும் கத்தினாள்.

அடுத்த நொடியே, அவளது அழைப்புக் குரலுக்கு அடைக்கலக் குரல் கொடுத்தவாறே முரடன் ஒருவன் எங்கிருந்தோ மின்னல் வேகத்திலே ஓடோடி வந்தான். என்ன நடந்தது—யாது காரணம்—என்றெல்லாம் அவன்விசாரிக்கவும் இல்லை— யோசிக்கவும் இல்லை. அந்தக் காரிகையின் கன்னடப் பேச்சைக் கேட்டதுமே மலைத்துப் போய் நின்றிருந்த மாதவனின் முகத்தை நோக்கி ஓங்கி ஒரு குத்து விட்டான்.

அந்த ஒரு குத்திலேயே சற்று முன் வெற்றிக் கொடி நாட்டி விட்டு வந்திருந்த நம் விளையாட்டு வீரன், தடுமாறிப்போனான்; தள்ளாடியும் விழுந்துவிட்டான் பின்புறமாக!

அவன் நினைத்திருந்தால்! உடனே எழுந்தோடி வந்து அந்த முரடனை நன்றாகப் புரட்டியெடுத்திருக்கலாம். அப்படியொன்றும் உடல் வலிமையிலே கடன் வாங்க வேண்டிய அளவுக்குப் பஞ்சம் இல்லையே நம் மாதவனுக்கு!

ஆனால், இயற்கையாகவே, எதையும் ஆழமாகச் சிந்தித்துத் தன்னுடைய எந்த ஒரு செயலுக்கும் பின் விளைவு என்னவாக இருக்கும் என எண்ணக்கூடிய நிதானப் போக்கு உடையவன் அல்லவா

அவள்? அதிருடன், எவனோ ஒருத்தியை தன் தமக்கை என்று தவருகத்தொட்டுவிட்டோமே என்கிற குற்ற உணர்வும் சேர்ந்து கொண்டு விட்டது. அதனுல் எதிர்த்துத் தாக்கிவிட வேண்டும் என்னும் ஆத்திரமோ அவசரமோ இன்றி அவன் அமைதியாகவே எழுந்திருக்க முயன்ருன்.

ஏதும் செய்யாத பூனே என்று தெரிந்து விட்டால் எலிக்குக் கூடப் 'புலிப்பாய்ச்சல்' வந்து விடாதா?

அப்படித்தான் மாதவனின் அமைதிப் போக்கு மேலும் மனத் துணிவைக் கொடுத்து விட்டது அந்த முரடனுக்கு. அவன் மறுபடியும் தாக்குதல் கொடுக்கப் பாய்ந்து வந்தான்.

அதற்குள் கும்பல் கூடிவிட்டது தேன்மொழியும் ஓடிவந்து விட்டாள். மாதவனும் எழுந்து விட்டான்.

அடுத்த குத்து விடுவதற்கு அந்த ஆத்திரக்காரன் கையை முகத்தில் பொழுது மாதவன் தன் மீது குத்து விழாத படிதடுத்துக் கொண்டதோடு அவனுடைய கையை அப்படியே இறுக்கிப்பற்றி வளைத்து விட்டான். அவனேத் திமிற விடாமல் தன் பிடியை வலுப்படுத்தியவாறே,

''ஆத்திரப் படாதீங்க, நண்பரே! மன்னித்து விடுங்கள்; என் தமக்கை என்று தவருகக் கருதித் தான் இந்தப் பெண்ணை நெருங்கினேனே ஒழிய வேறென்றும் இல்லை''

—என்று தன் செய்கைக்கு விளக்கமும் அளித்தான் ஆங்கிலத்தில்.

முரடனே, அந்த வார்த்தைகளைச் சரியாகத்தான் காதில் வாங்கிக் கொள்ள வில்லையோ, இல்லை ஆங்கிலமே புரியவில்லையோ! எப்படியோ மீண்டும் ஒரு குத்து விட்டு விட்டான் மாதவனை நோக்கி. அவன் கழுத்தில் கிடந்த ரோஜாப்பூ மாலையையும் 'வெடுக்' கென்று பிய்த்து எறிந்தான்.

உடனே கும்பலில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு வாட்ட சாட்டமான ஆள், அவனைப் பின்புறமாக வந்து பிடித்துக் கொண்டார்.

''அவர்தான், மன்னிப்புக் கேட்டுவிட்டாரே! அதற்குப் பிறகு மறுபடியும் நீ தாக்குவது முறை இல்லையே!''

—என்று அவன் மனத்தில் தைக்குமாறு எடுத்துச்சொன்னர். 'ஆமாம், ஆமாம்' என்று மற்றவர்களும் ஒத்துப் பாடினர்.

அந்தக் குட்டிக் கலகம் ஒருவாருக ஓய்வதற்குள், தேன்மொழி அடைந்த அதிர்ச்சிக்கு——பதற்றத்திற்கு—அளவே இல்லை



கண்ணம்பாடி அணைக்கட்டின் கவின் எழிலைக் காணப் போகும் பொழுதெல்லாம், அங்குள்ள ஆடம்பரமான உண்டி விடுதிக்குள் மாதவனை இட்டுச் சென்று சுவையான விருந்தளிப்பது தேன்மொழிக்கு வழக்கம்.

இன்றோ . . . . ?

அந்த நினைப்பே எழவில்லைஅவளுக்கு. இருவரும், பூங்காப் பகுதிகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டுக் கார் அருகே வருகிற வரை எதுவுமே பேசிக்கொள்ளவும் இல்லை.

காரை அடைந்ததும், ''நானே ஓட்டுகிறேன்'' என்றாள் தேன்மொழி.

மாதவன் மறுமொழி ஏதும் பகரவில்லை, பேசாமல் முன் இருக்கையில் போய் அமர்ந்தான்.

படகு போன்ற அந்த 'பிளைமவுத்' கார், மைசூரை நோக்கிப் பறந்தது.

அதைவிடக் காற்று வேகத்தில் தேன்மொழியின் எண்ணங்களும் பறந்தோடின.

காரை ஓட்டியவாறே தன் அருகில் அமர்ந்திருக்கும் மாதவன் மீது தன் ஓரக் கண்ணை அவள் ஓடவிட்டாள்.

அவன் கடுமையான காய்ச்சலிலிருந்து மீண்ட களைப்புக்கு இலக்கானவனைப் போலத் தொய்ந்து, சரிந்து உட்கார்ந்திருந்தான். தலை அண்ணாந்திருந்தது; இமைக் கதவுகளோ மூடிக் கிடந்தன. முகம் முழுவதுமோ சோர்வு, துயரம் இரண்டினாலும் ஏற்பட்ட இருளின் நிழல்.

தேன்மொழியின் நெஞ்சினுள்ளே நினைவுகள் இவ்வாறு பின்னலிட்டன.

''. . . என்னதான் காணாமல் போயிருந்தவளைக் காண நேர்ந்த போதிலும், தன் சொந்தத் தமக்கைக்கும் வேறொரு அந்நியப் பெண்ணுக்கும் உள்ள வேறுபாடு கூடத் தெரியாமல் போகுமா என்ன? அந்த அளவுக்கு இவரது சிந்தனை எப்படித் திசை மாறிற்று? . . . எவ்வளவுதான் பாச வெள்ளம் பெருக்கெடுத்தாலும் அப்படித்தான் சின்னப் பிள்ளை மாதிரி இவர் துள்ளிக் குதித்து ஓட வேண்டுமா? அவள் தோளையும் போய்த் தொட்டிழுக்க வேண்டுமா? அதற்காக ஆசு வட்டிருக்கவும் வேண்டுமா!

. . . . சே! கணப் பொழுதில எத்துணை பெரிய அவமானமே நிகழ்ந்து விட்டது.''

—கார், ஒரு திருப்பத்திற்கு வந்து வளைந்தது.

அந்தக் கன்னடப் பெண்ணின் தோற்றத்தைப் பற்றியும் தேன்மொழியின் எண்ணங்கள் இழைந்தன.

'அவளுக்கென்ன அப்படியொரு சிலிர்த்த முகம்—சேதாரம் அடைந்த உடல்?

மடந்தையரின் முகத்தை மலருக்கு- குறிப்பாகத் தாமரை மலருக்கு — ஒப்பிடுவதுதான் கவிஞர்களின் மரபு. ஆனால் அந்தக் கன்னடக்காரியின் முகமோ 'காலிஃப்ளவரை'யே தேன்மொழிக்கு நினைவூட்டிற்று. 'காலிஃப்ளவர்' கறி பண்ணித் தின்பதற்குச் சுவையாக இருக்கலாம். புழுக்கள் நெளிகின்ற அதுவே ஒருத்தியின் முகமாகவும் அமைந்துவிட்டாலோ..!



வதே மாருத கசப்பைக் கொடுத்தது—குமட்டிக் கொண்டும் வந்தது—தேன்மொழிக்கு.

எதிரே ஒரு பேருந்து வந்தது. அதை ஓட்டுகின்றவன், தலையைத் தாழ்த்திச் சாலையை அடைத்துக் கொண்டு ஒதுங்காமல் காரை ஓட்டுகிருளே என்பதற்காக அவளைப் பார்த்து ஏதோ கன்னட மொழியில் வசை பாடி விட்டு மறைந்தான்.

அவன் சென்ற திக்கையே முறைத்துப் பார்த்து விட்டு வண்டியை மேலே எடுத்தாள் அவள்.

தேன்மொழியின் ஓரப்பார்வை மீண்டும் மாதவன் பக்கம் விழுந்தது. அவனது விழிகள் இன்னும் மூடியே இருந்தன.

'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்திலே வெற்றிக்கொடி நாட்டி விட்டு இருவரும் கண்ணம் பாடிக்குவரும்பொழுது எவ்வளவு உற்சாகமாக அவன் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வந்தான்!

அப்பொழுது அவன காரை ஓட்டிஞன். அவள் அவனை ஒட்டி அமர்ந்திருந்தாள். அவளது வாளிப்பான வாழைக் குருத்துக் கரம் அவனது கழுத்தை வளைத்துத் தலை முடியைக் கோதி விளையாடியது. ஆண்மையும் அழகும் பின்னிப் பிணைந்த அவனது முகத்தையே அவள் பார்வையால் பருகித் திளைத்தாள்; அவனும் காரை ஓட்டிய வாறே அவளை மெள்ளத் திரும்பிப் பார்ப்பதும் மென்னகை புரிவதும் சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளைக் கூறி அவளைச் சிரிக்கவைப்பதுமாக இருந்தான்.

இப்போதோ . . . . ?

தேன்மொழி பெருமூச்செறிந்தாள்; இதயம் விம்மிப் புடைக்கிறது.

அதுவும் அவனுடைய தமக்கையும் அந்தக் கன்னடக்காரியைப் போலத்தான் இருப்பாளோஎன்று எண்ணிய பொழுது......

கார் மைசூர் வந்து விட்டது.

மாதவனும், தேன்மொழிதட்டி எழுப்பாமலே தானுகக் கண்களைத் திறந்து கொண்டு விட்டான்.

*    *    *

அரண்மனை மாளிகை போல் அழகாகத் தோன்றும் அந்தப் பெரிய உணவு விடுதியில்—ஓட்டலில் — அவர்கள் நுழையும் பொழுதேஅவர்களை வழக்கமாகக் கவனித்துக் கொள்ளும் 'பணிப் பையன்' — 'கால்பாய்'—எதிர்ப் பட்டு விட்டான்.

''எப்போதும் போல, இட்லி, சப்பாத்தி, பால்-தான்''

—என்று அவனுக்குக் கட்டளையிட்டு விட்டு தேன்மொழி மாடிப் படிகளில் ஏறிஞள் மாதவனைப் பின்தொடர்ந்து.

அங்கே அவர்கள் ஒன்ருகத் தங்கியிருக்கிருர்கள் என்று பெயரேயொழிய, இருவருக்கும் தனித் தனியாகத் தான்—ஆனுல், அடுத் தடுத்து— அறைகள் . . . . .


# நெய்வேலியும்...நமது நாடும்

நெய்வேலி யூரியா:
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் கூட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

மின்விசை:
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.



கட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ
வீடுகள், ஓட்டல்கள், பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.

தார்ப்பொருள்கள்:
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலென்ட் ஃபினுல் கலவை.

நெகோலின்:
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்.,
நெய்வேலி—1

FDSNLC946TM

உள்ளங்கள் ஒன்றுப் பிணைந்த பிறகு மற்றவர்கள் என்ன 'அலர்' தூற்றினால்தான் என்ன என்கிற துணிச்சலாலோ என்னவோ தேன்மொழி கூட, இரண்டுபேர் தங்கக் கூடிய ஒரே அறையை எடுத்துக் கொள்ளலாமே என்றாள். ஆனால் மாதவன் அதற்கு உடன்படவில்லை.

''. . . ஏன், என்னைக் கண்டு பயமா?' என்று கிண்டலாகக் கூடக் கேட்டு விட்டாள் அந்தக் குறும்புக்காரி.

''உன்னைக் கண்டு எனக்குப் பயம் இல்லை; என்னைக் கண்டே தான் எனக்கு இப்போது பயம்! ஏன் தெரியுமா? உன் அழகு இருக்கிறதே அது ரொம்பப் பொல்லாதது; உணர்வுகளோ இந்த அழகைவிடப் பொல்லாதவை! மணமாகிற வரை எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது இருவருக்குமே நல்லது அல்லவா?''—என்று நகைத்தான் மாதவன்.

அதற்கு மேல் வற்புறுத்த அவள் என்ன பெண்மைச் செருக்கே இல்லாதவளா? எனவே தனித் தனியாகவே இருவரும் தங்கினர். வெளியே கிளம்பும் போது மட்டும் இருவரையும் ஒன்றாகவே பார்க்கலாம்.

இப்போது, கண்ணம்பாடியிலிருந்து திரும்பிய அவர்கள் தங்கள் தங்கள் அறையினுள் நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டளையிடப்பட்டவாறே ''பணிப் பையன்' சிற்றுண்டியைக்கொண்டு வந்து வைத்து விட்டான்.

தேன்மொழிக்கு என்னவோ அதை அருந்துவதற்கு மனமே செல்லவில்லை. மாதவனைப் பற்றி நினைவுகள் அவளைப் பாடாய்ப் படுத்தின. அவன் எப்படி இருக்கிறான் என்று பார்த்து வரவேண்டும் என்கிற ஓர் ஆவல் அவளை உந்தித் தள்ளியது.

அவனுடைய அறைக் கதவு உள்தாழ் போடப்படாமல் சாதாரணமாகவே சாத்தப்பட்டிருந்தது.

அதைத் தள்ளிக் கொண்டு தேன்மொழி உள்ளே சென்ற போதோ . . . . .

கட்டில் மெத்தையில் குப்புறப் படுத்துக் கொண்டு மாதவன் குலுங்கிக் குலுங்கிஅழுதவண்ணம் இருந்தான்.

சிற்றுண்டியும் பாலும் தீண்டுவாரற்று ஆறிக் கிடந்தன.

தேன்மொழி அவன் அருகே சென்றாள். அவனுடைய தோளைத் தொட்டாள், பின்னர் தலைமாட்டுப்பக்கம் உட்கார்ந்து அவன் முகத்தை மல்லாத்தினாள்.

கண்ணீர் அருவி பொங்கிப் பெருகி அவனது கன்னங்களைச் சதுப்பு நிலமாக மாற்றிக் கொண்டிருந்தது. அந்த அவலத் தோற்றத்தைக் கண்டதும் அவளுக்கும் தன்னை மீறி அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

மிகுந்த வலுக்கட்டாயத்தோடு அதனை அடக்கிக் கொள்ள முயன்ற அவள்,

''இப்போ என்ன குடி முழுகி விட்டது? எதுக்கு இப்படிநீங்க பச்சைக் குழந்தை மாதிரி அழணும்?''



—என்று ஆறுதல் அளிக்கும் தோரணையில் கேட்டாள்.

அந்த வார்த்தைகள் அவனது துயரப் பேராற்றின் கரையை மேலும் கெந்தி விடுவதாகவே அமைந்து விட்டன.

''அழாமல் என்ன செய்வேன், தேன்மொழி? நான் அழாமல் என்ன செய்வேன்? . . . அவள் மட்டும் கன்னடம் பேசாமல் இருந்திருந்தால் அவள் என் அக்காவேதான்! சந்தேகமே இல்லை, அவள் என் அக்காவே தான்! அதே முகம்—அதே கண்கள்— கீழுதட்டுக்கு அடியிலே அதே கறுப்புப் பரு—அதே கைகள்! . . என் அக்காவையே அச்சிலே வார்த்தெடுத்த மாதிரி இன்னொரு பிறவியும் இந்த உலகத்திலே இருக்க முடியும் என்று என்னால் நம்பவே முடியவில்லை, தேன்மொழி, நம்பவே முடியவில்லை! . . . . .''

—அவன் குமுறிக் குமுறிக் கதறிப் புலம்புவதைக் கண்டு அவளுக்கே பரிதாபமாக இருந்தது, பாகாகவும் கரைந்து அவளது உள்ளம்.

அவனை எவ்வாறு தேற்றுவது என்றே தெரியாமல் திணறினாள் அவள்.

சில வினாடிகள் சுடுகாட்டின் அமைதியிலே கரைந்தன.

பின்னர், தன்தொண்டையைக் கனைத்துக் கொண்ட தேன்மொழி

''உங்க அக்கா சின்ன வயதிலேயே காணாமல் போய்விட்டாங்களா?''

—என்று பரிவோடு கேட்டாள்.

''அதை ஏன் கேட்கிறாய்? . . . அது பெரிய கதை! . . . ஆனால் அதை உனக்கும் நான் இப்போதேசொல்லிவிட வேண்டியது தான்'' என்று நிமிர்ந்து உட்கார்ந்தான் மாதவன்.

(வளரும்)


விளைச்சலைப் பெருக்கி
வளமுடன் வாழ்வீர்!
பாங்க் ஆஃப் பரோடா
தரும்
விவசாயக்
கடன் உதவியால்!
உங்கள் நிலம் செழித்து வளம் கொழிக்க, நல்ல விதைகள், சிறந்த உரம், நவீன பண்ணைக் கருவிகள் ஆகியவை அவசியம். ஆனால் அவற்றை வாங்கப் பணம் வேண்டும். அந்தப் பணத்தை கடனாகத் தருகிறது பாங்க் ஆஃப் பரோடா. அதனைப் பெற்று, வேண்டியவற்றை வாங்கி, வளம் காண்பீர்!
நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ
பாங்க் ஆஃப் பரோடா
தலைமைக் காரியாலயம்: மாண்ட்வி, பரோடா.
அநேகமாக இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாநிலத்துக்கும் சேவை செய்ய, 550-க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. மற்ற கிளைகள்: யு.கே., கிழக்கு ஆப்பிரிக்கா, மொரீசு, பிஜி தீவுகள், மற்றும் கயானா.
BANK OF BARODA




## 19. வெல்லும் உலகை விரைந்து

துப்பாக்கி ஈட்டி சுருட்கத்தி பீரங்கி
அப்பொழுதே கொல்லுமணுக் குண்டெல்லாம்—எப்பொழுதும்
வெல்லாவே இவ்வுலகை வேல்விழியே ! அன்பொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—நாகு. ஆறுமுகம், அரிக்காரன்வலசு

தேனாய்ச் செழும்பாகாய்த் தித்திக்கும் இன்னமுதாய்
ஊனாய் உயிர்வளர்க்கும் ஒண்டமிழ்தான்—வானார்ந்த
எல்லை யுளமட்டும் எங்கும் புகழ்பரப்பி
வெல்லும் உலகை விரைந்து.

—மா. கணபதி, திருச்செங்கோடு.

கடமையுடன் கண்ணியமும் கட்டுப்பா டுற்றே
திடமுடனே சேவைகளைச் செய்தால்—உடனடியாய்
எல்லோரும் வாழ்ந்திடலாம் என்றுரைத்த அண்ணாசொல்
வெல்லும் உலகை விரைந்து.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

பேதங்கள் நீங்கிப் பிறந்தோர் அனைவருமே
ஏதமின்றி வாழும் எழிலடைந்து—சாதனைசெய்
வல்லார் கலைஞர் வழியில் தமிழகந்தான்
வெல்லும் உலகை விரைந்து.

—ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

கலம்விட்டு நாகரிகக் காலூன்றி ஞாலம்
வலம்வந்த வண்டமிழர் மாண்பை—உலகெல்லாம்
சொல்லுவதைக் கேட்டுச் சுவைப்பீர் ! தமிழ்க்கீர்த்தி
வெல்லும் உலகை விரைந்து.

—க. குணசேகரன், சென்னை-61.

சந்திரனும் செவ்வாயும் சாத்திரக்கோள் என்பதெல்லாம்
விந்தை யுலகைஇனி வெல்லாது !—சிந்தனையால்
அல்லும் பகலும் அறிவியலார் கூறுவதே
வெல்லும் உலகை விரைந்து.

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, பி.ஏ., சென்னை-15.

பிள்ளைக் கனியமுதே ! பேசும்பொற் சித்திரமே!
துள்ளும் அழகொளிரும் தூமணியே !—கள்ளமிலுன்
பல்சுவை தானளிக்கும் பாமழலை ஒன்றேதான்
வெல்லும் உலகை விரைந்து.

—அன்பரசன், தேவதானப்பட்டி

தமிழில் வழிபாடு தாய்மொழியில் கல்வி
அமிழ்தூறும் இந்நிலையில் ஆழ்ந்தோம்—இமிழ்திரைசூழ்
நல்லுலகில் நாம்உயர நம்திட்டம் நாள்தோறும்
வெல்லும் உலகை விரைந்து.

—நா. தண்டபாணி, வடகாடு.

தொல்தமிழ் நாட்டினது தோற்றம் கொணர்ந்திடுவோம்
பல்வளமும் இங்கே பரந்திருக்க—எல்லாரும்
வல்லாங்(கு) உழைத்திங்கே வாழ்ந்திடுவோம் நம்பணிகள்
வெல்லும் உலகை விரைந்து.

—சின்னக்கண்ணன், அம்பல்.

வெந்தீயை நீர்தானே வென்றிடும் ; தீயன்று ;
செந்தீமை தீமையால் தீயுமோ ?—காந்தியமாம்
கல்லும் கரைந்துருகச் செய்யும்நல் லன்புதான்
வெல்லும் உலகை விரைந்து.

—அ. சு. இராமலிங்கம், மெணசி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு நாகு. ஆறுமுகம்,
அரிக்காரன்வலசு (அஞ்சல்),
(வழி) ஈரோடு.

கத்துகடல் மல்லை ; கவின்மதுரைக் கோபுரங்கள் ;
சித்தன்ன வாசலெழிற் சித்திரங்கள் ;—முத்தமிழ்நாட்(டு)
எல்லைக் குமரிமுனை ; என்றும் கலைச்சிறப்பில்
வெல்லும் உலகை விரைந்து.

—குழ. அண்ணாமலை, கோவை-1.

ஈரா யிரமாண்டாய் எக்கருத்தும் மாறாமல்
தேரார் உளந்தெளியத் தேன்மொழியே—நேராக
எல்லாப் பொருளும் எடுத்துரைக்கும் முப்பாலே
வெல்லும் உலகை விரைந்து.

—நா. மதிவாணன், அறந்தாங்கி.

அன்பாலே மக்கள் அணிதிரட்டி மாற்றுரைத்
தன்பாலே ஈர்த்த தனித்தலைவன்—பொன்போலச்
சொல்லியதோர் முக்கருத்தைச் சுட்டும் விரலசைவே
வெல்லும் உலகை விரைந்து.

—த. குப்பால், வேப்பங்குளம்.

சொல்லைச் செயலாக்கிச், சூழ்தடையைத் தூளாக்கி,
வெல்லும் திறம்விளைத்து, வேல்விழியே !—பொல்லாத
இல்லாமைப் பூண்டழித்(து), இன்பச் சமத்துவத்தால்
வெல்லும் உலகை விரைந்து,

—நிலவை, நிலவழகன், நிலக்கோட்டை.

பாசக் கரநீட்டிப் பாலகனைத் தாலாட்டி
நேச எழிலூட்டும் நீடுறவாம்—காசினியில்
கல்லும் உருகும் கனிவன்புத் தாய்மைதான்
வெல்லும் உலகை விரைந்து.

—கசு. முத்து, கொட்டாரம்.

ஏடு பிடிக்குங்கை எல்லாரும் போற்றுங்கை
பாடுபடும் பாட்டாளி பார்க்குங்கை—நாடுபுகழ்
செல்லும் தமிழ்முதல்வன் செங்கையே என்றென்றும்
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் மா. பரமசிவம், வடுகப்பட்டி.

தள்ளாடுங் காலத்தும் தன்கருத்தா லிந்நாட்டின்
பள்ளத்தை மேடாக்கப் பாடுபட்டே—கள்ளத்தைக்
கொல்லும் '' பெரியாரின் '' கொள்கை யினியென்றும்
வெல்லும் உலகை விரைந்து.

—சுதா. கல்லக்குறிச்சி.

நிலவுலகை விண்வெளியை, நீலக் கடலைப்
பலவகையில் ஆராய்ந்து பாரில்—நலமதிகம்
நல்கும் அறிவியலே நானுரைப்பேன் ஐயமின்றி
வெல்லும் உலகை விரைந்து.

—பாக்கியசாமி, சென்னை-3.

எல்லா மதத்தார்க்கும் ஏற்புடைய நற்கருத்தாய்
வெல்லுஞ்சொல் கொண்டிங்கு வேட்புடன்-தொல்லுலகில்
நல்லறம் நல்கிய வள்ளுவனின் வாயமுதே
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் ஆ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

பொய்யா உழைப்பும், பொதுநலப் பற்றுளமும்,
செய்யாப் புதுமைகள் செய்திறமும்—மெய்யறிவும்
சொல்லும் உரைக்காப்பும் சூழுங்கால் : செந்தமிழே
வெல்லும் உலகை விரைந்து.

ச. பன்னீர்ச்செல்வன், பெருமாள்பேட்டை.

பார்புகழும் வள்ளுவன்றன் பாநலத்தில் ஊறியநற்
சீர்மிகுந்த செங்கோல் திறமதனில்—தேர்தமிழன்
சொல்லும் செயலும் சுடர்போன் றிருளறுத்து
வெல்லும் உலகை விரைந்து.

—செல்வி நா. பொன்முடி பி.எஸ்.ஸி. விருதுநகர்.

தங்கும் அமைதியினைச் சட்ட ஒழுங்குதனைப்
பங்கமுறச் செய்து பயனடைதல்—எங்ஙனம் ? சொல் !
எள்ளளவும் வன்முறையே இல்லாத கொள்கையன்றோ
வெல்லும் உலகை விரைந்து.

—சிவ. மு. சிவலிங்கம், சிவகாசி.

தன்னைப்போல் மற்றவரைத் தானினைந்து வாழ்வதுவும்
பொன்னைப்போல் நற்செயலைப் போற்றுவதும்—
என்றென்றும்
நல்லதையே நாடோறும் நாடுகிற நற்பண்பும்
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் மு. இராமலிங்கம், கொட்டம்பட்டி.

சொல்லாட்சி நற்கருத்துத் தூய்மை எளிமையுடன்
பல்லாட்சி கொண்ட பழமையினால்—தொல்லுலகில்
எல்லாரும் போற்றிடவே என்னுயிராம் செந்தமிழே
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் ச. சுந்தரேசன், பூட்டுத்தாக்கு.

அன்பும் அகந்தைமுன் அஞ்சாத நெஞ்சகமும்
என்றும் பிறர்க்குழைக்கும் ஏற்றமும்—கொண்டோர்கள்
சொல்லும், செயலாகிச் சோர்வை விரட்டியே
வெல்லும் உலகை விரைந்து.

—மா. இல. குப்புசாமி, பி.எஸ்.சி., சென்னை 30.

தத்தித் தளிர்நடையால் தாவித் தரைவிழுந்து
முத்துப்போல் எச்சில் விழமுந்தும்—தத்தைஎன்
செல்வன்அம் மாவென்னும் தேனமுத மென்சொல்லே
வெல்லும் உலகை விரைந்து.

—ஜெயராமன், அசோக் நகர், அரக்கோணம்.

1—11—8

நாணயத்தால் நாநயத்தால் நல்லுளத்தால் நற்பணியால்
நீணிலத்தார் நெஞ்சில் நிறைந்தோரின்—மாணரிய
சொல்லும் செயல்திறனும் தூய திருத்தொண்டும்
வெல்லும் உலகை விரைந்து,

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

துன்பம் துடைத்துத் துணையாகி எல்லார்க்கும்
என்பும் உதவுகின்ற எண்ணமுடன்—நன்னெறியிற்
செல்லும் மனமுடையோர் செய்கின்ற அன்பன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

கொஞ்சும் மழலைக் குரலும் குளிர்விழியாள்
அஞ்சும் நடையும் அறிவியலும்—வஞ்சகரால்
அல்லற்பட்டேழை அழுதகண் ணீரொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—கே. டி. அரசு, மணமேடு.

யாழின் இசையினிலே யாம்பெற்ற இன்பமெலாம்
ஏழைச் சிரிப்பினிலே எய்திடலாம்—ஊழினையும்
வல்லமையால் வென்றிடலாம் ; வாய்மைவழி வாழ்வ
வெல்லும் உலகை விரைந்து. [தொன்றே

—தி. செ. குப்புசாமி, திருச்செங்கோடு.

செங்கதிராய்த் தண்ணிலவாய்ச் செம்மைத் திருவுருவாய்ப்
பொங்குதமிழ் பூத்த புதுமணமாய்—இங்கண்ணு
நல்ல நெறிநடக்கும் நற்றமிழர் ஆட்சிமுறை
வெல்லும் உலகை விரைந்து.

—புலவர் அ. நாராயணன், மதுரை-9.

அந்நாளில் மூவேந்தர் ஆண்டுவந்த ஆட்சியேபோல்
இந்நாளில் எம்கலைஞர் ஆளுவதால்—இந்நாடு
கொல்லும் குறையாவும் குப்பைக் குழிசேர்த்து
வெல்லும் உலகை விரைந்து.

—வே. குருநாதன், மதுரை–2.

கற்ற தமிழர் தமதாங் கிலவறிவை
உற்ற தமிழ்க்கே உரித்தாக்கில்—முற்றவும்
சொல்லிற் சிறந்தநம் செந்தமிழ்த் தேன்மொழியே
வெல்லும் உலகை விரைந்து,

—புலவர் தமிழ்க்குமரன், பணகுடி.

நூறு யிரங்கோடி நோதக்க செய்தாலும்
மாறுநற் பேரன்பால் மன்னிக்கும்—பேறென்றே
கல்லைக் கரைக்கும் ; கடற்சீற்றம் மாய்த்திடுமே
வெல்லும் உலகை விரைந்து.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., அமரபூண்டி.

எண்ணே(டு) எழுத்தேபோல், இங்கிரண்(டு) ஈந்திட்ட
பின்னுமேன் சேய்கள் பெருக்குவ(து)—அன்னமே
எல்லைகாண் ! ஏற்றதடை இன்றேல், பசிப்பிணியே
வெல்லும் உலகை விரைந்து.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

வாழ்வால் வளநிலையால் வண்ணத்தால் சாதியால்
கீழ்என்பார் மேல்என்பார் கீழோர்கள்—தாழ்வகற்றி
எல்லாரும் ஓரினமாய் இன்புறுவோம், சூழ்நிலையை
வெல்லும் உலகை விரைந்து.

—கு. சென்னையா, தேவதானப்பட்டி.

தண்டமிழ் நாட்டில் தமிழாட்சி செய்வதனல்
பண்டிருந்த மேன்மை பளிச்சிடுதே—ஒண்டொடியே !
கல்லும் கவிபாடக் கண்ட தமிழொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—ஆ. தங்கவேல், பி.எஸ்சி., நரிக்கல்பட்டி.

இப்புவியில் நாம்பெற்ற ஏற்றமிகு வாழ்நாளில்
செப்பமுடை நற்பணியைச் செய்திடவே—ஒப்பின்றி
ஒல்லும் வகையெல்லாம் நன்றாய் உழைப்பதொன்றே
வெல்லும் உலகை விரைந்து.

—கோமதி, கூகலூர்.

புத்தம் புதிதாகப் பூத்த அறிவியலுக் (கு)
ஒத்த புதுச்சொற்கள் ஒண்டமிழில்—மெத்தவுமே
நல்ல விதமாக நாம்காணின் நந்தமிழே
வெல்லும் உலகை வுரைந்து.

—ப. மீனாட்சிசுந்தரி, மதுரை.

சோற்றுக்கில் லாதார் ; சுரண்டிச் சுகங்காண்போர்
ஏற்றத்தாழ் வாமிவ் விழிநிலைஏன் ?—மாற்றியுடன்
நல்ல பொதுவுடைமை நாமேற்போம் அஃதேதான்
வெல்லும் உலகை விரைந்து.

—கொ. மா. கோதண்டம், இராசபாளையம்

எதிர்பாராத
விருந்தினர்களா?



மகிழ்ச்சியூட்டும்
நெஸ்கா:பே வழங்கி
அவர்களை இனிய முகத்துடன்
உபசரியுங்கள்—5 செகண்டில்
ஒருகப் தயார்!




முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

# நெஸ்கா:பே




**உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே**
**ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!**

NCE 6368

ஒரு நெஸ்லெ தயாரிப்பு

# கல்வி அமைச்சர் நாவலரின்

## பட்டமளிப்பு விழாப் பேருரை

சென்னைப் பல்கலைக் கழகம் தனது ஒப்பற்ற உழைப்பின் மூலம் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உயர் கல்வி—ஆராய்ச்சி ஆகியவற்றின் இருப்பிடமாகத் திகழ்ந்து வருகிறது.

இந்தியாவின் முதல் தரப் பல்கலைக் கழகத்தில் ஒன்றாக இடம் பெற்ற காலத்திலிருந்து, இந்தப் பல்கலைக் கழகம் முன்னோடும் உயர் கல்வியினைப் பலப்படுத்தவும், கல்வித் துறையில் ஆராய்ச்சியை மேற் கொள்ளவுமான பணியை இது செய்தது என்பதில் மாறுபாடான கருத்தில்லை.

இந்தியப் பல்கலைக் கழகக் கல்வியின் வரலாற்றில் ஒளி விடும் அத்தியாயத்தை ஏற்படுத்தியதுதான் இந்தப் பல்கலைக் கழகம், தனது வேறு வழிகளின் மூலம் பொதுவாக இந்தியாவிற்கும் குறிப்பாகத் தமிழகத்திற்கும் தந்த செய்தியாகும்.

இந்த மகிழ்ச்சி விழாவில்—இந்தப் பல்கலைக் கழகத்தைத் தலைமைக்குரிய பயிற்சிப் பாசறையாகவும், தெளிவான அறிவும், கலாச்சாரமும் உள்ள இருப்பிடமாகவும், எண்ணங்களின் நாற்றங்காலாகவும் ஆக்கிட உதவிய ஞானமும் உள்ளொளியும், கற்பனைக் காட்சியும் படைத்த எல்லா மனிதருக்கும் நமது பணிவான மரியாதைகளைத் தெரிவித்துக் கொள்வோமாக.

இந்த வருடத்தின் பட்டதாரிகளாகிய உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் போற்றுதல்களையும் நீங்கள் அடைந்த சிறப்புக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நாள் உங்களது வாழ்நாளில் என்றென்றும் நினைவில் நிற்கும் நாள் ஆகும். ஏனெனில், இந்நாள் ஒரு தொடக்கமும் ஒரு துவக்கமும் படைத்தது. தயாரிப்புக் காலத்தின் வெற்றிகரமான முடிவு இது. அறைகூவல் விடும் தேசீய வளர்ச்சியிலும், சமூக மறுவாழ்விலும் பங்கேற்கப் போகும் நாளின் துவக்கமும் ஆகும்.

ஆசையூட்டும் வாய்ப்புகளின் களத்தில் இறங்கும்போதும், பல்வேறு அறைகூவலைச் சந்திக்கும் போதும், பல்கலைக் கழகத்தில் நீங்கள் அடைந்த அறிவும் திறனும் கொண்டு பயன் படுத்த வேண்டியிருக்கும். இந்த நேரத்தில் உங்களுக்கு எல்லாவற்றிலும் வெற்றி கிடைக்க வாழ்த்துகிறேன்.

எனது இளைய நண்பர்களே!

இந்த வேளையில் நான் அறிவுரைகளைக் கூறப்போவதில்லை. ஏனெனில் அவை இப்போது எளிதான பொருளாகிவிட்டது.

கல்வித்துறையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றிக் கருத்து எதிரொலிப்பதில் என்னுடன் உங்களையும் அழைப்பதே பொருத்தமானது என நம்புகிறேன்.

ஏனெனில் கற்றறிந்த இந்நாட்டு இளைஞர்களான உங்களால்தான் இந்த நெருக்கடி தீர—சரியானதும், முக்கியமானதுமான பங்கை ஆற்றிட முடியும்!

கல்வியின் அடிப்படை நோக்கங்கள் யாவை? ஒரு நாட்டின் வாழ்வில் பல்கலைக் கழகத்தின் இடம் என்ன? துயர இழுபறி யுகமான இன்றைய யுகத்தில் அது சந்திக்க வேண்டிய பிரச்சினைகள் என்ன? அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அது கூறும் யோசனை என்ன? கல்வி அமைச்சர் என்ற முறையில் இதில் உங்களது ஒத்துழைப்பைக் கோருகிறேன். அறைகூவல் விடும் வினாக்களுக்குச் சரியான பதில்களைக் கண்டு பிடிப்பதன் மூலம்—நமது கல்வி உண்மையில் நமது நாட்டிற்கேற்பத் திருத்தப்படும் — பலப்படுத்தப் படும்—நாளைய பொறுப்புகளை உணர்த்துவதாக இருக்கமுடியும்.

ஸ்டீபன் லீகாக் எனும் நகைச்சுவையாளர் ஒரு முறை கூறினர்: 30 வருடங்களுக்கு முன்பு பல்கலைக் கழகத்தில் பயின்ற தகவல்களை மீண்டும் நினைவுப்படுத்திக் கூறுவது என்றால் யாருக்கு வேண்டுமானாலும் 50 நிமிடத்தில் பல்கலைக் கல்வியைத் தந்துவிடலாம் என்றார். அதன்படி இரசாயனத்தில் லிட்மஸ் (வண்ணக்) காகிதத்தைத் திராவகத்தில் தோய்த்தால் நீல நிறமாகுமா? சிவப்பு நிறமாகுமா? என்பதை அவனால் நினைவில் வைத்திருக்க முடியாது. பொருளாதாரம் 'தேவையும் — வழங்கீடும்' என்பதையே மையம் கொண்டிருப்பது.

கல்லூரிகளில் நாம் பெற்ற அறிவைத்தொகுத்து வழங்குமாறு அழைக்கப்பட்டால் ஸ்டீபன் லீகாக்கைவிட மேம்பாடாக நம்மில் பலர் செய்ய முடியாமலிருக்கலாம்!

தகவல் அறிவைச் சேகரிப்பதே கல்வி என நம்பும் மனிதர்கள் இன்னும் இருப்பதைக் காண வருத்தமாக இல்லையா?

ஆனல் பேராசிரியர் ஒயிட்ஹெட் சொன்னது போல் ''நிறையத் தகவல் தெரிந்திருக்கும் மனிதன், உலகிலேயே உபயோகமற்ற வறட்டிழுப்பு மனிதனே!''

ஆகவே தகவல்களைக் கூடை கூடையாக ஒருவர் தலையில் கொட்டுவதல்ல கல்வி! நினைவாற்றலை விட ஆர்வத்தையும்—கூர்மைமிக்க உத்வேகத்தையும் தூண்டுவதுதான் கல்வி! நினைவாற்றலுக்குப் பயிற்சி தருவதும் தகவல் திணிப்பும் எளிதான முறைகளே. எனினும் அவை அறிவு வளர்ச்சிக்குத் தடையானவைதான்!

ஆனுல் ஆர்வத்தையும் உண்மை ஆராய்ச்சியையும் தூண்டிவிடுதல் என்பது கடின மானது. ஆனுல் அது மாண வன் வளரவும்—மென்மேலும் வளரவும் தூண்டுகிறது.

ரோனுல் கல்லல்டு சரி யாகவே சொன்னுர்:

''கல்வியின் மேன்மையானது எதுவெனில் ஒரு குழந்தைக்கு எதைப் பற்றிச் சிந்திக்க வேண் டும் என்று சொல்லித் தருவ தல்ல! எப்படிச் சிந்திக்க வேண்டும் என்று சொல்லித் தருவதே!''

அதன் மூலம் அந்தக் குழந்தை —விஷயங்களைத் தேர்ந்தெடுத்து சிந்தித்துக் கொண்டே செல்லும்! விசாரித்தலும்—காரணம் கண்டு பிடித்தலுமான நிரந்தரப் பழக்கத்தில் குழந்தை வளர்ச்சி பெறும்!

சில வருடங்களுக்குப் பின்னர், பள்ளியறிவு அவனது நோக்கிற் குத் தொடர்பில்லாததாகப் போய்விட்டாலும், இறந்த காலத்தின் கல்வியாக மாறி விட்டாலும், மறந்து விட்டாலும் அவனுக்குப் புத்தறிவைப் பெறு வதற்கான திறன் இருக்கவே செய்யும். தெளிவாக நிகழ்ச்சி களைப் புரிந்து கொள்ளவும், புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ற வாறு தன்னை ஆக்கிக்கொள்ள வும் அவனுல் இயலும்!

நவீன விஞ்ஞானம்—தொழில் முறை இவற்றின் வளர்ச்சிக் கேற்ப 'மாறுதல் வளர்ச்சி' எனும் போக்கை இணைப்பதும் கல்வியின் இன்னெரு கடமை யாகும்.

இதன் பொருள், மரபு தத்துவ வேர்களில் அடி கொடுப்ப தாகும்! நவீனப்படுத்தும் சக்திகளை விரைவுபடுத்தலு மாகும்! இந்த இடத்தில் மரபுக்கும் மரபுத்தத்து வத்திற்கும் உள்ள வேறு பாட்டை விளக்குவது எனது கடமை! மரபு என்பது நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலியவை கடந்த காலத்தி லிருந்து தொடர்ந்து வருவதைக் குறிப்பதாகும். முறையான வழியில் மறு பரிசீலனை மூலம் நமது மரபுப் பழக்கங்கள் மாறுகின்றன. ஆனுல் இதற்கு எதிராக மரபுத் தத்துவம் என்பது பழைய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் மாறுதலுக்கு உரியன அல்ல என நினைப்ப தாகும்.

வேறு வார்த்தைகளில் கூறுவ தானுல் அந்தத் தத்துவம் மரபு என்பதை மாரு நிலை யுடையது என்றும் முன்னர் செய்தது போலவே மக்கள் கூட்டம் இப்போதும் செயல்பட வேண்டும் என்றும் எதிர்பார்க் கிறது. இந்தக் காரணத்தால் தான் பொருளற்ற மூட நம் பிக்கையும் ஆரவார மூட நோன்புகளும் படைத்த ஒரு சமுதாயத்தைப் பகுத்தறிவு வாதிகள் தாக்குகின்றனர்.

பல்கலைக் கழகக் கல்வியைப் பற்றிப்பேசுகிறநேரத்தில் பயிற்சி மொழியைப் பற்றிக் குறிப்பிடு வது பொருத்தமானதாக இருக் கும். தமிழக அரசின் இரு மொழிக் கொள்கையைப் பற்றித் தெளிவான அடிப்படையில் பல நேரங்களில் விளக்கம் கூறியிருக் கிறோம்.

தாய் மொழியிலும், ஆங்கிலத் திலும் போதிய பயிற்சி பெறுவ தற்கு மாணவர் சமுதாயத்துக்கு ஏராளமான வாய்ப்புகள் இருக் கின்றன.

பள்ளிக்கூடங்களிலும், கல்லூரி களிலும் தாய்மொழியே பயிற்சி மொழியாக இருந்தால்தான் மாணவர்கள்பயனுள்ள அறிவைப் பெற முடியும். தாங்கள் கற்ற கருத்துக்களைப் பொருள் பிற ழாது எடுத்துக் கூற முடியும். —என்பது கல்வித் துறையின் பொருத்தமான கொள்கையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர்கள் தாங்கள் கற்கும் கல்வியின் பொருளை உணர்வதற் காக மட்டுமின்றி சமுதாயத்தி னின்று விலகி விடாமல் இருப்ப தற்கும், தாய் மொழி மூலம் கல்வி கற்பதுதான் சிறந்தமுறை என்பதை மகாத்மா காந்தி உட் பட பல தேசியத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் அமைக்கப்பட்ட கல் லூரிக் கல்விக் கமிஷன் 1948-ஆம் ஆண்டிலேயே பின்கண்ட பரிந் துரையை வழங்கியது.

''கல்விக் கண்ணேட்டத்தின் படி பார்த்தாலும், ஒரு ஜன நாயக சமூகத்தின் கண்ணேட்டத் தின்படி பார்த்தாலும், மாணவர் களுக்கு அளிக்கப்படும் கல்வி அவர்களின் தாய்மொழி வாயிலாகவே அமைய வேண்டும். இயல்பாகத் தாய்மொழி மூலம் கல்வி கற்கிறவர்கள்—உயர்மட் டக் கல்வி பெறுவதுடன் தங்கள் சிந்தனை வளத்தின் மூலமாக அறிவின் எல்லைகளாக விளங்கும் ஆராய்ச்சித் துறைக்கு மிகப் பெரும் ஊக்கம் அளித்திட முடியும்.''

டாக்டர் ராதாகிருஷ்ணன் குழு அளித்த இந்தப் பரிந்துரை யைத் தேசியக் கல்விக்குழு அப் படியே ஏற்றுக் கொண்டது.

நம் நாட்டின் அறிவாற்றலை யும் ஒழுக்க உயர்வையும் பெருக் குவதற்கான கல்வி முறை அமைய வேண்டுமானுல் தாய் மொழிக் கல்வி ஒன்றின் மூலம் தான் அதைச் சாதிக்கமுடியும் என்பது வலிமையான ஒரு காரணமாகும். இந்தக் காரணத்தின் அடிப்படையில் தமிழக அரசின் பயிற்சி மொழிக் கொள்கையைப் பலரும் பாராட்டவே செய்வார்கள்.

ஆங்கில மொழியில் உள்ள விஞ்ஞானச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற் களை நாம் கண்டு பிடித்தாக வேண்டும்.

தாய் மொழியை அறிமுகப் படுத்துவதனுல் ஆங்கிலத்தின் இடத்துக்கு எந்த விதக் கேடும் வந்துவிடப்போவதில்லை. ஆங் கிலப் பயிற்சிக்கு நாம் உரிய இடம் அளித்து வருகிறோம். மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங் கிலம் கற்பிக்க வழி செய்திருக் கிறோம். ஆங்கில மொழி யைப் படிக்க வேண்டும் என்ப தில் அரசுக்கு இருக்கிற அக் கறைக்கு இது நல்ல சான் ருகும்.

ஆங்கிலத்தைக் கற்பது என் பது வேறு. ஆங்கிலத்தின் மூலம் கற்பது என்பது வேறு. ஆங்கில நூல்களைப் படிக்கும் வாய்ப்பை மாணவர்கள் பெற வேண்டும் என்பதற்காகத்தான் ஆங்கிலமொழியில் நல்லபுலமை பெறத்தக்க வகையில் மாண வர்களுக்குக்கு வாய்ப்புக்களை உரு வாக்கியுள்ளோம்.

தேர்வு பற்றிய சீர்திருத்தம் கல்வியாளர்களிடையேயும் கல்வித் துறை நிபுணர்களிடையேயும் ஒரு பிரச்சினையாக எழுந்துள்ளது. இந்தத் தேர்வு முறை பல

நவம்பர் முதல் வாரத்தில் எங்கும் கிடைக்கும்

# வெள்ளி விழா மலர்

விலை ரூ. 2·50

மில்லாதது—குறைவுடையது என்பதில் இரண்டு கருத்தில்லை. நமது தேர்வுகள் ஒரு சூதாட்டத்தைப்போல் ஆகிவிட்டன. திறமைகளை இனம் காண்பதில் எந்தவிதமான உறுதியான வழி காட்டுதலும் இல்லை.

தேர்வுகள் பெருவாரியான அளவில் நடத்தப்படுவதால் அது வெறும் நிர்வாக அளவில் உள்ளதாக இருக்கிறதே தவிர, மாணவர்களின் கல்வி மேன்மையைக் கண்டறியும் தேர்வாக இல்லை. இந்தக் குறையுள்ள தேர்வு முறையைநீக்கி ஒவ்வொரு மாணவனின் அன்றாடப் பணிகள் மீதான கணக்கெடுப்பும் தனித் திறமைகளும் காணப்பட வேண்டும்.

இந்தப் புதிய முறைத் தேர்வுகள் முயன்று வகுக்கப்படவேண்டும். வாய்மொழித் தேர்வு என்பது உச்சரிப்புத் தயார் நிலையிலான நகைச்சுவை வெளிப்பாட்டின் சக்தி. இவற்றைக் கண்டுபிடிக்க உதவும் மாணவனது கல்விச் சாதனைகளைப் பற்றிக் கல்வி நிறுவனம் தான் சரியான கணக்கீட்டைத் தரமுடியும். எல்லாவற்றையும் பொறுமையாகவும்—புத்திசாலித்தனமாகவும் கையாண்டால் நன்னிலை திரும்பும்.

நான் இதற்கொரு யோசனை கூறுகிறேன். ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர் நலக்குழு அமைக்க வேண்டும். மாணவர் ஆசிரியர் பெற்றோர் ஆகியோருக்குக்காக மூன்று பிரதிநிதிகள் வீதம் அக்குழுவில் அங்கம் வகிக்க வேண்டும். கல்லூரி முதல்வர் அக் குழுவின் தலைவராக இருக்க வேண்டும்.

இந்தக் குழு மாணவர் நலம் பற்றிய எல்லாப் பிரச்சினைகளையும் விவாதிக்கும் அரங்கமாக மாற வேண்டும். மோதல்கள்—தவறான நினைப்புகள் இவற்றின் காரணங்கள் களைய வேண்டும். மாணவச் சக்தியைப் பொருள் உள்ள ஆக்க வழியில் திருப்ப வேண்டும்.

பல்லாயிரம் பிரச்சினைகளிடையே இவற்றையும் உறுதியோடு அணுக வேண்டும். நமது பேரன்பிற்குரிய அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன மறக்க முடியாத வார்த்தைகளான

''உறுதியாக இருப்போம்; வளைந்து கொடுக்கமாட்டோம்

கொள்கைகளுக்குப் பதிலாக வெறியைத் தவறுதலாக மேற்கொள்ள மாட்டோம்.

உண்மை என நினைத்துப் போலியின் பின் செல்லமாட்டோம்!''

மறைந்தும் மறையாத வள்ளுவர் சொன்ன—''வினைத் திட்பம் என்பது, ஒருவன் மனத் திட்பம்; மற்றைய எல்லாம் பிற'' என்ற குறளை நினைவு கூர்வோம்.

இந்த ஆண்டின் பட்டதாரிகளே! உங்கள் வாழ்வு ஒளிமயமாக இருக்கவேண்டும்; என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்காலக் கவிஞர் ஒருவர் சொன்ன கீழ்க்காணும் கருத்தை மனத்தில் எடுத்துச் சொல்லுங்கள்.

உதய நேரத்தின் அறிவு கொளுத்தும் முறையைக் கவனியுங்கள்! இந்த நாளைப் பாருங்கள்! ஏனெனில் இந் நாளே— வாழ்க்கையாகும்! வாழ்க்கையின் வாழ்க்கையாகும்! அதனுடைய குறுகிய காலத்தில் உங்களது வாழ்வினுடைய உண்மைகளின் அனைத்தும் பல்வேறு உருவங்களும் கிடக்கின்றன!

வளர்ச்சியின் மகிழ்ச்சி!
செயலின் கீர்த்தி!
அழகின் மேன்மை!

இவை அடங்கிய நேற்று என்பது ஒரு கனவு! நாளை என்பது ஒரு காட்சி ஆனால் நன்றாக வாழும் 'இன்று' என்பது .. ... ... .. ... ஒவ்வொரு 'நேற்று' என்பதையும் மகிழ்ச்சிக் கனவாக்கும்! ஒவ்வொரு 'நாளை' என்பதையும் நம்பிக்கையின் காட்சி ஆக்கும்!

கூட்டுறவே நாட்டுயர்வு

வாழ்க ! வளர்க !!

# திருபுவனம் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்., Z 322

## திருபுவனம், திருவிடைமருதூர் அஞ்சல், தஞ்சை மாவட்டம்

குறைந்த இலாபம் ! நிறைந்த பயன் !!

எங்கள் சங்கத்தில் பரம்பரையாகத் தொழில்நுணுக்கம் தெரிந்த கைதேர்ந்த நெசவாள உறுப்பினர்களைக் கொண்டு பட்டுச் சேலைகள், டிஷ்யூ, ஜாங்ளா, கிராஸ் கொடி, பாவாடை, சோளி முதலிய உயர்ந்த ரகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

கண்கவர் கலர், நவநாகரீக டிசைன்கள், பலவண்ண வேலைப்பாடுகள் உடையன. உயர்ந்த ரக ஜரிகை, வண்ணம் இவைகளுக்கு உத்தரவாதமுடையது.

இலாபம் பாராது பொதுமக்களின் சேவையையே குறிக்கோளாகக்கொண்டு இச் சங்கம் இயங்கி வருகிறது. இதனால் இச்சங்கத்தில் தயாரிக்கப்படும் பட்டு ஜவுளிகள் தமிழ்நாடு, முழுவதும் நன்மதிப்பினைப் பெற்றும், பம்பாய், மைசூர் வரை பொதுமக்களால் போற்றப் பட்டும் வருகின்றன.

ஒரு முறை சங்கத்திற்கு வருகை தந்து பார்வையிட்டால் உண்மை விளங்கும்.

ஆர்டர்கள் ஏற்றுக்கொண்டு குறித்த காலத்தில் மேம்படச் செய்து கொடுக்கப்படும். பெயர்கள் போட்டுப் பொன்னுடைகள் தயாரித்துக் கொடுக்கப்படும்.

**ஞாயிறு மற்ற எல்லா விடுமுறை நாட்களிலும் வியாபாரம் உண்டு.**

உங்கள் பணம் நல்ல வகையில் முதலீடு செய்ய—திருமணம் மற்றும் முக்கிய வைபவங்களுக்குத் தேவையான பட்டுச் சேலைகள் வாங்க சங்கத்திற்கு வருகை தரக் கேட்டுக் கொள்கிறோம்.

**எஸ். ராஜகோபாலன்,** எம்,ஏ.,பி,எல்.,
**தலைவர்.**

**சிவ. பாலசுப்ரமணியன்,**
**கைத்தறி அதிகாரி/செயலாளர்.**



தப்பா நினேச்சுக்காதீங்க... நான்தான் முத்துவை ராஜினமாச் செய்யச் சொன்னேன்
நீங்களும் முத்துவும் முடிவு செய்த பிறகு நாங்க என்ன செய்ய முடியும்
குழந்தைகளோட ஆர்வத்தை நாம் வளர்க்கணும். நாமே தடையா இருக்கலாமா?
குடும்ப சூழ்நிலையால் இந்த முடிவுக்கு வந்தேனுங்க அவன் அம்மாவுக்குவேறே உடம்பு சரியில்லை
முத்து திருவள்ளுவர் மன்றத்திலே உறுப்பினராக இருக்க அனுமதிங்க...
எல்லாரும் சென்றபின்
முத்து ராஜினமாச் செய்தது சினிமாவிலே வர்ற சஸ்பென்ஸா இல்லே
உங்கள் தமிழாசிரியரே செய்திருப்பாரோ என்று நினைத்தேன்!
எது எப்படியிருந்தால் என்ன நமக்கு வெற்றி!
மறுநாள்
முத்து எங்கேடா காணோம்?
வர்ரேண்ணு உறுதியாச் சொன்னன்!
எப்படியாவது வேலன் அந்தப் பட்டணத்துச் செல்வன் திட்டங்களை முறியடிக்கணும் அதுக்கு முடிவு கட்டணும்!
அதோ யாருடா வர்ராங்க முத்துவா?
இல்லே அண்ணதான் வேலனுடன் வர்றர்!
தொடரும்

## அட்டை சொல்லும் செய்தி

"ஏழைகளுக்காக ஏழைகளால் உருவாக்கப்பட்ட இந்த அரசு ஏழை மக்களின் அடிப்படைக் குறைகளைப் போக்குவதில் தலையாய கவனம் செலுத்தும்"— என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

அந்த நோக்கத்தை ஈடேற்றும் வகையில் முதல்வர் தமிழவேள் கலைஞர் அமைத்த தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் தன் அரும்பணிகளால் தலைநகரத்தில் குடிசைகளைக் கோபுரங்களாக்கி வருகின்றது.

பல அடுக்கு மாடிக்குடியிருப்புகள் வசதிக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் நான்கு அடுக்கு மாடிக் கட்டடங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன.

இந்த நான்கு மாடிக் குடியிருப்புகளில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு படுக்கை அறை, முன் வரவேற்பு அறை, நவீனக் கழிவறை, குளிக்கும் அறை, சாமான்கள் வைக்கும் வசதிகளோடு கூடிய சமையல் அறை முதலியன உள்ளன.

குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டிக் கொடுக்கும் ஒவ்வொரு குடியிருப்புக்கும் ரூபாய் 6,000 முதல் ரூபாய் 7,000 வரை செலவாகிறது.

அரசின் புதிய முடிவின்படி ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனி மீட்டர் வைத்து மின்சார வசதியும் தண்ணீர்க் குழாயும் போட்டுக் கொடுத்து மற்ற வசதிகளும் செய்து தருவதென்றால் மாதந்தோறும் ஒரு குடியிருப்புக்கு வாடகையாக ரூ. 55 வசூலித்தாக வேண்டும். ஆனால், நமது அரசு ரூபாய் 15 மட்டும் வாடகை வாங்கினால் போதும் என்று சொல்லியுள்ளது. இதனால் குடிசைப்பகுதி மாற்று வாரியம் கட்டிவரும் குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும் நமது அரசு ரூ. 40 மான்யம் தருகிறது.

அக்டோபர் திங்களில் மட்டும் சென்னை நகரில் நான்கு இடங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் புதிய குடியிருப்புகள் கட்டும் பணியினை முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஏழையரின் வாழ்வில் இனி எல்லையில்லா மகிழ்ச்சி வந்து சேரப்போகிறது என்பதைத் தான் அட்டைப்படத் தம்பதிகள் சொல்லாமல் சொல்கிறார்கள்.


**நீலகிரி கூட்டுறவு மைய வங்கி லிமிடெட்**
**நெ. ஜே. 90 "கூட்டுறவு மத்திய வங்கி கட்டடம்" உதகமண்டலம்**

தந்தி நில்போபாங்க் தொலைபேசி எண் 2420
கிளைகள்: கோத்தகிரி, குன்னூர், கூடலூர்
தொலைபேசி எண்: 332, 2684, 24

| | (லட்சம்) |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. | 40·00 |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் .. | 29·87 |

வட்டி விகிதம்

| | |
|---|---|
| (1) சேமிங்ஸ் பாங்கு கணக்கு .. | 4% |
| (2) பிராவிடண்ட்பண்டு டெபாசிட்டு | 5% |

நிரந்தர டெபாசிட்டுகள்

| | |
|---|---|
| (1) 1 மாதம் முதல் 3 மாதங்களுக்குள்ளாக | 3½% |
| (2) 3 ,, ,, 6 ,, | 4¾% |
| (3) 6 ,, ,, 12 ,, | 5¼% |
| (4) 12 ,, ,, 24 ,, | 6¼% |
| (5) 24 ,, ,, 36 ,, | 6¾% |
| (6) 36 ,, ,, 60 ,, | 7¼% |
| (7) 60 ,, ,, 84 ,, | 7½% |
| (8) 84 மாதங்களுக்குமேல் | 7¾% |

36 மாதங்களுக்கும் அதற்கும் மேற்பட்ட காலத்திற்கும் போடப்படும் டெபாசிட்டுகளுக்கு (அசலுக்கும், வட்டிக்கும்) தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

ஜே. மாதாகவுடர், எம். பி., பெருந்தலைவர். இரா. சு. வேலாயுதம், பி. எ. துணைப்பதிவாளர்-செயலாளர்.


## வெண்பாப் போட்டி-22

ஈற்றடி: **வீரர் எழுக விரைந்து**

முடிவுத் தேதி: 15—11—1971

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்
சென்னை-2.

குறிப்பு: அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

**நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை,**

சென்னை வட்டம், சென்னை-25.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 10-11-1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வ.எண். | வேலை விவரம். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி கிடைக்குமிடம். |
|---|---|---|---|
| 1 | அழகியநத்தம் கிராமத்திற்கு அருகே பெண்ணாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல் (தென்னார்க்காடு மாவட்டம்). | 20,750 | கோட்டப் பொறியாளர், (நெடுஞ்சாலை), கடலூர். |

ஒப்பந்தங்கள் 10-11-1971 அன்றே மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனக்கள், வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை), கடலூர் அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ரூ. 51.75 செலுத்தி, 27-10-1971 முதல் 9-11-1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப்பணித் துறை), கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் ''ரெவின்யூ டெபாசிட்'' என்ற தலைப்பின்கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராமப் பணித்துறை), கடலூர் பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ''ரிசர்வ் வங்கி''யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**ஜி. ஜார்ஜ் ஜேகப்,**

மேற்பார்வைப் பொறியாளர், (நெடுஞ்சாலை), சென்னை வட்டம்.

சென்னை-25,
11-10-1971.

(த. 16)

**கதர் கிராமத் தொழில் வாரியம்**

கதர் கிராமத் தொழில் துறை
ஒப்பந்த அறிவிப்பு

1971-72ஆம் ஆண்டுக்குக் கதர் கிராமத் தொழில் துறைக்கு வேண்டிய எழுது பொருள் (ஸ்டேஷனரி) சாமான்கள் சப்ளை செய்வதற்கான முத்திரையிடப் பெற்ற ஒப்பந்தங்கள் 30–11–1971 மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு 3–12–1971 காலை 11 மணிக்கு ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

கீழ்க்கண்ட முகவரியில் ஒப்பந்தத்துக்கான நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் விற்பனை வரியுடன் ரூ. 10-க்கு டிமாண்ட் டிராப்ட் அல்லது ரொக்கம் கீழே கண்ட முகவரியில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். 1–11–1971-க்கு முன்னதாக வாங்கப் பெற்ற டிமாண்டு டிராப்டுகள் ஏற்கப்பட மாட்டாது.

**பொ. சோமசுந்தரம்,**
இயக்குநர், கதர் கிராமத் தொழில் துறை, சென்னை-4.

(த. 14)

**ஏல விற்பனை**

**தீ அணைப்புத்துறை**

கண்டனம் செய்யப்பட்ட இழுக்கும் மோட்டார் வண்டி எம். எஸ். ஒய். 6707 ஸ்டுடிபேக்கர்—1953 மாடல், பாளையங்கோட்டை தீயணைப்பு நிலையத்தில் 1971-ம் வருடம் நவம்பர் மாதம் திங்கட்கிழமை 22-ம் தேதியன்று காலை 11-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மேற்படி வண்டியை பாளையங்கோட்டை தீயணைப்பு நிலையத்தில், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விற்பனைக்குரிய நிபந்தனைகளைக் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**எம். எஸ். சுப்பிரமணியம்,**
கோட்டத் தீயணைப்பு அலுவலர், பாளையங்கோட்டை.

(த. 15)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

(ந. க. எண். 25895/71/வ7, நாள் 5-10-1971.)

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பிலும், செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. வேலூர், அவர்களால் கீழ்க் கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-11-1971 பிற்பகல் 3-00 மணி வரையில் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் 3-15 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|
| 1. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். 228 மீட்டர் முதல் 258 மீட்டர் முடிய கட்டுதல். | 2,300 |
| 2. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். மீட்டர் 258 முதல் 288 மீட்டர் முடிய கட்டுதல். | 2,300 |
| 3. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். மீட்டர் 288 முதல் 318 மீட்டர் முடிய கட்டுதல். | 2,600 |
| 4. செய்யாற்றின் குறுக்கே தண்டரை கிராமத்திற்கு அருகே ஒரு அணைக்கட்டு எல். எஸ். 318 மீட்டர் முதல் 350 மீட்டர் முடிய கட்டுதல். | 2,800 |

1. ஒப்பந்த விபரம்.—கே-2.

2. முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ, தேசியச் சேமிப்புப் பத்திரங்களாகவோ அல்லது ஷெட்யூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட்டு வகையிலோ அல்லது ஷெட்யூல்டுட் பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் தமிழ்நாடு மின்வாரியப் பத்திரங்களும் மதிப்பில் 5 சதவீதம் குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும்.

3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 20 (கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ) P. W. Remittance—III other Remittance என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் பொ. ப து., தண்டரை அணைக்கட்டுக் கோட்டம், செய்யார், அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரி ரூ. 0.60 விற்பனை வரி XII Sale Tax (d) பல்வகை என்ற தலைப்புக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

5. வேலை முடிப்பதற்குரிய காலம்.—6 மாதங்கள் (ஆறு மாதங்கள்).

மேற்பார்வைப் பொறியாளர், செங்கற்பட்டு, வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1, அவர்தம் அலுவலகத்தில் ஒப்பந்த புள்ளிப்பத்திரங்கள் கிடைக்கக் கூடிய தேதி:—27-10-1971 முதல் 10-11-1971 வரை.

மேற்பார்வைப் பொறியாளர், (பொ.ப.து.
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 17)

---

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை, தஞ்சாவூர் வட்ட மேற்பார்வை பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 2-12-1971 மாலை 3-00 மணி வரைப் பெற்றுக்கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்:—திருவையாற்றில் 1 உதவி ஆய்வாளர், 4 தலைமைக் காவலர்கள், 18 காவலர்கள் ஆகியோருக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

2 ஒப்பந்த வகை.—மொத்தத் தொகை.

3 பிணைப்பணம் செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்:—ரூ. 5,325.

4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ.ப. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை என்னும் தலைப்பில் செயற் பொறியாளர், கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்.—ரூ. 30.00.

5 விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி "டி" பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்னும் தலைப்பில் செலுத்தல் வேண்டும்.—ரூ. 1.05.

6 கால அளவு.—பத்து மாதங்கள்.

7 ஒப்பந்தப் பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்:—10-11-1971 முதல் 1-12-1971 முடிய.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 18)

ஒப்பந்தப் புள்ளி

## தர்மபுரி மின் இயக்கத் திட்டம் குத்தகை விளம்பரம்

கீழே குறிப்பிட்டுள்ள பணிகளைச் செய்வதற்கான மூடிமுத்திரையிட்ட குத்தகைகள், அடியிற் கையொப்பமிட்டவரால் தர்மபுரியில் உள்ள அவரது அலுவலகத்தில் குறிப்பிட்ட முடிவு நாட்களில் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

| சாற்றுக் குறிப்பு எண். | வேலைக் குறிப்பு. | சேர்ப்பிடம். | முடிவு நாள். |
|---|---|---|---|
| த.மி.தி./34/71 | பார்கோ 165 W. B. 5 டன் உள்ள இரண்டு லாரிகளுக்கு கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல். | தர்மபுரி. | 8—11—1971 |
| த.மி.தி./35/71 | இந்துஸ்தான் பெட்போர்டு 179 W.B. 5 டன் உள்ள இரண்டு லாரிகளுக்குக் கம்பம் ஏற்றிச் செல்லும் கருவிகளோடு பாடி கட்டுதல். | தர்மபுரி. | 8—11—1971 |
| த.மி.தி./71 .. | பார்கோ மாடல் B6/B. 300—133 W. B. பிக்கப் வேனுக்கு பாடி கட்டுதல். | தர்மபுரி. | 8—11—1971 |

சாற்றுக்குறிப்புப் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 [(ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித்தரத்தக்கதல்ல)] பண அஞ்சல் (M.O.) மூலமாகவோ அல்லது நேரிலோ தர்மபுரி மின் திட்டத் தலைமைக் கணக்காயரிடம், சாற்றுக் குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு பெற்றுக் கொள்ள வேண்டப்படுகிறது. கூப்பனில் தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவாகக் குறிப்பிடாமல் இருந்தால் பண அஞ்சல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பண அஞ்சல்கள் குறிப்பிட்டுள்ள முடிவு நாட்களுக்கு ஐந்து நாட்கள் முன்வரையில் மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்திற்கும் பிணைத்தொகையாக, பணத்தையோ அல்லது பண மாற்றோலையையோ (Demand Draft) தர்மபுரி மின்திட்ட அலுவலகத்தில் நேரில் செலுத்தி முன் இரசீது பெற்று குத்தகைகளுடன் இணைக்கப்பட்டோ அல்லது பணமாற்றோலையைக் குத்தகைகளுடன் இணைத்தோ அனுப்புதல் வேண்டும். பிணைத்தொகை இல்லாத குத்தகைப் பாரங்கள் கட்டாயமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அஞ்சல் மூலம் பணம் அனுப்பினவர்களுக்கு சாற்றுக்குறிப்புகள் சாதாரணத் தபாலில் அனுப்பப்படும். சாற்றுக் குறிப்புகள் கிடைக்காவிட்டாலோ அல்லது தாமதமாகக் கிடைத்தாலோ தமிழ் நாடு மின்வாரியம் பொறுப்பேற்காது. மேற்படி சாற்றுக் குறிப்புகள் பிறருக்கு மாற்றிக் கொள்ள தக்கதல்ல.

விலை ஒப்பந்தங்கள் குறிப்பிட்டுள்ள முடிவு நாள் அன்று பிற்பகல் 3 மணியளவில் அவ்வமயம் வந்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். குறித்த காலத்திற்கு (2 மணி) பின்னர் வந்து சேரும் விலை ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு குத்தகையையோ அல்லது எல்லா குத்தகைகளையுமோ எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைதாரர்களுக்கிடையே உத்திரவைப் (Order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வைப் பொறியாளர்,

தர்மபுரி மின் இயக்கத்திட்டம்,
தர்மபுரி.

(த. 8)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழ்க்காணும் வேலைகளை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி விலை ஒப்பந்தங்கள் (Separate Sealed Tenders) அடியில் கையொப்பம் இட்டவரால் அவரது அலுவலகத்தில் சாற்றுக் குறிப்பு எண்ணுக்கு எதிர்ப்புறமாக உள்ள தேதிகளில் பிற்பகல் 1-30 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் விவரமும். | சாற்றுக் குறிப்பு எண். | கட்டுத் தொகை. | கடைசியாக நிர்ணயிக்கப்படும் தேதி. |
|---|---|---|---|
| 1 திருவலம் துணை மின் நிலையம் குடியிருப்புக் கட்டட வேலைகள் சம்பந்தமாக. | Gee (vm) 69. | 2,500 | 25-11-1971 |
| 2 மோசூர் துணை மின் நிலையம் குடியிருப்புக் கட்டட வேலைகள். | Gee (vm 70. | 2,500 | 25-11-1971 |

வேலைகளுக்கான ஒப்பந்தங்களை இவ்வலுவலகத்தில் 25-10-71 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ உரிய தொகை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கண்ட ஒவ்வொரு துணை மின் நிலையங்களிலும் உள்ள வேலைகளுக்கான ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பிரதிகள் (Tender Specification) வரைபடங்கள் ரூ.30 அல்லதுஒப்பந்தங்கள் (Tender Schedule) மட்டும் வேண்டுவோர் ரூ. 15 செலுத்தித் தலைமைக் கணக்காயர் (Chief Accountant) பொது நிர்மாண வட்டம், காட்பாடி நகர் விரிவு (வட ஆர்க்காடு மாவட்டம்) அவர்களிடம் ரொக்கமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ (கூப்பனில் சாற்றுக் குறிப்பு எண்ணைக் குறிப்பிட்டு) செலுத்தவும். சாற்றுக் குறிப்பு என் கூப்பனில் தெளிவாக குறிப்பிடப்படாமல் இருந்தால் மணி ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்தங்கள் சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பப்படும். அஞ்சல் துறையினால் ஏற்படும் கால தாமதத்திற்கோ, இழப்பிற்கோ மின் வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் புள்ளியும் ஸ்பெசிபிகேஷனும் மாற்றத்திற்குரியன அல்ல. ஒப்பந்தப் புள்ளியின் விலை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. ஒப்பந்தங்கள் அனுப்பும் பொழுது முன்பணமாக (கட்டுத் தொகை) ஒவ்வொரு ஸ்பெஸிபிகேஷனுடனும் அனுப்பப்படாவிட்டால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. முடிவுத் தேதியன்று 3-30 மணிக்கு ஆஜராக விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

ஒப்பந்தங்கள் நிர்ணயிக்கப்பட்ட பாரத்தில் இல்லாவிடினும் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் அனுப்பாவிடினும் அவைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எல்லா ஒப்பந்தங்களையும் காரணம் காட்டாமல் தள்ளுபடி செய்வதற்கோ அல்லது வேலைகளைத் தனித்தனியாக வெவ்வேறு ஒப்பந்ததாரர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கோ கீழே கையொப்பமிட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு.

**எஸ். வெங்கட கிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர், விழுப்புரம் நிர்மாண வட்டம், காட்பாடி நகர் விரிவு அஞ்சல்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

(த.19)

## விவரங்கள் தேவை

### சமுதாய நலத்துறை

தமிழ்நாட்டில் சமுதாய நலத் தொண்டு செய்யும், மத, அற, தனியார் தொண்டு நிறுவனங்கள் பற்றிய விவரங்களைக் கொண்ட குறிப்பு நூல் (Directory) ஒன்றினைத் தயாரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இக் குறிப்பு நூலில் அகில உலக நிறுவனங்கள் மற்றும் தமிழ் நாட்டில் தொண்டு செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் விவரங்களும் சேர்க்கப்பெறும். இக்குறிப்பு நூலைத் தயாரிக்க சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கீழ்க்கண்ட விவரங்களை 10—11—1971 தேதிக்குள் அரசு செயலாளர், சமுதாய நலத்துறை, சென்னை-9 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் :

(1) சமுதாய நலத் தொண்டு செய்யும் மத, அற, மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயரும் முகவரியும், தலைவரின் பெயரும்.

(2) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனத்துடன் ஒருங்கிணைந்துள்ள நிறுவனத்தின் பெயரும் முகவரியும்.

(3) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனம் செய்யும் தொண்டின் விவரம்.

(4) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனத்தால் நிர்வகிக்கப்பெறும் சமுதாய நல நிலையங்களின் பெயர்.

(5) குறிப்பிடப்பெற்றுள்ள நிறுவனத்தின் வருமான இனங்கள் பற்றிய சுருக்கமான விவரங்கள்.

(6) குறிப்புரை.

(த.7)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப் படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 1971-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ஆம் நாள் புதன்கிழமை மாலை 3·00 மணிவரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில்மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தங்கள் அதே நாள் மாலை 3·15 மணி அளவில் (அலுவலகக் கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | கோட்டம். | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| 1 கொடநாடு காணும் அடிப் படைக்கு செல்லும் அணுகு பாதைக்கு மேம்பாடு. | நீலகிரி .. | ரூ. 2,080 |
| 2 ஆவல்பூந்துறை பண்ணைக் கிணர் சாலையில் மைல் 2/1, 2/3ல் உள்ள வெள்ளத்தால் சேதமடைந்த தாம்போகிகளைப் புதுப்பித்துக் கட்டுதலும் அவற்றிற்கு அணுகு பாதை அமைத்தலும். | ஈரோடு .. | ரூ. 6,600 |

ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தக் கோட்டப் பொறியாளர்களிமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 20 உடன் விற்பனை வரியும் செலுத்தி 20—10—1971 முதல் 9—11—1971 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன் வைப்புத் தொகையை அந்தந்தக் கோட்ட பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேயும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன் வைப்புத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானல் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்க வேண்டும். தவிர ரிசர்வு பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தத்துடன் இணைக்க வேண்டும்.

**பா. சேக்உமர்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப)

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2.

(த. 2.)

## ஒப்பந்தம் ரத்துச் செய்தல்

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—வடார்க்காடு மாவட்டம் — செங்கத்தில் 38 படுக்கைகள் கொண்ட புதிய அரசினர் மருத்துவ மனை கட்டுதல்.

மேற்குறிப்பிட்ட வேலைக்காக அழைக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு ரத்துச் செய்யப்படுகிறது.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பொ.ப.து., செங்கை-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த.4)

## ஒப்பந்தப் புள்ளி

### போக்குவரத்துத் துறை சென்னை-2

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, சென்னை-2, அவர்களால் கீழ்க்கண்ட ஸ்டால்கள் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் நிர்வாகப் பொறியாளர் அலுவலகத்தில் 10—11—1971 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 1-வது நெம்பர் ஸ்டால்.

2. மந்தைவெளி பேருந்து நிலையத்தில் உள்ள 4-வது நெம்பர் ஸ்டால்.

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப்பத்திரங்கள் முதலியவற்றை, நிர்வாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2, அவர்களிடம் ரூ. 1·04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3·15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இந்த பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

**இயக்குநர்,**

(த.6)

## மறு ஒப்பந்தப்புள்ளி

**மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம். பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், தபால் பெட்டி எண் 55, திருச்சிராப்பள்ளி-1.**

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சிராப்பள்ளி, அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படிப் பெற்றுக் கொள்ளப்படும்.

1 வேலையின் பெயர்:—திருச்சிராப்பள்ளி தலைமை மருத்துவமனையில் இரண்டு அறுவைச் சிகிச்சை அரங்கங்களுக்குக் குளிர் சாதன வசதிகள் அமைத்தல்.

2 ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கான கடைசித் தேதி, மற்றும் நேரம்:—11-11-1971 மாலை 3-00 மணி.

3 பிணைப் பொறுப்புத் தொகை:—ரூ. 3,900 (ரூபாய் மூவாயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்).

4 ஒப்பந்த முறை:—மொத்தத் தொகை.

5 முடிக்க வேண்டிய காலம்:—ஆறு மாதங்கள்.

6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை:—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).

7 விற்பனை வரி.—ரூ. 0.88 (எண்பத்தெட்டு பைசாக்கள் மட்டும்).

8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி:—27-10-1971.

9 விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம்:—11-11-1971 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் "**XXXVII.** Public Works—State Revenue—Miscellaneous." மற்றும் "**XII.** Sales-tax—(b) Receipts under the State Sales-tax Act—General Sales-tax" என்ற தலைப்புகளின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்தச்சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**நா. முத்துக்கிருஷ்ணன்,**
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்

(த. 12)

## ஒப்பந்தப் புள்ளி

### காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 15-11-1971 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | உடன் தணிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இடவசதி செய்ய, ஓர் அறை கட்ட. | 10,500 | 525 |
| 2 | குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய், சேய்நல விடுதியைப் பழுதுபார்க்க. | 6,700 | 335 |
| 3 | பாரதி கலை அரங்கின் மேடையை அகலப்படுத்த. | 5,000 | 250 |
| 4 | ஒலிமுகம்மது பேட்டை தாய், சேய்நல விடுதிக்கட்டடத்தை விரிவுபடுத்த. | 9,000 | 450 |
| 5 | ஏ. வி. அளகேசன் நகராட்சிப் பேருந்து நிலைய நுழைவாயிலின் அருகில் டாக்சி ஸ்டாண்டு அமைக்க. | 8,000 | 400 |
| 6 | நீரவிப்புச் சாமான்கள் வாங்க | 16,000 | 400 |

காஞ்சிபுரம்,
11-10-1971.

த. ஆ. சிவசுப்பிரமணியன்,
ஆணையர்.

(த. 20)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி.

பொள்ளாச்சி நகராட்சிக்கு மரம் மற்றும் ஹார்டுவேர் சாமான்கள் வினியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-11-1971 மாலை 3-00 மணி வரை ஆணையர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். அவை அன்று 3-30-க்குத் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டுத் தொகை ரூ. 20·00 செலுத்த வேண்டும்.

பி. கே. முகமது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
11-10-1971.

(த. 22)

ஒப்பந்தப் புள்ளி

## சென்னை மின்சார அமைப்பு (விநியோகப் பிரிவு)

### சாற்றுக் குறிப்பெண் எஸ். 27

சென்னை மின்சாரத் (விநியோகம்) திட்டத்தில் ஏலம் நடத்துவதற்கான ஒப்பந்த விவரம்

கீழே குறிப்பிட்டுள்ள மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கழிவுச்சாமான்கள், காலி டின்கள் மற்றும் வழக்கிறந்த உபயோகமில்லாத பொருட்களும் எந்திரத் தொகுதிகளையும் வாங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கையொப்பமிட்டவரால் 9—11—1971 பகல் 12 மணிவரை வரவேற்கப்படுகிறது. மூடி முத்திரையிட்ட உறைகளின் மேல் '' கழிவுச் சாமான்கள், காலி டின்கள் மற்றும், வழக்கிறந்த பொருட்களை வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி '' என்று தவறாமல் எழுதி அனுப்பவேண்டும்.

| *Item number.* | *Description.* | *Quantity.* | *Available at.* |
|---|---|---|---|
| 1 | M.S. Melting Scrap .. .. .. .. | 5,339 Kgs. | Central Stores, M.E.S./Distn Mylapore, Madras-4. |
| 2 | G.I. & M.S. Wire Scrap .. .. .. .. | 6,281 ,, | Do. |
| 3 | Light Sheet Scrap .. .. .. .. | 13,718 ,, | Do. |
| 4 | Steel Stamping Scrap .. .. .. .. | 7,019 ,, | Do. |
| 5 | G.I. & M.S. Pipe Scrap .. .. .. .. | 5,313 ,, | Do. |
| 6 | Auto & Machinery Scrap .. .. .. .. | 1,506 | Do. |
| 7 | Cast Iron Scrap .. .. .. .. .. | 15,950 ,, | Do. |
| 8 | Tubular Pole Scrap .. .. .. .. | 5,404 ,, | Do. |
| 9 | Condemned Transformer Tank Scrap .. .. | 8,590 ,, | Do. |
| 10 | Aluminium Cable Scrap .. .. .. .. | 11,141 ,, | Do. |
| 11 | All Aluminium Scrap .. .. .. .. | 4,657 ,, | Do. |
| 12 | A.C.S.R. Scrap .. .. .. .. .. | 4,787 ,, | Do. |
| 13 | M.S. Rod Cut bits below 2′ .. .. .. | 7,485 ,, | Do. |
| 14 | M.S. Rod Cut bits above 2′ .. .. .. | 16,889 ,, | Do. |
| 15 | Copper Cable Scrap .. .. .. .. | 48,779 ,, | Do. |
| 16 | M.S. Structural Cuttings .. .. .. .. | 98,535 ,, | Do. |
| 17 | Rail & R.S. Joists cut bits Scrap .. .. | 7,444 ,, | Do. |
| 18 | V.I.R. & W.P. Wire Scrap (Copper) .. .. | 1,982 ,, | Do. |
| 19 | V.I.R. & Wire Scrap (Aluminium) .. .. | 2,317 ,, | Do. |
| 20 | Brass Scrap .. .. .. .. .. .. | 807 ,, | Do. |
| 21 | Lead Scrap .. .. .. .. .. .. | 772 ,, | Do. |
| 22 | Hoop Iron Scrap .. .. .. .. .. | 661 ,, | Do. |
| 23 | G.I. Metal Parts Scrap .. .. .. .. | 556 ,, | Do. |
| 24 | Empty Tin 1 Gln. Cap .. .. .. .. | 43 Nos. | Do. |
| 25 | Empty Tin 4 Gln. Cap .. .. .. .. | 39 ,, | Do. |
| 26 | Empty Tin 5 Gln. Cap .. .. .. .. | 120 ,, | Do. |
| 27 | Empty tin 1 Pint & 1 to 3 Litre Capacity .. | 153 ,, | Do. |
| 28 | Empty Tin 40/45 Gln. Capacity .. .. .. | 320 ,, | 'D' Section at Central Stores, M.E.S. (D), Tondiarpet. |
| 29 | Empty Jar .. .. .. .. .. .. | 1 No. | Central Stores, M.E.S. (D), Mylapore, Madras-4. |
| 30 | Empty Bottles of sizes .. .. .. .. | 135 Nos. | Do. |
| 31 | Fused Tube lamps assorted sizes.. .. .. | 18,067 ,, | 11,452 Nos. at Mylapore Stores and 6,615 Nos. at Pallavaram Stores. |
| 32 | Defective Tube light chokes Scrap .. .. | 3,274 ,, | Central Stores, Mylapore, Madras-4. |
| 33 | Fused Tube light Starters .. .. .. .. | 3,252 ,, | Do. |
| 34 | Moulding Ash .. .. .. .. .. | 500 ,, | Do. |
| 35 | Sub-station battery cells .. .. .. | 44 ,, | Do. |

| Item number. | Description. | Quantity. | Available at. | |
|---|---|---|---|---|
| 36 | Scarp Batteries 6 Volt .. .. .. .. | 2 ,, | Central Stores, Mylapore Madras-4. | |
| 37 | Condemned Pedestal Fans .. .. .. .. | 2 ,, | Do. | |
| 38 | Condemned D.C. Ceiling fans with blades .. | 4 ,, | Do. | |
| 39 | Bicycle Scrap .. .. .. .. .. | 3 ,, | Do. | |
| 40 | Cycle Tyre Scrap .. .. .. .. .. | 3 ,, | Do. | |
| 41 | Cycle Tube .. .. .. .. .. .. | 3 ,, | Do. | |
| 42 | Motor Type Scrap of sizes .. .. .. | 132 ,, | Do. | |
| 43 | Motor tube Scraps .. .. .. .. | 103 ,, | Do. | |
| 44 | Scrap flaps .. .. .. .. .. .. | 2 ,, | Do. | |
| | | | At Tondiarpet Stores. | At Adyar Stores. |
| 45 | Empty Cable drums (Wooden) Big .. .. | 10 Nos. | 10 | Nil. |
| 46 | Empty Cable drums (Wooden) Medium .. .. | 38 ,, | 33 | 5 Nos. |
| 47 | Empty Cable drums (Wooden) Small .. .. | 85 ,, | 48 | 37 ,, |
| 48 | Empty Conductor Drums (Wooden) .. .. | 34 ,, | At Tondiarpet Stores. | |
| 49 | Deal Wood Scrap .. .. .. .. .. | 14,340 Kgs. | Do. | |
| 50 | Wood Pole Scrap .. .. .. .. | 4,089 ,, | Do. | |
| 51 | Empty Cement Gunnies .. .. .. .. | 9,800 Nos. | Do. | |
| 52 | Defective Unserviceable 1/2 H.P. SP. Elecl. Motor No. 31401009. | 1 No. | Central Stores, M.E.S. (D), Mylapore. | |
| 53 | D.C. Motor 8 H.P. 450V/15.7 Amps. 1440 RPM. Sl. No. 4473753/SH. | 1 ,, | Do. | |
| 54 | Condemned Spot Welding Set Indian make .. | 1 ,, | Do. | |
| 55 | Condemned Band Sae machine .. .. .. | 1 ,, | Do. | |
| 56 | Condemned Rems Threading machine .. .. | 1 ,, | Do. | |
| 57 | Condemned Upright drilling machine .. .. | 1 ,, | Do. | |
| 58 | *Condemned Vehicles—* | | | |
| | (*a*) Bedford Station Wagon MSZ 8116 .. | .. | Available at Transport Office, M.E.S. (D.), Wallajah Road, Madras-2. | |
| | (*b*) Fargo Pick up Van MSY 3144 .. .. | .. | Do. | |
| | (*c*) Fargo Pick up Van MSY. 3125 .. .. | .. | Do. | |
| | (*d*) Fargo Station Wagon MDY. 3621 .. | .. | Do. | |
| | (*e*) Tempo Van (Triwheeler) MSV. 6117 .. | .. | Do. | |
| | (*f*) Tempo Van (Triwheeler) MSV. 3750 .. | .. | Do. | |
| | (*g*) Willy's Van MDU. 7588 .. .. .. | .. | Central Stores, M.E.S. (D), Cooks Road, Otteri, Madras-12. | |
| | (*h*) Fargo Van MDN. 3825 .. .. .. | .. | Do. | |

குறிப்பிட்ட தேதி நேரம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். குறிப்பிடுகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி விவரம், விற்பனை நிபந்தனைகள் நகல் வேண்டுவோர் நகல் ஒன்றுக்கு ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், சென்னை மின்சார அமைப்பு (விநியோகம்) 157, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படித் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது. அஞ்சலில் அவை தவற நேரிட்டாலோ அல்லது தாமதம் ஏற்பட்டாலோ அவற்றிற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

ஒப்பந்தப் புள்ளியில் சாமான்கள் வாங்குவதற்குகாகக் குறிப்பிடும் மொத்தத் தொகையில் 10 சதவிதத் தொகையை ரொக்கமாகவோ, அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ கட்டுத் தொகையாக அக்கௌண்ட்ஸ் ஆபீஸ், சென்னை மின்திட்ட (விநியோகம்), 157, அண்ணாசாலை, சென்னை-2ல் கட்ட வேண்டும். கட்டுத் தொகையான 10 சதவிகிதத் தொகையைப் பணமாகவோ அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்தியதற்கான சான்று இணைக்கப் பெறாமல் வரும் ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

விற்பனைக்காக மேலே குறிப்பிட்டுள்ள சாமான்களின் எண்ணிக்கைகளும் அவற்றின் அளவைகளும் மாற்றப்படவோ அல்லது நீக்கப்படவோ தக்கதாகும். கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமைப் பெற்றவராவார்.

மேற்பார்வை மின் பொறியாளர்,
சென்னை மின்சாரத் திட்டம்
(விநியோகம்).

157, அண்ணாசாலை, சென்னை-2.
(ஜ. 3)

## வீட்டு வசதி வாரியம்

### ( தெற்குக் கோட்டம் )

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு எண். எஸ். 4/6037/71

கீழ்க்கண்ட வேலைகளுக்காக, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட, மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள், கீழே கையொப்பமிட்டவரால், கீழே குறிப்பிடப்பட்ட தேதிகளில் மாலை 3-00 வரை வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| எண்ணும் வேலையின் விவரமும். | சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. | ஒப்பந்தப் புள்ளி பெற கடைசித் தேதி. |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | |
| 1 டி. பி. ஆர். திட்டத்தில் டைப் டிசைன் 129/71 படி 40 இணைப்பு வீடுகள் கொண்ட ஒரு பிளாக் கட்டுதல். | 2,75,000 | 4,125 | 15+ வி. வ. | 9-11-1971 |
| 2 ஒரு படுக்கை அறை உள்ள, நான்கு தள 16 இணைப்பு வீடுகள் கொண்ட ஒரு பிளாக்கை சாமியர்ஸ் ரோடு நந்தனத்தில் கட்டுதல். | 2,00,000 | 3,000 | 15+ வி. வ. | 9-11-1971 |
| 3 நந்தனம் சாமியர்ஸ் ரோடில் கிரவுண்டு ஃபுளோரில் 6 கடைகள் கொண்ட ஒரு பிளாக், மேல் தளங்களில் 9 இணைப்பு வீடுகள் கட்டுதல். | 1,60,000 | 2,400 | 10+ வி. வ. | 11-11-1971 |
| 4 நந்தனம் சாமியர்ஸ் ரோடில் 12 இணைப்பு வீடுகள் கொண்ட ஒரு பிளாக் கட்டுதல். | 1,60,000 | 2,400 | 10+ வி. வ. | 11-11-1971 |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களையும் இதர விவரங்களையும் நிர்வாகப் பொறியாளர் (தெ.) அலுவலகம், வீட்டு வசதி வாரியத்தில் 28-10-1971லிருந்து எல்லா அலுவல நாட்களிலும் காலை 10-00 மணிமுதல் பிற்பகல் 2-00 மணிவரை கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். குமரேசன்,**
நிர்வாகப் பொறியாளர் (தெற்கு.)

(த. 25)

ஒப்பந்தப் புள்ளி

## குடிநீர், வடிகால் வாரியம்

### ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்குக் கடைசித்தேதி நீட்டிப்பு

பொருள் : பல்வேறு நீர்வழங்கு திட்டங்களுக்கு ஒருமித்தக்கிணறு (Collector well) அமைப்பு.

ஒப்பந்தப் புள்ளிகள் பெற கடைசித் தேதி மேற்கொண்டு 5–11–1971 வரை நீட்டிக்கப் பட்டிருக்கிறது. 5–11–1971 பிற்பகல் 3-00 வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப் பட்டு அதே நாள் பிற்பகல் 3-30-க்கு சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல்) வட்டம் அவர்களால் அல்லது அவர்களால் அதிகார மளிக்கப்பட்டவர்களால், அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

மூல ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் கண்டுள்ள மற்ற நிபந்தனைகள் எதிலும் மாற்றம் இல்லை.

**எம். மியாகான்,**

தலைமைப் பொறியாளர், (மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் நகராட்சிப் பணிகள்),
குடிநீர் வடிகால் வாரியம், சென்னை-5.

(கு. 10)

## பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி உறைகளில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 11—11—1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரைப் பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் விதி முறைகள் வேண்டுவோர் முதல் வேலைக்கு ரூ. 5-ம், விற்பனை வரி ரூ. 3-50 சதவீதமும் மற்ற வேலைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும்ரூ. 2-ம், விற்பனை வரி ரூ. 3-50 சதவீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி செலுத்துச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 9—11—1971 வரைப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விபரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலைநேரங்களில் விசாரிக்கவும்.

| வரிசை எண். | கட்டின் நடப்பு எண். | வேலையின் பெயர். | மதிப்பீடு தொகை. ரூ. | முன் வைப்புத் தொகை. ரூ. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| 1 | இ1/23452/70 | காந்தி சந்தையில் மாடு வதைக் கட்டடம் கட்டுதல். | 20,387 | 510 | 3 மாதம். |
| 2 | இ1/529/71 | வடுகபாளையம் நகராட்சிப் பள்ளியின் கீழ்புற தென்புறச் சுற்றுச் சுவரைப் புதுப்பித்துக் கட்டுதல். | 8,283 | 207 | ,, |
| 3 | இ1/13042/71 | மரப்பேட்டை சுண்ணும்புக் காளவாய் இட்டேரி ரோடுக்கு ஓடையிலிருந்து தெற்கே ரயில்வேலைன் வரை கருங்கல் கப்பிப் போட்டு தார் தளம் போடுதல். | 8,510 | 213 | ,, |
| 4 | இ1/19498/70 | வடுகபாளையம் இடையர் வீதிக்குத் தார் தளம் போடுதல் மற்றும் ஒரு சிறுபாலம் கட்டுதல். | 13,942 | 349 | ,, |
| 5 | இ1/3151/71 | புதிய உர உற்பத்தி நிலையத்தில் உள்புறம் ஒரு பகுதிக்குக் கருங்கல் கப்பி ரோடுகள் போடுதல். | 19,247 | 482 | ,, |
| 6 | இ1/7719/70 | ஜுபிலி கிணறு இடத்தில் தண்ணீர்த் தொட்டி மோட்டார் ரூம் கட்டுதல், கிணற்றுக்கு கம்பி அளி போடுதல் மற்றும் கிணறு ஆழப்படுத்துதல். | 8,686 | 217 | ,, |
| 7 | இ1/7695/71 | தரை மட்ட தண்ணீர்க் கிடங்கில் காவலாளி குடியிருப்பு மற்றும் ஆபீஸ் அறைக் கூரைகளைப் பிரித்துவிட்டு சிமெண்ட் கான்கிரிட் கூரை போடுதல் மற்றும் தளவாட அறை கட்டுதல். | 13,893 | 348 | ,, |

| வரிசை எண். | கட்டின் நடப்பு எண். | வேலையின் பெயர். | மதிப்பீடு தொகை. | வைப்புத் தொகை. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. | |
| 8 | இ1/14386/71 | கோட்டூர் வழி நடுநிலைப் பள்ளியில் சிறுநீர் மற்றும் மலக்கழிப்பிடம் கட்டுதல். | 8,143 | 204 | 1 மாதம். |
| 9 | இ1/1438/71 | தெப்பக்குளம் வழிப்பள்ளியில் சிறுநீர் மற்றும் மலக்கழிப்பிடம் கட்டுதல் | 8,143 | 204 | ,, |

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
6—10—1971.

(தூ. 35)

---

## ஒப்பந்தப் புள்ளி

---

### வீட்டு வசதி வாரியம்

### சென்னை கிழக்குக் கோட்டம்

கோப்பு எண். எம். இ.6/437/71, 7—10—1971

உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்டு, தனித் தனியான, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், பட்டினப்பாக்கத்தில் கீழே கையொப்பமிட்டவரால் 22—11—1971 மாலை 3-00-மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| எண். | வேலையின் பெயர். | சுமார் வேலை மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | தற்போதுள்ள 7 பிளாக்குகளிலும் எல்லா வசதிகளுடன் இரண்டாம் தளம் கட்டுதல் | 4,59,800 | 6,900 | 15 இத்துடன் விற்பனை வரி. |
| 2 | ஷை | 4,59,800 | 6,900 | ஷை |
| 3 | ஷை | 4,59,800 | 6,900 | ஷை |
| 4 | தற்போதுள்ள 8 பிளாக்குகள் மீது எல்லா வசதிகளுடன் இரண்டாம் தளம் கட்டுதல். | 5,25,400 | 7,880 | ரூ. 20 இத்துடன் விற்பனை வரி. |

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மாலை 3-05 மணிக்கு பிரிக்கப்படும். மேற்கொண்டு விவரங்களையும், பத்திரங்களையும், பிரதிகளையும் 6–11–71 முதல் கட்டணம் செலுத்தி (இது திருப்பித்தரப்படமாட்டாது) எல்லா அலுவல் நாட்களிலும் காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணிவரைக் கீழ்க்கண்டவரின் அலுவலகத்தில் பெறலாம். காரணம் எதுவும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் ஏற்கவும் எதையும் அல்லது அனைத்தையும் நிராகரிக்கவும் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

டி ஜகதீசன்,
நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(தூ. 31)



1–11—10எ

## நவீன மீன்பிடி பயிற்சி

கடலூர் (தென்னார்க்காடு மாவட்டம்)

கடலில் சென்று மீனவர்களுக்கு நவீன முறையில் இயந்திரப் படகிலிருந்து மீன் பிடித்தல், நேவிகேஷன், இயந்திரப் பராமரிப்பு ஆகியவற்றில் மேற்கூறிய பயிற்சி நிலையத்தில் பத்து மாதப் பயிற்சி அளிக்கப்படும்.

விண்ணப்பதாரர் 18 வயதிற்கு மேற்பட்டும், 35 வயதிற்கு உட்பட்டும் இருக்க வேண்டும். குறைந்தது 5 வருடம் கடலில் மீன் பிடி அனுபவம் உள்ளவர்களாகவும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவும் நல்ல தேக ஆரோக்கியமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆனால், எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பது தகுதியற்றதாகக் கருதப்பட மாட்டாது. விசைப் படகுகளை நடத்தும் மீனவர் குழுவினர்களுக்கும், மீன் இலாகாவிலிருந்து விசைப் படகு பெறுவதற்கு முன் பணம் கட்டிமனுச் செய்துள்ள மீனவர்களுக்கும் சலுகை அளிக்கப்படும். பயிற்சிக்காலத்தில் மாதம் ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உபகாரச் சம்பளமும், மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லும் தினங்களில் 0·50 காசு (ஐம்பது காசுகள் மட்டும்) படியும் அளிக்கப்படும். இப்பயிற்சிக்காக ஐம்பது மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டோர் இந்த இலாகாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளவர்கள் மட்டுமே கடலூரில் அளிக்கும் பயிற்சிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். விண்ணப்பத் தாள்களைத் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மீன் இலாகா உதவி இயக்குநரிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத் தாள் அனுப்பும் உறையின் தலைப்பில் 'நவீன மீன்பிடி பயிற்சி' என்று எழுத வேண்டும். நேர் முகத் தேர்வின் தேதியும், இடமும் முன் கூட்டியே தெரிவிக்கப்படும்.

எல்லா விண்ணப்பங்களும் மீன் துறை உதவி இயக்குநர், மீனவர் பயிற்சி நிலையம், கடலூர்-3, தென்னார்க்காடுமாவட்டம் என்ற விலாசத்திற்கு 9–11–1971-ஆம் தேதி காலை பத்து மணிக்குள் தபாலின் மூலம் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும். அரசு ஆணை எண் 1121, விவசாயத்தின்படி இம் முறை மட்டும் 17 வயது நிரம்பியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இப் பயிற்சிக்காக வேண்டி 15–9–1971-ஆம் தேதிக்கு முன்பு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

**தி. மா. ஆறுமுகம்,**

*மீன்துறை துணை இயக்குநர், (மண்டலம்), சென்னை-6.*

(த. 13)

---

## ஒப்பந்தப் புள்ளி

### வேளாண்மைத் துறை

கீழே கையொப்பமிட்டவரால் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சாக்கோட்டை அரசினர் விதைப் பண்ணையில், நவீன நெல் உலர்த்தும் (Paddy seed processing plant) கருவி வழங்கவும், அமைக்கவும், முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10–11–1971 அன்று மாலை 3 வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரப்பெற்ற ஒப்பந்தங்கள் அன்றே 3-30 மணிக்கு முதுநிலை ஆராய்ச்சிப் பொறியாளர் அவர்களால், அவரது அலுவலகத்தில் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனை பத்திரங்கள் நமூனக்கள் முதலியவற்றைக் கீழேகையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து, ரூ. 20.70 (ரூபாய் இருபதும் காசுகள் எழுபதுமட்டும் விற்பனை வரி உட்பட) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். (செலுத்தப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது). நிபந்தனைப் பத்திரம் வாங்கப் பணம் செலுத்துவோர் காசோலையில் (1) XXV வேளாண்மை— வேளாண்மை வருவாய் — பலதரப்பட்டவை என்றும் (ii) விற்பனை வரிக்கு XII–A விற்பனை வரி (d) பலதரப்பட்டவை— I. பொது விற்பனை வரி என்றும் தலைப்பு எழுதி அவற்றினைக் கருவூலத்திலோ, அல்லது ரிசர்வ் வங்கி, ஸ்டேட் வங்கியிலோ செலுத்தி அதன் மூன்றும் பிரதியை அனுப்ப வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியும் ரூ. 5,000 முன் வைப்புத் தொகை கொண்டதாகவும், அதாவது இயந்திரத்தின் தொகையில் ஒரு சதம் கொண்டதாகவும் உள்ள மூன்றும் பிரதியுடன் வருமான வரி, விற்பனை வரி நீக்கம், பெற்ற சான்றிதழுடன் அனுப்ப வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர், இயந்திரத்தின் மொத்த விலையில் 10 சதம் உறுதி முன் பணம் செலுத்தி, வேளாண்மை இயக்குநர், சென்னை, அவர்களுடன் ஒப்பந்தப் பத்திரம் செய்துகொள்ள வேண்டும்.

காரணங்களை ஒப்பந்தப் புள்ளிதாரர்களுக்கு விளக்காது அவர்களது ஒப்பந்தப் புள்ளிகளை நிராகரிக்கும் உரிமை உண்டு.

முதுநிலை ஆராய்ச்சிப் பொறியாளர், மண்டல ஆராய்ச்சி நிலையம், லாலி ரோடு அஞ்சல், கோவை-3.

**இயக்குநர்,**

**வேளாண்மைத்துறை.**

(த. 9)

---

## ஒப்பந்தப்புள்ளி

### தமிழ்நாடு மின்சார வாரியம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புக்குத் திருத்தம் **எண்: பி 21–50 டன் டிராக்டர்கள், டிரெய்லர்கள் குறித்து.**

மேலே குறிப்பிடப்பட்ட இனத்துக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெற தேதியும், நேரமும் 27–10–1971 நண்பகல் 12 மணி என்பதிலிருந்து 27–11–1971 நண்பகல் 12-க்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 27–11–1971 பிற்பகல் 3 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

கொள்முதல் மற்றும் ஸ்டோர்ஸ், 157, அண்ணா சாலை, சென்னை-2.

(த. 5)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

சி. ஐ. மற்றும் ஏ. சி. பிரஷர் பைப்புகள் வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 23-11-1971 மாலை 4-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும். ஒப்பந்த நிபந்தனைகள், இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது மனுச்செய்தோ பெறலாம்.

**டி. கோவிந்தராஜன்,**
தனி அலுவலர்.

(த. 26)

## சின்கோனு துறை

இந்தியாவுக்கு வெளியே ஏற்று மதிக்காக, 30 மெட்ரிக் டன் (Cinchona Feprifuge I.P.) வழங்குவதற்கு தமிழ்நாடு ஆளுநர் சார்பில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெற கடைசித் தேதி 15-11-1971 மாலை 3-30 மணி. அதே நாள் மாலை 4-00 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பிரிக்கப்படும். ஒப்பந்த நிபந்தனைகள் விவரங்களை கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து இலவசமாகப் பெறலாம்.

**இயக்குநர்,**

சின்கோனு துறை, அஞ்சல் பெட்டி எண் 6, உதகமண்டலம்.

9-10-1971.

(த. 24)

## விருதுநகர் நகராட்சி

4'' அஸ்பெஸ்டஸ் சிமெண்டு பிரசர் குழாய் மற்றும் அதற்குரிய இணைப்புச் சாமான்களும் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 12-11-71-ஆம் தேதி மாலை 4 மணி வரை நகராட்சிஅலுவலகத்தில் வைத்து பெற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தமான மற்ற விவரங்களை அலுவலக வேலை நாட்களில் நகராட்சிப் பொறியர் அவர்களிடமிருந்து எழுதிக் கேட்டு பெற்றுக் கொள்ளலாம்.

**சி. சுப்பாராஜ்,**
நகராட்சிப் பொறியாளர் & ஆணையர் பொறுப்பு.

நகராட்சி அலுவலகம்,
விருதுநகர்,

8-10-1971.

(த. 37)

## எழுதுபொருள் அச்சுத்துறை

எழுதுபொருள் அச்சுத் தொழில் துறை இயக்குநர், மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 அவர்களால் அரசினர் அச்சகம் மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1-ல் சேர்த்து வைக்கப்பட்டுள்ள கழிவுப் பொருளிலிருந்து கிடைக்கப்பெறும் உலோகத்தைப் பிரித்தெடுக்கும் உரிமையைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்களுடன் 15-11-71-ஆம் தேதி மாலை 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப் படும்.

சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் உலோகம் கலந்த கழிவுப் பொருளின் எடை ஏறத்தாழ 6 மெட்ரிக் டன்கள் தேறும். ஒப்பந்தங்கள் முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு பதிவு அஞ்சல் ஒப்பந்தத்துடன் எழுதுபொருள் அச்சுத் தொழில் துறை இயக்குநர்,மின்ட் பில்டிங்ஸ், சென்னை-1 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். மற்றபடி வேறு முறையில் அனுப்பலாகாது என்பதுடன் 'கழிவுப் பொருளிலிருந்து கிடைக்கப்பெறும் உலோகத்தைப் பிரித்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகள்'' என்ற குறிப்போடு வரும் உறைகளை 15-11-1971 மாலை 4-00 மணி அளவில் பிரிக்கப் பெறும். கழிவுப் பொருளிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கும் விலைவாசிக் குறிப்பானது 1 கிலோ கிராமிற்கான வீதத்தில் இருக்க வேண்டும்.

கழிவுப் பொருளிலிருந்து கிடைக்கப் பெறும் உலோகத்தை பிரித்தெடுக்கும் வேலையை அரசினர் அச்சக கட்டடத்திற்குள்ளேயே செய்யப்பட வேண்டும்.

**இயக்குநர்.**

மின்ட் பில்டிங்ஸ்,
சென்னை-1.

(த. 38)

## ஏல விளம்பரம்

## பொங்கலூர் ஊராட்சிஒன்றியம்

கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் தாலுகா, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான எலவந்தி வடுகபாளையத்திலுள்ள பிரதம சுகாதார நிலையத்தில் அலுவலர் குடியிருப்புக் கட்டடங்களுக்குப் பின்புறமும் ரோட்டிற்கு முன்புறமும் உள்ள இவ்வூராட்சி ஒன்றியத்துக்கு தேவைப்படாத மூன்று கட்டடங்களிலுள்ள (சுமார் ரூ. 12,500 மதிப்புள்ள) ஓடுகள், விட்டங்கள் மற்றும் ஜன்னல்கள் மரச் சாமான்கள் முதலியவைகளை 10-11-1971-ஆம் தேதி புதன் கிழமை காலை 10 மணிக்கு தனித் தனியாக ஆணையர் அவர்களால் அல்லது ஆணையர் அதிகாரம் பெற்றவர்களால் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகள் பொங்கலூர் ஊராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையர்,**

பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம்.

(த. 27)

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

எடைபோடும் இயந்திரம் ஒன்று Weighting machine with a Capacity of 1,000 k.g. plattform scale வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையரால் 16-11-1971 மாலை 4.00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் படிவங்கள் இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்றோ, மனுச்செய்தோ பெறலாம்.

**டி. கோவிந்தராஜன்**
தனி அலுவலர்.

(த. 30)

## குடிநீர் வடிகால் வாரியம்
## சென்னை நகர நீர் வழங்கும் திட்டம்
## வீராணம் செயல் திட்டம்

ஒப்பந்த அறிவிப்பு எண் : சி.இ. 15, நாள் 11—10—1971. வேலையின் பெயர் :உப்பங்கழிக்குக் குறுக்கே (ஒக்கியம் பகுதி) வலுவேற்றப்பட்ட கான்கிரிட் குழாயைத் தாங்க வலுவேற்றப்பட்ட கான்கிரீட் பாலம் கட்டுதல்.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்துக்காகவும் அதன் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக பொதுப்பணித்துறை அல்லது இதர அரசுத் துறைகளில் பதிவு செய்துகொண்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், புகழ் வாய்ந்த நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து தனி தலைமைப் பொறியாளர் பொ.ப. துறை (வீரணம் நீர் வழங்கு திட்டம், கூவம் சீர்திருத்தத் திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால், மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 24—11—1971 மாலை 3-00 மணி வரை ஏற்கப்பட்டு, அதே நாள் காலை 4-00 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம் : மொத்தத் தொகை.
2. கட்டுத் தொகை : ரூ. 9,000.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விலை—ரூ. 20.00+ விற்பனை வரி 74 காசுகள்.
4. வேலையை முடிக்க வேண்டிய காலம் : 6 மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தனித் தலைமைப் பொறியாளர் (வீ.நீ.வ.தி.கூ.சீ.தி.) சேப்பாக்கம், சென்னை-5ல் கிடைக்கும் காலம் — 26—10—1971 முதல் 20—11—1971 முடிய அலுவலகநேரத்தில்

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்குரிய கட்டணம், விற்பனைவரி ஆகியவைகளை (இது திருப்பித் தரப்படாது), தமிழ்நாட்டில் அரசுக் கருவூலத்திலோ, 'இந்திய ரிசர்வ்' பாங்கிலோ "Public Works Department Remittances III Other remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், வீராணம் திட்ட வட்டம், சென்னை-5 அவர்கள் கணக்கில் செலுத்தி, அதற்கான சலானையும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கோரும் கடிதத்தையும், தனித் தலைமைப் பொறியாளர் அலுவலகம், (வீராணம் திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5ல் தந்து பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்க தனித் தலைமைப் பொறியாளர் (வீராணம் நீர் வழங்கு திட்டம்) சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு உரிமை உண்டு.

**ஏ. வி. ஆழ்வார்,**
தனித் தலைமைப் பொறியாளர்,
(வீ.நீ.வ.தி. & கூ.சீ.தி.).

சென்னை-5.
(த. 23)



## பொறியியல் பணித்துறை

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், திருச்சி வட்டம், த.பெ.எண். 55, திருச்சிராப்பள்ளி—1

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின் படி பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்—திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டம், பஞ்சப்பட்டி அரசினர் மருத்துவ மனையில் 10 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதிக் கட்டடம் கட்டுதல்.
2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்:—17—11—1971 மாலை 3-00 மணி.
3. பிணைப்பொறுப்புத் தொகை—ரூ. 1,700 (ரூபாய் ஆயிரத்து எழுநூறு மட்டும்).
4. ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.
5. முடிக்க வேண்டிய காலம்—ஐந்து மாதங்கள்.
6. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை—ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்).
7. விற்பனை வரி—0.88 (எண்பதெட்டு காசுகள் மட்டும்).
8. ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி—2—11—1971.
9. விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்:—17—11—71 மாலை 3-30 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில். "XXXVII Public Works—State Revenue—Miscellaneous" மற்றும் "XII. Sales-tax (b) Receipts under the State Sales-tax Act—General Sales tax" என்ற தலைப்புக்களின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**நா. முத்துக்கிருஷ்ணன்,**
திருச்சி வட்ட மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 45)

### தடிகள் ஏலம்

தேக்கு, மருது, வேங்கை, வெந் தேக்கு மற்றும் பல ஜாதிகள்.

இடம் : அரசாங்க தடிமண்டி, நாகர்கோவில்.

தேதியும் நேரமும் : 10, 11-11-71 முற்பகல் 9-00.

அளவு : ஏறத்தாழ 1,200 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலுள்ள மண்டிச்சிறக அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

**எஸ். கொண்டாஸ்,**
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென்பிரிவு.

(த. 28)

### ஏலம்

### கோயம்புத்தூர் நகராட்சி

கோயம்புத்தூர் நகராட்சி எல்லைக்குள் நகராட்சிக்குச் சொந்தமான 464 புளியமரங்களின்பலன் களை 1971-ஆம் வருடம் நவம்பர் மாதம் 15-ஆம் தேதி முதல் 1972-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய அனுபவிக்கும் பாத்யதையை 15-11-1971-ஆம் தேதி காலை 11 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளையும் மற்ற விபரங்களையும் நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

**ஆணையர்.**

(த.50)

### ஏல விளம்பரம்

### திருச்சிராப்பள்ளி நகராட்சி

திருச்சிராப்பள்ளி நகராட்சிக்கு சொந்தமான கீழ்அரண் சாலையில் வார்துசாமி பிள்ளை பூங்காவிற்குத் தென்புறத்தில் புதியதாக கட்டப்பட்டிருக்கும் 4 கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை 31-3-73 உள்ள காலத்திற்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலரால் 26-10-1971-ஆம் தேதி காலை 11 மணிக்கு ஏலம் விடப்படும். ஏலக் கட்டுப்பாடுகளும் மற்ற நிபந்தனைகளும் அலுவலக நாட்களில் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

**தெ. கோவிந்தராசன்,**
தனி அலுவலர்.

13-10-1971.
(த.49)

### ஒப்பந்தப் புள்ளி

### இராஜபாளையம் நகராட்சி

நகராட்சி சுகாதாரப் பிரிவில் உபயோகப்படும் பென்ஸ்லாரியை தேவையான புதிய சாமான்கள் மாற்றி ரிப்பேர் செய்து கொடுக்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 10-11-1971 ஆம் தேதி மாலை 3-00 மணிக்குள்ளும் அதன் முன்பும் நகராட்சி ஆணையர் அவர்களால் பெறப்படும். ஒப்பந்தம் அனுப்பும் கவர் மேல் ''பென்ஸ் லாரி ரிப்பேர் செய்ய ஒப்பந்தம்'' என்று குறிப்பிடவேண்டும். மேலும் அத்துடன் ரூ. 450 ஒப்பந்தக் கட்டுத் தொகையை நகராட்சி கஜானாவில் கட்டி அதன் அத்தாட்சியுடன் அனுப்ப வேண்டும். ஒப்பந்தங்கள் 10-11-1971-ஆம் தேதி மாலை 3-30 மணிக்குள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து அறிவிக்கப்படும்.

நகராட்சி ஆணையர் ஒப்பந்தங்களைக் காரணமின்றி ஒப்புக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யலாம்.

**ஆணையர்,**
இராஜபாளையம் நகராட்சி.

(த.48)

### ஒப்பந்தப் புள்ளி

இராசா மிராசுதார் மருத்துவ மனைக்குத் தேவையான மருந்து வகைகளை ஜனவரி 1972, 1-ஆம் தேதி முதல் ஜூன் 1972, 30-ந் தேதி முடிய சப்ளை செய்வது பற்றிய ஒப்பந்த அறிவிப்பு.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (2 நகல்களில்) தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவ மனை கண்காணிப்பாளர் அவர்களால் 3-12-1971 முற்பகல் 11 மணி வரை மேற்படி மருத்துவ மனைக்கு 1-1-1972 முதல் 30-6-1972 முடியும் காலத்திற்கான மருந்துகள் சப்ளை செய்வது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தங்கள் இவ்வலுவலக நமூனாக்களில்தான் (இரண்டு நகல்கள்) அனுப்ப வேண்டும். அவசியப்பட்டால் கூடுதலாகச் சாதாரணத் தாள்களை இடம்பற்றாக்குறைகாரணமாக உபயோகிக்கலாம். அந்த ஒப்பந்தப் பத்திரங்களை ரூ. 5-ம் வரி ரூ. 0.20 காசுகளும் செலுத்தி கண்காணிப்பாளர் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். இந்த ரூபாய் 5 ஐ XXIII Medical II–Director of Medical Education J.Miscellaneous என்ற கணக்கிலும் 0.20 காசுகளை XII Sales Tax–Receipt under the Sales Tax- Act General Sales Tax என்ற கணக்கிலும் கட்டி மேற்படி சலான்களை இவ்வலுவலகத்திற்கு அனுப்பினல் ஒப்பந்தப் பத்திரங்களும் ஒப்பந்தச் சட்ட திட்டங்களும் மருந்து வகைக்கான அனுபந்தமும் அனுப்பப்படும்.

ஒப்பந்தம் திறக்கும் நாளாகிய 3-12-1971 அன்று வரும் சலான்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

**டி. பூபதி, எம். டி.,**
கண்காணிப்பாளர், இராசா மிராசுதார் மருத்துவ மனை
(த.54) தஞ்சாவூர்.

### ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை

### வனப்பொறியாளர் கோட்டம் மறு ஒப்பந்தப் அறிக்கை

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை ''வனப் பொறியாளர், திருச்சி'' தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

''சிக்கள்ளி-திகனரி சாலை அமைத்தல் 3.8 கிலோ மீட்டர். தலைமலை வனச்சரகம், கோவை வடக்கு வனக் கோட்டம்.''

கட்டுத்தொகை: ரூ. 1,530 (இ.எம்.டி.)

ஒப்பந்தம் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 15-11-1971. நேரம், முறையே மாலை 3-00—மணி, 3-05 மணி.

ஒப்பந்தப் பத்திரங்களை 'வனப் பொறியாளர், 1-எ. ராயல்ரோடு கன்டோன்மென்ட், திருச்சி- 1'' என்ற முகவரியிலிருந்து ரூ. 1-04 நேரிலோ அல்லது பண ஆணை மூலமோ செலுத்தி 25-10-1971 முதல் 12-11-1971 முடிய அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**ச. சண்முகசுந்தரம்,**
திருச்சி, வனப் பொறியாளர்.

19-10-1971.
(த.56)

## தேவகோட்டை நகராட்சி

கீழ்க்கண்டுள்ள வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட தனித் தனி ஒப்பந்தப் புள்ளிகள் 15—11—1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்பட்டு பின்னர் குறிப்பிடும் தேதிகளில் முடிவு செய்யப்படும். ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் ஒன்று 0·25 காசுகள் வீதம் செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தேவையான பிற விபரங்களை அலுவலகத்தில் நேரிலோ கடித மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. | பின் வைப்புத் தொகை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 வெள்ளையன் ஊரணி கிழக்கில் கடைகள் கட்டுதல். | 32,000 | 800 | 800 |
| 2 வீரபாண்டியபுரம் நடுத் தெரு, கிழக்குத் தெரு மற்றும் சிலம்பணி தெற்குத் தெரு ஆகிய தெருக்களுக்குத் தார் சாலை போட. | 28,000 | 700 | 700 |
| 3 இரவுசேரி பாதை, சிவன் கோவில் குளக்கால் தெரு, ஜெயங்கொண்டார் தெரு, அள.சுப. தெரு ஆகிய தெருக்களுக்குத் தார் சாலை போட. | 20,000 | 500 | 500 |

வெ. முத்துக்குமாரசாமி,

13—10—1971. ஆணையர், தேவக்கோட்டை நகராட்சி

(த. 36)

## சென்னை கிழக்கு வட்டம்

## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

கோப்பு எண். எம்.இ. 4/1431/71, 7—10—1971.

கீழ்க்கண்ட வேலைக்காக உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 19—11—1971 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-05-க்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர்: 6'' மற்றும் 9'' நடு விட்டமுள்ள எஸ். டபிள்யூ. பைப்புகள் ஒவ்வொரு வகையிலும் 15,000 சப்ளை டெலிவரி.

சுமார் மதிப்பு—ரூ. 1,65,000.

கட்டுத் தொகை—ரூ. 2,475.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை—ரூ. 10 விற்பனை வரி.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மற்றும் விவரங்களைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் 1—11—1971 லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். காரணம் எதுவும் கூறாமல் எந்த ஒப்பந்தப் புள்ளியையும் ஏற்கவும் எதையும் அல்லது அனைத்தையும் நிராகரிக்கவும் கீழே கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

டி. ஜகதீசன்,

நிர்வாகப் பொறியாளர் (கிழக்கு).

(த. 32)

## விற்பனை விளம்பரம்

"TRAP VACCUM CABINET" (ENGLISH MAKE)

With Accessories in Good Condition

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

துணை இயக்குநர் (பட்டுப் புழு வளர்ப்பு),

தொழில் வணிக இலாகா,

50, கார்ன்வால் சாலை,

கூனூர்-1, நீலகிரி.

(த. 1)

## மதுரை வீட்டுவசதிப் பிரிவு

(தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மதுரை வீட்டு வசதிப் பிரிவு செயல்படுத்தும் மதுரை கிழக்கு புறநகர்ப் பகுதியாகிய தல்லாகுளம், சாத்தமங்கலம் ஆகிய பகுதிகளில் கீழ்த்தர, மத்திய தர வருவாய் உள்ளவர்களுக்குக் கட்டியுள்ள இணைந்த வீடுகளும் (Flats) சாத்தமங்கலம் பகுதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுமனைகளும் ஞானஒளிவுபுரத்தில் கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள இணைந்த வீடுகளும் தவணை, முழுமை விலை விற்பனைக்குத் தயாராக உள்ளன. மனுச் செய்வோர் 3-11-1971 தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும்படி அதற்குரிய மனுப்படிவங்களில் வைப்புத் தொகையுடன் அனுப்ப கோரப்படுகின்றன.

மேற்படி இடங்களில் நகர பஸ் வசதி, குடி தண்ணீர் வசதி, தெரு விளக்குகள், பாதாளக் கழிவு நீர் வசதி, உயர்நிலைப் பள்ளி வசதி, கடைகள், தபால் அலுவலகம் ஆகியவை உள்ளன.

**வீடுகள் ஒதுக்குவதற்குக் கீழ்க்கண்ட வரிசையில் முதலிடம் கொடுக்கப்படும்.**

1. முழுத் தொகையும் ஒரே தவணையில் செலுத்துதல்.
2. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி, மீதியை ஒரு வருடத்தில் மாதத் தவணையாக செலுத்துதல்.
3. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி, மீதியை மூன்று வருடத்தில் மாதத் தவணையாக செலுத்துதல்.
4. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி, மீதியை 10 வருடங்களில் மாதத் தவணையாக செலுத்துதல்.
5. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி மீதியை 15 வருடங்களில் மாதத் தவணையாக செலுத்துதல்.
6. 25 சதவிகிதம் முதலில் செலுத்தி மீதியை 20 வருடங்களில் மாதத் தவணையாக செலுத்துதல்.

**தயாராக உள்ள இணைந்த வீடுகளின் விவரம்.**

**மத்திய தர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில் :**

| வரைபட எண். | உத்தேச விலை. | விஸ்தீரணம். |
|---|---|---|
| | ரூ. | சதுர அடி. |
| 3எ/68 .. .. .. | 25,000 | 852 |
| கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு சாத்தமங்கலம் தல்லாகுளம் பகுதிகளில்— | | |
| 2எ/68 .. .. .. | 19,000 | 565 |
| 1ஐ/69 .. .. .. | 12,000 | 417 |
| 1பி/68 .. .. .. | 10,000 | 306 |
| கீழ்த்தர வருவாய் உள்ளவர்களுக்கு ஞானஒளிவுபுரம் பகுதியில்— | | |
| 48/63, 68/63 .. .. | 10,000 | 298 |

இணைந்த வீடுகளுக்கான மனு படிவங்களுக்கு ரூபாய் ஐந்தும், மனைகளுக்கான மனு படிவங்கள் ரூ. 3 கொடுத்து நேரடியாக எல்லா அலுவலக நாட்களிலும் 3 மணிக்குள்ளாக பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் மேலும் ரூபாய் ஒன்று அனுப்ப வேண்டும்.

ஜவகர் தெரு, காந்தி நகர்,
மதுரை-20.

**நிர்வாக அதிகாரியும், நிர்வாகப் பொறியாளரும்,**
மதுரை வீட்டு வசதிப் பிரிவு.

(த.60)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலைத் துறை

பாம்பன் வட்டம், சென்னை-15

குறுகிய கால ஒப்பந்த விளம்பரம்.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), பாம்பன் வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 4, ஸ்ரீநகர் காலனி, சென்னை-15-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 10—11—1971 அன்று மாலை 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். (அலுவலகக் கடிகாரப்படி).

| வரிசை எண்ணும் வேலை விபரம். | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப்புள்ளி கிடைக்குமிடம். |
|---|---|---|
| 1 ஜி. என். டி. சாலையில் 26/2 29/0-ல் உள்ள லெவல் கிராசிங் தவிர்ப்பதற்காகக் குறுக்குச் சாலை அமைத்து மேம்பாடு செய்தல். | ரூ. 12,120 | ஜெமினி மேம்பாலக்கோட்டப் பொறியாளர் அலுவலகம். |

ஒப்பந்தங்கள் அன்றே மாலை 3–30 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்காக நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) ஜெமினி மேம்பாலம் சென்னை—25, அலுவலகத்தில் விற்பனைவரி உட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 26 செலுத்தி 1—11—1971 முதல் 8—11—1971 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) ஜெமினி மேம்பாலம் சென்னை-25 அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) ஜெமினி மேம்பாலம் பெயரில் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

மாற்றிய வடிவமைப்பைத் தாங்கிய ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

முன்வைப்புத் தொகையை அங்கிகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப்பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ''ரிசர்வ் வங்கி ''யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 57)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

கீழ்க்காணும் வேலைக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகராட்சி ஆணையாளர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 12—11—1971 அன்று மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரம் விதி முறைகள் வரைபடங்கள் வேண்டுவோர் ரூ. 30-ம் விற்பனை வரி ரூ.3½ சதவீதமும் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி, செலுத்துச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப்பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 10-11-71 வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் விசாரிக்கவும்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | சுமார் மதிப்பீடு ரூபாய். | முன் வைப்புத் தொகை ரூபாய். | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|
| 1 பாலக்காடு ரோடில் டச. எண். 59-1-ல் ஒரு பொது அரங்கம் கட்டுதல். | 2,01,200 | 5,030 | 9 மாதம் |

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

பொள்ளாச்சி,
6—10—1971.

(த.51)

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை, கடலூர் கோட்டம்

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் கடலூர் நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை கோட்டப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அவர்களுடைய அலுவலகத்தில் 4-11-1971 மாலை 3-00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) பெற்றுக்கொள்ளப்படும். கிடைத்த ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கோட்டப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தப் பத்திரங்கள், நமூனுக்கள் முதலியன அலுவலக நேரங்களில் மேலாளரிடமிருந்து 28-10-1971 முதல் 3-11-1971 வரை ரூபாய் 10-35 (ஒவ்வொரு வேலைக்கும்) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை எக்காரணத்தைக்கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது; 4-11-1971 அன்று எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் விற்கப்படமாட்டா.

குறிப்பிடப்பட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.) கடலூர் அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் 'ரெவின்யூ டெபாசிட்' என்ற தலைப்பின்கீழ் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

| வரிசை எண். | வேலையின் விவரம். | கி. மீ. | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | பொன்னேரி கரை சாலையை அபிவிருத்தி செய்தல் | 0/0—1/0 | 990 |
| 2 | ,, | 1/0—2/0 | 990 |
| 3 | ,, | 2/0—2/8 | 800 |
| 4 | திருநாரையூர் சாலையை அபிவிருத்தி செய்தல் | 0/0—2/0 | 1,200 |
| 5 | ,, | 2/0—4/0 | 1,230 |
| 6 | ,, | 4/0—6/0 | 1,220 |
| 7 | அக்கரவல்லிக்குடி, அகரநல்லூர், காட்டுக்கூடலூர் சாலையை அபிவிருத்தி செய்தல். | 0/0—1/0 | 640 |
| 8 | ,, | 1/0—2/0 | 730 |
| 9 | ,, | 2/0—3/0 | 700 |
| 10 | ,, | 3/0—4/0 | 690 |
| 11 | ,, | 4/0—5/0 | 810 |
| 12 | ,, | 5/0—6/4 | 970 |
| 13 | கரைமேடு கோலக்குடி மருதூர் சாலையை அபிவிருத்தி செய்தல். | 0/0—1/0 | 845 |
| 14 | ,, | 1/0—2/0 | 820 |
| 15 | ,, | 2/0—3/0 | 875 |
| 16 | ,, | 3/0—4/0 | 875 |
| 17 | ,, | 4/0—5/0 | 790 |
| 18 | ,, | 5/0—5/6 | 550 |
| 19 | லால்புரம் மண்டபம் சாலையை அபிவிருத்தி செய்தல். | 0/0—1/0 | 1,065 |
| 20 | ,, | 1/0—2/0 | 1,075 |
| 21 | ,, | 2/0—2/6 | 560 |
| 22 | குண்டியமல்லூர், கொத்தவாச்சேரி சாலையை இணைக்கும் சாலையைப் புதியதாகப் போடவும் அபிவிருத்தி செய்தலும். | 0/0—1/0 | 1,055 |
| 23 | ,, | 1/0—2/0 | 1,030 |
| 24 | ,, | 2/0—2/5 | 465 |

**இரா. வேணுகோபால்,**

கோட்டப் பொறியாளர்,
கடலூர்.

10-10-1971.

(த. 46)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வணிகத் துறை

சேப்பாக்கம், சென்னை-5.

**கோயம்புத்தூர்** விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் உற்பத்தி பயிற்சி நிலையத்திற்காக, கீழ்க்கண்ட பதவிகளுக்கான மனுக்கள் 15-11-1971 அன்று மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

1. கிளாஸ் பிளோயர் : ஒன்று.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 200—5—250—10—300.

2. பயிற்சி பெற்ற வேலையாள் (முதல் தரம்) : ஒன்று.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 200—5—250—10—300.

3. பயிற்சி பெற்ற வேலையாள் : (இரண்டாம் தரம்) : ஒன்று.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 150—4—170—5—225.

4. பயிற்சி பெறாத வேலையாள் : இரண்டு.
சம்பளம் : மாதம் ஒன்றுக்கு ரூ. 130—3—160—4—180—5—195.

தகுதி:—

கிளாஸ் பிளோயருக்கும், பயிற்சி பெற்ற வேலையாள் முதல் தரத்திற்கும் கீழ்க்கண்ட தகுதிகள் இருக்க வேண்டும்.

(அ) பள்ளி இறுதி வகுப்பில் தேறியவர்களாகவும், கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) விஞ்ஞானக் கண்ணாடிப் பயிற்சி நிலையம், கிண்டியில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று, தொழில் வணிக இயக்குநரால் சான்றிதழ் பெற்றவர்கள் அல்லது தொழில் வணிகத் துறையால் வழங்கப்பட்ட சான்றிதழுக்கும் சமமாகவும், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்ற பயிற்சி நிலையங்களால் சான்றிதழ் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) மேஜை முறையில் விஞ்ஞானக் கண்ணாடி பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற் கூடத்திலோ அல்லது ஆய்வுக் கூட்டத்திலோ அல்லது பயிற்சி நிலையத்திலோ இரண்டாண்டுக்குக் குறையாமல் வேலை செய்து அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது : 1-11-1971-ல் 35 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

பயிற்சி பெற்ற வேலையாள் இரண்டாம் தரத்திற்கும் மேலே குறிப்பிட்ட தகுதிகள் இருக்க வேண்டும். வேலை அனுபவம் ஓராண்டு இருந்தால் போதுமானது.

பயிற்சி பெறாத வேலையாள் வேலைக்கு மூன்றாம் படிவம் அல்லது எட்டாவது வகுப்புத் தேறியவர்களாகவும், மேஜை முறையில் விஞ்ஞானக் கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடத்திலோ அல்லது ஆய்வுக்கூடத்திலோ அல்லது பயிற்சி நிலையத்திலோ குறைந்தது மூன்றாண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயது ; 1-11-1971-ல் 30 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

மனுதாரர்கள் தங்களுடைய மனுவை தங்களுடைய கையாலேயே வெள்ளைக் காகிதத்தில் எழுதி ''கண்காணிப்பாளர், கோயம்புத்தூர் விஞ்ஞானக் கண்ணாடிக் கருவிகள் பயிற்சி நிலையம், 73-டி சின்னசாமி நாயுடு தெரு, புதிய சித்தாப்புதூர், கோயம்புத்தூர்-18'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மனுதாரர்கள் பொருக்குத்தேர்வுக்கு; சென்னைக்கு அழைக்கப்பட்டால், அவர்களுடைய சொந்தச் செலவில் வரவேண்டும்.

**தொழில் வணிக இயக்குநர்,**
சேப்பாக்கம், சென்னை-5.

(த.34)

## ஒப்பந்தப் புள்ளி

### காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 15-11-1971 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| | வேலையின் பெயர். | வேலையின் மதிப்பு. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | உடன் தணிக்கை ஆய்வாளர் பிரிவிற்கு இடவசதி செய்ய ஓர் அறை கட்ட. | 10,500 | 525 |
| 2 | குமாரி செட்டித் தெருவிலுள்ள தாய் சேய் நல விடுதியைப் பழுது பார்க்க. | 6,700 | 335 |
| 3 | பாரதி கலை அரங்கின் மேடையை அகலப்படுத்த. | 5,000 | 250 |
| 4 | ஒலிமுகம்மது பேட்டை தாய் சேய் நல விடுதி கட்டடத்தை விரிவுபடுத்த. | 9,000 | 450 |
| 5 | ஓ. வி. அளகேசன் நகராட்சிப் பேருந்து நிலைய நுழைவாயிலின் அருகில் டாக்ஸி ஸ்டாண்டு அமைக்க. | 8,000 | 400 |
| 6 | நீரளிப்புச் சாமான்கள் வாங்க. | 16,000 | 400 |

காஞ்சிபுரம்,
11-10-1971.

**த. ஆ. சிவசுப்ரமணியன்,**
ஆணையர்.

(த.68)

## தேதி நீடிப்பு

வேலையின் பெயர்:

(1) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் ஒரு சொற்பொழிவு அறை கட்டுதல்.

(2) தஞ்சாவூர் மன்னர் சரபோஜி அரசினர் கலைக் கல்லூரிக்கான மேல் நிலைப் பட்டப் படிப்பிற்கான கட்டடங்கள் கட்டுதல்.

பார்வை:

தமிழரசு—தேதி 1-10-71-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீடிப்பு.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தஅறிவிப்புகள்பெறும் தேதி 17-11-1971 அன்று மாலை 3-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 16-11-1971 அன்று மாலை 5-00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

தஞ்சை வட்டம்,
தஞ்சாவூர்.

(த.66)

---

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 168 ஆரம்பப்பள்ளிகளுக்கும், 34 உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கும், போதனை விஞ்ஞானக் கருவிகள் (Teaching aids & Equipments) சப்ளை செய்வதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் திருச்சி மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் நேர்முக உதவியாளர் அவர்களால் 6-11-71 தேதி மாலை 4-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. மேற்கொண்டு ஒப்பந்த விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சியாளரின் தனி
உதவியாளர் (ப.வ.),
திருச்சி.

(த.67)

---

தமிழக ஆளுநருக்காக, கீழ்க் கையொப்பமிட்டவரால் முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 16-11-1971 மாலை 3-00 மணி வரைஆப்செட்மற்றும் ரோட்டா பிரிண்ட் பொருள்கள், சென்னை அரசாங்க அச்சகத்திற்கு 1971-72-ஆம் ஆண்டில் சப்ளை செய்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தங்கள் டைப் செய்து அனுப்பப்பட வேண்டும். மேற்கொண்டு விவரங்களுக்கு இயக்குநர், எழுது பொருள் அச்சுத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-1, அவர்களுக்கு எழுதவும்.

**ஜி. ரங்காராவ்,**

இயக்குநர்,
எழுது பொருள் அச்சுத் துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-1.

(த.69)

---

## பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சிக்கு மரம் மற்றும் ஹார்டுவேர் சாமான்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12-11-71 மாலை 3-00 மணி வரை ஆணையாளர் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். அவை அன்று 3-30-க்குத் திறக்கப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் விண்ணப்பங்களின் பேரில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கட்டுத் தொகை ரூ. 20-00 செலுத்த வேண்டும்.

**பி. கே. முகம்மது அலி,**

ஆணையர்.

பொள்ளாச்சி,
11-10-71

(த.70)

---

## மறு அறிக்கை
## அரக்கோணம் நகராட்சி

கீழ்கண்ட வேலைக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அடியிற் கையொப்பமிட்டவரால் 11-11-1971-ஆம் தேதி மாலை 4-00 மணி வரையில் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்றையதினமே 4-15 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள், வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—

தலைமை நீரேற்று நிலையப் பராமரிப்புக்கான பொருட்கள் சப்ளை செய்ய.

மதிப்பீடு—

ரூ. 1,000.

மேலும் விவரங்களும் ஒப்பந்தப்புள்ளி நமூனுக்களும் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் ரூ. 1-00-ம் விற்பனை வரி 3½ சதவிகிதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**க. ரா. குட்டியப்பன்,**

ஆணையர்.

(த.71)

---

## கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சி ஆணையர் அவர்களால், தெரு விளக்குப்பராமரிப்புக்குத் தேவையான 4' 40 வாட் டியூப் லைட் ஸ்டார்டர்கள் & சோக்குகள் வழங்க 19-11-71 மாலை 4-00 மணி முடிய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-15 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரம் வேண்டுவோர் நகராட்சிப் பொறியாளருக்கு விண்ணப்பிக்கவும்.

ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அனுப்ப வேண்டும்.

**ஆணையர்.**

கும்பகோணம்,
15-10-71.

(த.65)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

பார்வை எண் : ந.எ. 23270/69/வ6, தேதி 16–10–71.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப் பணித்துறை காவிரி வளர்ச்சிப்பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 2—12—1971 மாலை 4·00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கு மொத்தப் பிரிவிற்கும் அல்லது தனித்தனிப் பிரிவிற்கும் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

(ஒப்பந்த வகை—கே.2.)

வேலையின் பெயர் :—தூரியாறு மன்னையாறு வடிகால் அபி விருத்தித் திட்டம்.

| பிரிவு எண். | வேலையின் விவரம். | கட்டுத் தொகை | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை | | விற்பனை வரி. | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | ரூ. | |
| பிரிவு 1 | தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலைகள் பகுதி 1 (எல்.எஸ்.7570 மீ. முதல் 10,060 மீ. வரை) | 840 | 10 | 00 | 0 | 35 |
| பிரிவு 2 | தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலை பகுதி 2 (எல்.எஸ். 10,060 மீ. முதல் 11,720 மீ. வரை). | 660 | 10 | 00 | 0 | 35 |
| பிரிவு 3 | தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலை பகுதி 3 (எல்.எஸ். 11,720 மீ. முதல் 13,920 வரை). | 760 | 10 | 00 | 0 | 35 |
| பிரிவு 4 | தூரியாறு வடிகால் அபிவிருத்தி வேலை பகுதி 4 (எல்.எஸ். 13,920 மீ. முதல் 15,860 மீ.வரை) அதாவது மன்னையாறு வடிகாலில் கலக்கும் வரை) | 540 | 10 | 00 | 0 | 35 |
| பிரிவு 5 | மன்னையாறு வடிகால் அபிவிருத்தி வேலைகள் பகுதி 5 (எல்.எஸ்.15,860 மீ. முதல் 19,000 மீ. வரை) அதாவது தூரியாறு வடிகால் கலக்கு மிடத்திலிருந்து 19,000 மீ.வரை). | 870 | 10 | 00 | 0 | 35 |
| பிரிவு 6 | சோமேஸ்வரபுரம் ரெகுலேட்டர் எண் 1-க்குத் துணை ரெகுலேட்டர் அமைத்தல் (எல்.எஸ். 13,530 மீ.) | 1,450 | 10 | 00 | 0 | 35 |

1. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்—15—11—1971.

2. பிணைப்புப் பணம் (E.M.D.) நிர்வாகப் பொறியாளர் திட்ட ஆய்வுக்கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் கட்டப்படவேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் '' பொதுப் பணித்துறை—செலுத்துத் தொகை III, மற்றைய செலுத்துத் தொகை'' என்னும் தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் திட்ட ஆய்வுக் கோட்டம், தஞ்சாவூர் என்ற கணக்கில் செலுத்த வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் ''XII—விற்பனை வரி பி. பற்று சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ்—பொது விற்பனை வரி'' என்னும் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 30—11—71 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளர், நேர் உதவியாளர், காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

அ. சேஷாத்திரி,

தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம்,
தஞ்சாவூர்.

(த 39)

## இராஜபாளையம் நகராட்சி

ரூபாய் 24,000 உத்தேச மதிப்பில் துப்புரவுத் தொழிலாளர் காலனியில் இரண்டு வீடுகள் கொண்ட 5 பிளாக்கு வீடுகள் கட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் நகர் மன்ற ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ நாளது 1971-ஆம் வருடம் நவம்பர் மாதம் 16-ஆம் தேதி மாலை 4-00 மணிவரை அவரது அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்று மாலை 4-15 மணிக்கு ஷை ஒப்பந்தங்கள் அதுபோது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன் திறக்கப்படும். ஒப்பந்த டிபாசிட் ரூ. 600 கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிக் குறிப்புப் பத்திரங்கள் 1-க்கு ரூ. 2 வீதம் 13-11-71 மாலை 4-00 மணிக்குள் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி நகர் மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**டி. எஸ். சுப்பையா பி.ஏ.,**
நகராட்சி ஆணையாளர்.

(த.61)

## ஒப்பந்தப் புள்ளி ஒத்திவைப்பு பொதுப்பணித் துறை செங்கை மாவட்டம்

எண்: வ-3/19006/71-9
நாள் 16-10-71.

வேலையின் பெயர்;

சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள அரசினர் மன நோய் மருத்துவ மனையில் பணிபுரியும் செவிலியர்களுக்கான குடியிருப்புக் கட்டடங்கள் (குவார்டர்ஸ்) கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தரக் கடைசி நாள் 11-10-71 மாலை 3-00 மணி என்று இருந்த கெடு 9-11-71 மாலை 3-00 மணிவரை ஒத்தி வைக்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கீழ்க்கண்ட அலுவலகத்தில் 2-11-71 முதல் 8-11-71 வரை எல்லா அலுவலக நேரங்களிலும் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறிஞர்,
(பொ.ப.து.)
சென்னை, செங்கை வட்டம்,
சென்னை-5.

14-10-71
(த.62)

## குடிசைப் பகுதி மாற்றும் வாரியம்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்திற்காக சென்னை நகரில் கட்டடங்கள் கட்டுவதற்காக 28-10-71 அன்று இறுதி நாளிட்டு அழைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தற்போதைக்குக் காலவரம்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**நிர்வாகப் பொறியாளர்,**
கோட்டம்-3.
தாண்டவராயச்
சத்திரம்,
சென்னை-10.
(த.63)

## பொதுப் பணித் துறை

எண் வ. 2/21641/71,
நாள் 16-10-71.

வேலையின் பெயர்;

நந்தனம் அரசினர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி தரக் கடைசி நாள் 15-10-71 மாலை 3-00 மணி என்று இருந்த கெடு 15-11-71 மாலை 3-00 மணிவரை ஒத்தி வைக்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் சென்னை-செங்கற்பட்டு சர்க்கிள், பொதுப் பணித் துறை சென்னை-5-ல், 8-11-71-லிருந்து 12-11-71 வரை எல்லா அலுவல் நாட்களிலும் எல்லா அலுவல் நேரத்திலும் கிடைக்கும்.

இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**பி. கே. கந்தசாமி,**
மேற்பார்வைப் பொறிஞர்,
சென்னை, செங்கை வட்டம்,
சென்னை-5.

(த.64)

## ஏல விற்பனை

2-12-1971 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு இராசா மிராசுதார் மருத்துவமனை தஞ்சையில், பயனற்ற ஒரு "டீப் எக்ஸ்ரே கருவி (Deep X-Ray Therapy unit) Watson Type மருத்துவமனைக் கண்காணிப்பாளரால் ஏலம் விடப்படும்.

ஏலம் கேட்பவர்கள் ரூ. 1,000 உறுதிப் பணம் ஏல தினத்தன்று 2.00 மணிக்குள் மேற்படி மருத்துவ மனை அலுவலகத்தில் கட்ட வேண்டும்.

மேற்படிக் கருவியை ஏலம் எடுக்காதவர்களுக்கு அவர்கள் கட்டிய உறுதிப் பணம் ரூ. 1,000 ஏலம் முடிந்தவுடன் திருப்பித் தரப்படும். இந்தக் கருவியை எல்லா வேலை நாட்களிலும் காலை 9-00 மணி முதல் பகல் 12 மணி வரை பார்வையிடலாம்.

ஏலம் எடுத்தவர் ஏலத் தொகை பூராவையும் வரிகள் உட்பட உடனே கட்டிவிட வேண்டும். ஏலம் எடுத்த கருவியை இவ்வலுவலக உறுதி உத்தரவு வந்து 10 தினங்களுக்குள் மருத்துவ மனையிலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

அவ்வாறு ஏலத் தொகையை (வரிகள் உட்பட) கட்டாமலும் அன்றி உத்தரவு வந்து 10 தினங்களுக்குள்ளாகக் கருவியை அப்புறப்படுத்தாமலும் இருந்தால் மறு ஏலத்தில் அக் கருவியை விற்கப்படும். அந்த மறு ஏலத்தினால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் ஏதாவது இருந்தால், அதை முந்திய ஏலதாரரிடம் இருந்து வசூலிக்கப்படும். மேலும் உறுதிப் பணம் ரூ. 1,000-ம் பறிமுதல் செய்யப்படும்.

**டி. பூபதி எம். டி.,**
கண்காணிப்பாளர், இராசா மிராசுதார் மருத்துவ மனை,
தஞ்சாவூர்.
(த. 11)

## ஒப்பந்தப் புள்ளி

### கோயமுத்தூர் வீட்டு வசதிப் பிரிவு

[தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை]

ஒப்பந்தப் புள்ளி எண் 41/71-72.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப்புள்ளிகள் 17—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3·00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களை கோட்டக்கணக்காயரிடமிருந்து அலுவலக நாட்களில் அதாவது 4—11—1971-ஆம் நாளிலிருந்து 16—4—1971-ஆம் நாள்வரை, காலை 10-30 மணி முதல் பிற்பகல் 3·00 மணி வரை கீழே குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பிணைப்புத் தொகை ஒப்பந்தப் புள்ளிகள் வந்து சேரவேண்டிய நாளான 17—11—1971-ஆம் நாள் பிற்பகல் 1·00 மணி வரைதான் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளை 17—11—1971-ஆம் நாள் பிற்பகல் 3·30 மணியளவில், ஒப்பந்தப் புள்ளி செய்தவர்களின் முன்னிலையில் செயற் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

குடிசைப் பகுதி மாற்றும் திட்டம்—கோஷா ஆஸ்பத்திரி பின்புறம்—சேலம்.

| வரிசை எண். | வேலையின் விவரம். | வேலையின் சுமார் மதிப்பு. ரூ. | பிணைப்புத் தொகை. ரூ. | நமூனுக்களின் விலை. ரூ. |
|---|---|---|---|---|
| 1 | இருபத்தி நான்கு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட நான்கு மாடிக்கட்டடங்கள் இரண்டு (2 Blocks) கட்டுவது— | | | |
| | பகுதி எண் 1 ... ... ... | 2,40,000 | 3,600 | 15 மற்றும் விற்பனை வரி. |
| | பகுதி எண் 2 ... ... ... | 2,40,000 | 3,600 | 15 மற்றும் விற்பனை வரி. |
| | பகுதி எண் 3 ... ... ... | 2,40,000 | 3,600 | 15 மற்றும் விற்பனை வரி. |
| | பகுதி எண் 4 ... ... ... | 2,40,000 | 3,600 | 15 மற்றும் விற்பனை வரி. |
| 2 | பதினாறு குடியிருப்புகளுக்கான ஒரு அறைகொண்ட நான்கு மாடிக் கட்டடங்கள் நான்கு (4 Blocks) கட்டுவது— | | | |
| | பகுதி எண் 5 ... ... ... | 3,00,000 | 4,500 | 15 மற்றும் விற்பனை வரி. |
| | பகுதி எண் 6 ... ... ... | 3,00,000 | 4,500 | 15 மற்றும் விற்பனை வரி. |
| 3 | பதினாறு குடியிருப்புகளுக்கான ஒரு அறை கொண்ட நான்கு மாடிக் கட்டடங்கள் (5 Blocks) ஐந்து கட்டுவது— | | | |
| | பகுதி எண் 7 ... ... ... | 3,75,000 | 5,630 | 15 மற்றும் விற்பனை வரி. |

11/22, திவான் பகதூர் சாலை,
இரத்தினசபாபதிபுரம் (அஞ்சல்),
கோவை-2.

**இல. அரங்கநாத சாஸ்திரி,**
செயற் பொறியாளர், கோவை வீட்டு வசதிப்பிரிவு,
கோயமுத்தூர்.

(த. 55)

## கே-2 ஒப்பந்தம்

[குறிப்பு எண் SCE 420]

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல், குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவுத் தேதி அன்று மாலை 3-30 மணிவரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையிலோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையிலோ திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன் வைப்புப் பணம். | ஒப்பந்தப் பிரதி விலே. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | |
| SCE 420. | எண்ணூர் அனல் மின் திட்டம்—1971-72-ஆம் ஆண்டில் கட்டுமான வேலைகளுக்கான சாமான்கள் ஏற்றிச் செல்லுதல். | 1,000 | 10 | 18—11—71 |

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையைக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் ( Demand Draft ) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும் முன்வைப்புப் பணம் கட்டியதற்கான இரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களும் குறித்த காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ்வேலையை ஒப்பந்ததார்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவர்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுக் காணமல் போனல் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத்தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**

எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தொலை பேசி எண் : 59556
(5 கிளைகள்)
தந்தி : "ENTERMAL"

(த. 86)



1—11—12

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் அதற்காகவும் கீழ்க்கண்ட பொருட்களை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர் (ம.ந.பொ.) வட்டம், 52, கெங்கு ரெட்டி ரோடு, எழும்பூர், சென்னை, அவர்களால் சிறந்த உற்பத்தி யாளர்கள், வழங்குவோர்களிடமிருந்து 5-11-71 பிற்பகல் 3 மணிவரையிலும் வரவேற்கப்படுகின்றன. அவை அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு மேற்பார்வைப்பொறியாளர், சென்னை-8 அவர்களால் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் | காஞ்சிபுரம் வடிகால் திட்டத்துக்காக Stoneware slants and uprights and uplefts of various sizes from 4" 18" dia வழங்கலும் டெலிவரியும். |
| ஒப்பந்த வடிவம் | 'கே. 2' பீஸ் ஓர்க். |
| கட்டுத் தொகை | ரூ. 5,000 (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) இக் கட்டுத் தொகை டிமாண்டு டிராப்டாக நிர்வாகப் பொறியாளர் (ம.ந.பொ.) கோட்டம், செங்கற்பட்டு அவர்கள் பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியிலும் கட்டலாம். |
| வேலை முடிக்கும் காலம் | 6 மாதங்கள். |
| ஒப்பந்தப்புள்ளிப் பத்திர விலை. | ரூ. 10.40 (ரூபாய் பத்தும் நாற்பது காசுகள் மட்டும்) வணிக வரி உட்பட. |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நேரிலோ மணியார்டர் மூலமாகவோ அதற்குரிய தொகையைச் செலுத்தி நிர்வாகப் பொறியாளர் (ம.ந.பொ.) கோட்டம், 24, பெரிய மணியக்காரத் தெரு, செங்கற்பட்டு அவர்களிடமிருந்து 12-10-71-லிருந்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை திருப்பித்தரப் படமாட்டாது.

எக்காரணமும் காட்டாமல் ஏதேனும் ஒப்பந்தப்புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையோ தள்ளும் உரிமை மேற்பார்வைப் பொறியாளருக்கு (ம.ந.பொ.) உண்டு.

ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வழங்கும் உரிமை மேற்பார்வைப் பொறியாளருக்கு (ம.ந.பொ.) உண்டு.

**மேற்பார்வைப் பொறியாளர்**

ம.ந. பொறியாளர் வட்டம்.
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-8.

(த. 58)

## ஒப்பந்தப் புள்ளி

### பழனி நகராட்சி

பழனி நகராட்சி துப்புரவு இலாகா துப்புரவு வேலைகளுக்கு 71-72-ஆம் வருடத்திற்குத் தேவைப்படும் மூங்கில் கூடை, மூங்கில் மார், சாக்கடை தள்ளும் தகடு, குப்பை இழுக்கும் கொக்கி, வாளிகள், கயிறுகள், கொச்சம், இரும்புச்சட்டி முதலியன சப்ளை செய்தவற்கு ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில் 12—11—71-ஆம் தேதி மாலை 4·00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இதர விவரங்கள் நகராட்சி சுகாதார அதிகாரி, பழனி அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**க. அ. சுப்பிரமணியம்,**

பழனி, ஆணையர்.
16—10—1971.

(த. 75)

## ஒப்பந்தப் புள்ளி ஒத்தி வைப்பு

### பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்: மதுரை மாவட்டம் பண்ணைக் காட்டில் அரசினர் மருத்துவ மனையில் ஒரு ஆபரேஷன் தியேட்டரும், ஒவ்வொன்றும் 10 படுக்கைகள் கொண்டதாக இரண்டு வார்டுகளும் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறக் கடைசித் தேதி 10—11—1971 மாலை 3 மணிவரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 3—11—1971-லிருந்து 8—11—1971 வரை விற்பனைக்குக் கிடைக்கும். 10-11-71 மாலை 4 மணிக்குக் கீழே கையொப்பமிட்டவரால் ஒப்பந்தப்புள்ளிகள் பிரிக்கப்படும். கட்டப்பட வேண்டிய கட்டடத்தில் சிறிது மாற்றங்கள்இருக்கும். தரப்படும் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களில் அவ்விவரம் தெரிவிக்கப்படும்.

மூல ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பில் உள்ள இதர நிபந்தனைகளில் மாற்றம் இல்லை.

**சி. தேசிக சங்கர்,**

மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.து., மதுரை வட்டம்
மதுரை.

(த 47)

## ஒப்பந்தப் புள்ளி மறு அறிவிப்பு

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், கீழ்க்கண்ட பணிகளுக்காக, மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் (த.கு.வ. வாரியம்), பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் அல்லது அவை போன்ற பிற அரசுத் துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதுரை, மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்ட, மேற்பார்வைப் பொறியாளரால், 17, சர். பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் உள்ள அவரது அலுவலகத்திற்கு 18-11-71 மாலை 3-மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| எண். | வேலையின் பெயர். | ஒப்பந்த முறை. | பத்திர விலை. | கட்டுத் தொகை. |
|---|---|---|---|---|
| 1 | கோவில்பட்டி குடிநீர் வழங்கு திட்டம் — II-வது நிலை—CI, A.C. & P.V.C. பைப்புகள் போடுதல், இணைத்தல்—மேல் மட்டப் பகுதி—திட்டப்படி பகுதி—I. | K 2 | 5.18 | ரூ. 960 (தொள்ளாயிரத்து அறுபது ரூபாய்). |
| 2 | ஷை திட்டப்படி பகுதி—II. | K 2 | 5.18 | ரூ. 1,140 (ஆயிரத்து நூற்று நாற்பது ரூபாய்). |
| 3 | ஷை திட்டப்படி பகுதி—III. | K 2 | 5.18 | ரூ. 1,250 (ஆயிரத்து இருநூற்று ஐம்பது ரூபாய்). |
| 4 | ஷை திட்டப்படி பகுதி— IV. | K 2 | 5.18 | ரூ. 1,180 (ஆயிரத்து நூற்று எண்பது ரூபாய்). |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் ''நிருவாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் கோட்டம், 25, வக்கீல் தெரு, கோவில்பட்டி'' என்ற முகவரியில் 15-11-71 திங்கள் வரை எல்லா அலுவலக நாட்களிலும் வேலை நேரங்களில் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிட்ட உறைமீது வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

18-11-71 மாலை 3-30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளி மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் மேற்பார்வைப் பொறியாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் அலுவலரால் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

முடிவுத் தேதிக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் கவனிக்கப்படமாட்டாது.

**மேற்பார்வைப் பொறியாளர், (PHE).**

மதுரை-2.

(த. 81)

## தொழில் வணிகத் துறை

வேலையின் பெயர்—

கிண்டி, தொழில்பேட்டை, தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையத்தில் கூடுதலாக இரண்டு ஷெட்டுகள் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள், மேற்பார்வைப் பொறியாளர், நிர்மாணப் பிரிவு, தொழில் வணிகத்துறை அவர்களால் தொழில் வணிகத்துறை நிர்மாணப் பிரிவு—மற்றும் அரசுத் துறை—ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 29–11–71 பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், நிர்மாணப் பகுதி, தொழில் துறை 35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் வந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் அதே நாளில் பிற்பகல் 3-10 மணிக்குத் திறக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஒப்பந்த வடிவம் | மொத்தத் தொகை. |
| 2 கட்டுத் தொகை | ரூ. 3,200. |
| 3 வணிக வரி உட்பட : ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை. | ரூ. 10.40 |
| 4 வேலையை முடிக்க வேண்டிய காலம். | 8 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (ஸி) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி—அவர்களிடமிருந்து 14–11–71 தேதியிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விற்பனை வணிக வரி உட்பட ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10.40 (எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது).

அரசினர் கருவூலத்திலோ அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "XXIX இண்டஸ்டிரீஸ் ஏனைய ரசீட்ஸ்" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (நிர்மாணம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்கள் கணக்கில் செலுத்தப்படல் வேண்டும்.

கட்டுத் தொகை ஷெடியூல்டு வங்கிகளில் கால் ரசீது செலான் வடிவில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். ஷெடியூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்ட்ஸ், நிர்வாகப் பொறியாளர், (நிர்மாணம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை கிண்டி அவர்கள் பேரில் செலுத்தப்பட்ட கட்டுத் தொகை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு உத்தரவாதப் பத்திரங்களும் தமிழ்நாடு அரசு மின் வாரிய உத்தரவாதப் பத்திரங்களும் மார்க்கட் மதிப்பிலிருந்து 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்புப் பத்திரங்களும் அது சம்பந்தப்பட்ட தபால் அலுவலகத்தின் அறிவின் பேரில் ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் உத்தரவாதமும் ஏற்றுக் கொள்ளப்படும். வேறு எந்த வகையிலும் செலுத்தப்படுவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பெரிய நிர்மாணப் பணிகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவமுள்ளவர்களாக ஒப்பந்தக்காரர்கள் இருக்க வேண்டும்.

**சி. பி. மாத்யூ,**
மேற்பார்வைப் பொறியாளர்,
நிர்மாணப்பிரிவு.

சென்னை-2.

(த. 59)



## பால்பண்ணை வளர்ச்சித்துறை

தமிழ்நாடு ஆளுநர்க்காகவும், அவர் சார்பிலும் மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தற்போதுள்ள 2×5,000 லிட்டர்கள் கொள்ளத்தக்க தற்போதுள்ள மின் குளிர்விப்பி-பிரிசில்லர், 2×5,000 லிட்டர் கொள்ளத்தக்க பாஸ்டுரைஸ்ரைகளும், கவுண்ட்டர் புளோமீட்டர் வெந்நீர்ப் பம்புகள் ஆகியவற்றைப் பிரிக்கவும், அவற்றை நிர்மாணிக்கவும் ஆன பணிகளுக்கு வரவேற்கப்படுகின்றன. இதற்குரிய ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களும் இது பற்றிய விதிகளும் நிபந்தனைகளும் பெற ஆணையர், பால் உற்பத்தி கால்நடை வளர்ச்சி அலுவலகம், பால் காலனி (அஞ்சல்), சென்னை-51 என்ற இடத்தில் ரூ. 10-ம் வணிக வரியும் உரிய சர்சார்ஜும் செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் 5—11—1971 வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் பிற்பகல் 3 மணிக்கு வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையிலோ அல்லது அவர்தம் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையிலோ திறக்கப்படும்.

**எம். கே. கோமேதகவேலு.**
ஆணையர்.

(த. 52)

### ஏல விற்பனை

## கோவை நகராட்சி

நகராட்சிக்குச் சொந்தமான தியாகி குமரன் மார்க்கெட்டில் உள்ள புதிய பிளாக் கடை எண் பீ. 30-ல் 31–3–72 வரை இனிப்பு வகைகள் வைத்து வியாபாரம் செய்யும் உரிமை 16–11–71-ஆம் தேதியன்று காலை 11-00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

கட்ட வேண்டிய டிபாசிட் தொகை ரூ.100. மற்ற நிபந்தனைகளை நகராட்சி அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

**ஆணையாளர்.**

(த. 72)

## மீன் துறை

சென்னை நகரத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆரம்பாக்கத்திலும் பனிப்பொறி குளிர்பதன நிலையங்களை நிறுவுவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 25–11–71 பிற்பகல் 2-00 மணி வரை சென்னை மீன்துறை இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும். இது பற்றிய விவரங்களை மீன்துறை இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மு. அ. க. தய்யப்,
மீன்துறை இயக்குநர்.

நிர்வாக அலுவலகக்
கட்டடங்கள்,
சென்னை-6.
(த. 73)

---

## ஒத்தி வைப்பு

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—

சென்னை எழும்பூரிலுள்ள தாய் சேய் மருத்துவ மனையில் (1) புறப்பணியாளர் பகுதி கட்டுதல் (அடித்தளமும், முதல் மாடியும் கட்டுதல்), (2) தாய் சேய்ப் பகுதி கட்டுதல்(அடித்தளம் மாத்திரம்)

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளும் கடைசி நாள் 18–11–71 மாலை 3 மணிவரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 9–11–71 முதல் 17–11–71 வரை கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளும், அறிக்கைகளும், முன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கைப் பிரகாரம்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை செங்கை வட்டம்,
சென்னை-5.

21–10–71
(த 74)

---

தாம்பரம் அரசினர் காசநோய் சானிடோரியத்துக்கு மருந்துகள், மருந்துப் பொருட்கள் முதலியவைகளை 1–12–71 முதல் 31–3–72 வரை உள்ள காலத்துக்கும் வரையறுக்கப்பட்ட வேறு கால அளவுக்கும் வழங்குவதற்காக தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் ஒப்பந்தப் புள்ளிகள் தாம்பரம் அரசினர் காசநோய் சானிடோரியம் மேற்பார்வையாளரால் 15–11–71 பிற்பகல் 2 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள், நிபந்தனைகள், விதிகள் இதர விவரங்களை மேற்பார்வையாளர், அரசினர் காசநோய் சானிடோரியம், தாம்பரம் அவர்களிடம் ரூ. 2 கட்டணமும் இத்துடன் 3½ சதவிகித விற்பனை வரியும், விற்பனை வரி மீது 5 சதவிகித சர்சார்ஜும் செலுத்திப் பெறலாம். பத்திரத்துக்குரிய கட்டணத்தை "XXIII Medical superintendent, Government T. B. sanatorium—J.mis—other receipts. என்ற தலைப்பிலும், விற்பனை வரி சர்சார்ஜ்ஆகியவைகளை XII sales tax receipts under the sales tax general sales tax Act.

என்ற தலைப்பிலும் இந்திய ரிசர்வ் பாங்கிலோ, இந்தியா ஸ்டேட் பாங்கின் ஏதாவது ஒரு கிளையிலோ அல்லது அரசாங்கக் கருவூலத்திலோ கட்டித் தமிழக அரசுக்குச் சேர்ப்பிக்க வேண்டும். இந்திய ரிசர்வ் பாங்கில் கட்டுவதென்றால், சலான்கள் அசல் காட்டப்பட வேண்டும். கருவூலங்களில் கட்டினால், சலானின் எண், தேதி, கட்டப்பட்ட தொகை, ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர், தொகை செலுத்தப்பட்ட பாங்கு அல்லது கருவூலத்தின் பெயர் ஆகியவை, ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் பெறுவதற்கான மனுவில் குறிப்பிடப்பட வேண்டும். இத்தொகை திருப்பித் தரப்படாது.

ஒப்பந்தப் புள்ளிகள், மருத்துவ மேற்பார்வையாளர், அரசினர் காச நோய் சானிடோரியம், தாம்பரம் அவர்களுக்கு முகவரியிடப்பட்டு, அவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

குறிப்பு:—ஒப்பந்த மதிப்பு ரூ. 10,000-த்தை மீறுமானால், ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளிதாரரும் வருமான வரி கிளியரன்ஸ் சான்றும், நேஷனலிடி சான்றிதழ் அல்லது, அரசிதழ் பதிவு அலுவலரால் சான்றிடப்பட்ட அவற்றின் உண்மை நகல்கள் அனுப்ப வேண்டும். ஒப்பந்தப் புள்ளி விதிகள் நிபந்தனைகளில் ஒப்பந்தக்காரர் முறையாக சான்றிட்டிருக்க வேண்டும்.

டாக்டர் கே. வி. கிருஷ்ணசாமி,
மருத்துவ மேற்பார்வையாளர்,
அரசினர் காசநோய்
சானிடோரியம்,
தாம்பரம் சானிடோரியம்,
சென்னை-47.

(த 29)

---

## தொழில் வணிகத் துறை.

எண் 5488;சி. டபிள்யூ. 10/71.

தூத்துக்குடியிலுள்ள மக்னிசியம் கார்பனேட் யூனிட்டுக்கு மேலும் தேவைப்படும் இயந்திரங்கள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கூட்டு இயக்குநர் தொழில் வணிகத் துறை (ரசாயனங்கள்) தொழில் பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்களால் 15–11–71 பிற்பகல் 1 மணி வரையிலும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் 15–11–71 அன்று பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி வடிவங்கள் கூட்டு இயக்குநர் (ரசாயனங்கள்) தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32, அவர்களிடமிருந்து அதன் விலையாகிய ரூ. 2-க்குச் செலானைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். இந்த விலை ரூ. 2 (இரண்டு ரூபாய் மட்டும்) எந்தக் கருவூலத்திலாவது இந்திய ரிசர்வ் பாங்கியிலாவது, அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிலாவது தமிழக அரசுக் கணக்கில் 'XXIX இண்டஸ்டிரீஸ்—எ. இண்டஸ்டிரீஸ், மிஸலேனியஸ் ரசீப்ட்ஸ்'' என்ற தலைப்பிலும் விற்பனை ஏழு காசுகள் தனிச் செலானில் '' XII வணிக வரி, & மிஸலேனியஸ்'' என்ற தலைப்பிலும் கட்ட வேண்டும். இது திருப்பித்தரப்படமாட்டாது ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கு வேறு வகையில் தொகை ஏற்றுக் கொள்ளப்படாது.

கூட்டு இயக்குநர்,
(ரசாயனங்கள்)

(த.41)

ஒப்பந்தப் புள்ளி

## வீட்டு வசதி வாரியம் (மையக் கோட்டம்)

கோப்பு எண் பி 2/5113/71

கலைஞர் கருணாநிதி நகரில் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்வதற்காக மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், கீழே கையொப்பமிட்டுள்ளவரால் 10-11-1971 மாலை 3-00 மணிக்குள் கிடைக்குமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி வைத்தனுப்பும் உறையின் மீது வேலையின் பெயரையும், ஒப்பந்தப்புள்ளிதாரரின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-05 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | வேலையின் சுமார் மதிப்பு (ரூபாய்). | ஒப்பந்த வடிவம் கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப் புள்ளிப்பத்திரங் களின் விலை (திருப்பித்தரப் படமாட்டது.) |
|---|---|---|---|
| 1 தொகுப்பு 'ஏ'யின் கீழ், டீ.டி. 124எ/70-ன் படி, 3 எம்.ஐ.ஜி பிளாக்குகளை எல்லா வசதியுடனும் கட்டுதல். | 2,18,900 | எல்.எஸ். / ரூ. 3,284 | ரூ. 15 + விற்பனை வரி |
| 2 தொகுப்பு 'பி'-யின் கீழ் டீ.டி. 124எ/70-ன் படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகளை எல்லா வசதியுடனும் கட்டுதல். | 2,18,900 | எல்.எஸ். / ரூ. 3,284 | ரூ. 15 + விற்பனை வரி. |
| 3 தொகுப்பு 'சி'-யின் கீழ் டீ.டி. 124எ/70-ன் படி 3 எம்.ஐ.ஜி. பிளாக்குகளை எல்லா வசதியுடனும் கட்டுதல். | 2,18,900 | எல்.எஸ். / ரூ. 3,284 | ரூ. 15 + விற்பனை வரி. |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை, விற்பனை வரி ஆகியவற்றைச் செலுத்தியதற்கான சலான் ரசீதைக் கொடுத்து, மேற்பார்வைப் பொறியாளர், மையக் கோட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அவர்களது அலுவலகத்திலிருந்து ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் முதலியவற்றை 25-10-1971 அன்று அல்லது அதற்குப் பிறகு எல்லா அலுவலக நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 2-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

மே. ஜார்ஜ்,
மேற்பார்வைப் பொறியாளர் (மையம்).

36, அண்ணாசாலை,
நந்தனம் அஞ்சல்,
சென்னை-35,
15-10-1971.
(த. 53)

## பொதுப்பணித் துறை

எண்: ஆர்.ஓ.சி. 6662/71/ஜெ. நாள் 11-10-1971.

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் கீழ்க் கண்ட வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 8-11-71 மாலை 3 மணி வரை மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை குடும்ப நலத்திட்டக் கட்டட சர்க்கிள், மதுரை-1 அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4 மணிக்குப் பிரிக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 22-10-71 முதல் 30-10-71 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் | பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் டுபெக்ட மிக்கு 20 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல் |
| கட்டுத் தொகை | ரூ. 2,500. |
| ஒப்பந்த வடிவம் | மொத்தத் தொகை. |
| வேலையை முடிக்கவேண்டிய காலம். | 9 மாதங்கள். |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை ரூ. 20. இது திருப்பித் தரப்படமாட்டாது. ''P.W. III O.R.'' என்ற தலைப்பில் பாளையங்கோட்டையில் உள்ள நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை குடும்ப நலத் திட்டக் கட்டட டிவிஷன், திருநெல்வேலி அவர்கள் கணக்கில் கட்டவேண்டும். விற்பனை வரியுடன் சர்சார்ஜ் 75 காசுகள் கருவூலத்திலோ இந்திய ரிசர்வ் பாங்கிலோ XII விற்பனை வரி (டி) பல்வகை என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான மனுக்கள் மேற்கண்ட சலான்களின் அசலுடன் அனுப்பப்பட வேண்டும்.

கட்டுத் தொகை, கால் ரசிப்ட், சலான் டிபாசிட் வடிவில் அல்லது ஷெடியூல் வங்கிகளின் டிமாண்டு டிராப்ட் வடிவில், அரசு செக்யூரிடிகள், தேச உடமையாக்கப்பட்ட 14 பாங்குகளின் பாங்கு காரண்டி வகையில் தமிழ்நாடு மின்சார வாரிய பாண்டுகள் வடிவில் ஏற்கப்படும். தேசீயச் சேமிப்புப் பத்திரங்களும் ஏற்கப்படும். மார்க்கெட் மதிப்புக்கு 5 சதவிகிதம் குறைத்து இவை ஏற்கப்படும். வேறு வகையில் தொகை ஏற்கப்படமாட்டாது.

**வி. துரைராஜ்,**

மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.
குடும்ப நலத்திட்டக் கட்டட சர்க்கிள்,
**மதுரை-1.**

(த. 21)

ஒப்பந்தப் புள்ளி

## வீட்டு வசதி வாரியம்

மத்தியக் கோட்டம்

பார்வை பி. 3/5126/71.

கீழ்க்கண்ட வேலைக்காக உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளிதாரர் பெயரும் எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவரால் 1—12—1971 மாலை 3·00 வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3·05-க்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் : சென்னை 35, அண்ணாசாலை, எண். 33-ல் பழைய சென்னை வீட்டு வசதிப் பிரிவு காம்பவுண்டில் கடைகள், அலுவலகங்கள் ஆகியவைகளுக்கான 5 அடுக்குக் கட்டடம், டிசைன் அமைத்துக் கட்டுதல் (சிவில் வெர்க்ஸுக்காக மட்டும்).

வேலையின் சுமார் மதிப்பு : ரூ. 20 லட்சம்.

கட்டுத் தொகை—ரூ. 30,000.
ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 25 மற்றும் விற்பனை வரி (இது திருப்பித்தரப்படாது).

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விவரங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிர்வாகப் பொறியாளர் (மத்திய) அலுவலகத்தில் 25—10—1971-லிருந்து எல்லா அலுவல் நாட்களிலும் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை ரொக்கம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**மே. ஜார்ஜ்,**

நிர்வாகப் பொறியாளர்,
(மத்தியக் கோட்டம்).

36, அண்ணா சாலை,
சென்னை-35.
(த. 43)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

### இராமநாதபுரம் மின் திட்டம், பரமக்குடி.

இராமநாதபுரம் மின் திட்டம் பரமக்குடி மத்திய பண்டக சாலையிலுள்ள நிராகரிக்கப்பட்ட உந்து வண்டிகள் (லாரி எம்.டி.யு. 8071, ஜீப் எம்.டி.என். 3946) மற்றும் கழிவு இரும்பு, செம்பு, அலுமினியம் இதர பொருள்களையும் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 19—11—1971, மாலை 3-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் 19—11—1971 மாலை 4-00 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் சம்பந்தப் பட்ட முழு விவரங்களடங்கிய தஸ்தாவேஜிகள் அனைத்தும் மதுரை கோசாகுளம் புதூர் மத்திய அலுவலகத்தில் 3 முதல் 17—11—1971 முடிய எந்த வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலே கண்ட ஒப்பந்தத்துக்குக் கட்டுத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) இராமநாதபுரம் மின்திட்டம் தலைமைக் கணக்காயரிடம் செலுத்திச், செலுத்தியதற்கான ரசீது அல்லது டிராப்டை ஒப்பந்தம் சம்மந்தப்பட்ட தஸ்தாவேஜிகளோடு அனுப்பி வைக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகளையும் கழிவுப் பொருட்களின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் நேராகவோ அல்லது பண விடைத்தாள் மூலமாகவோ ரூ. 5 தலைமைக் கணக்காயர் (செலவினம்) இராமநாதபுரம் மின் இயக்கத் திட்டம், கோசாகுளம் புதூர், மதுரை-7, அவர்களிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்த விலையான ரூ. 5-ம் திருப்பித் தரத்தக்கதல்ல. ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்குச் சாதாரண அஞ்சலில் தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயாணத்தின் போது ஒப்பந்த நகல் தவறினால், அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது. பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் பரமக்குடி மத்தியப் பண்டகசாலையில் அலுவலக தினங்களில் அலுவலக நேரங்களில் அனுமதிக்கப்படுவார்கள்.

ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்த நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்க தல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,

இராமநாதபுரம் மின் திட்டம்

20—10—71.

(த. 77)

---

## ஒப்பந்தப் புள்ளி

### ஸ்ரீரங்கம் நகராட்சி

(1) கிராம்ப்டன் மின்விசிறிகள் 48'' ஸ்வீப்புள்ளது (அதற்குரிய சகல பாகங்களுடன்) சப்ளை செய்து ஏற்கனவே மின்விசிறி பாயின்ட்டுகள் போடப்பட்டுள்ள இடங்களில் பொருத்திக் கொடுக்கவும், 16'' போகஸ் விளக்குகள் ரப்பர் வளையங்களில் பொருத்தப்பட்ட கான்கேவ் கண்ணாடியுடன், கிளாம்ப் செட், 15 ஆம்பியர் ஏரியல் ஃப்யூஸ் வயரிங், போர்செலின் ஹோல்டருடன் 100 வாட்ஸ் பல்புகளுடனும் போட்டுக்கொடுக்க, மின்சார லைசென்சு பெற்றுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கீழே கையொப்பமிட்டவரால் 15—11—1971 தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகை மின் விசிறி சப்ளைக்கு ரூ. 50-ம், போகஸ் விளக்குகள் சப்ளைக்கு ரூ. 200-ம் முனிசிபல் கஜானாவில் செலுத்திய ரசீதுடன் ஒப்பந்தங்கள் சேர்ப்பிக்கப்பட வேண்டும். மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ, எழுத்து மூலமாகவோ கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

14—10—1971.

(த. 76)

---

## தேர்வு

### தமிழ்நாடு எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் ஓ.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகள் மார்ச்—1972.

மேற்கண்ட தேர்வுக்கு பிரைவேட் மாணவர்கள் மனுக்களை அளித்திடக் கடைசித் தேதி, அபராதம் இல்லாமல் 1-11-71ம், ஒரு ரூபாய் அபராதத்துடன் அளித்திட கடைசித் தேதி 16-11-1971ம் ஆகும்.

1971 நவம்பர் 2-ந் தேதிக்கும் 1971 நவம்பர் 16-ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில், அபராதம் ரூ. 1 உடன் இல்லாத மனுக்களும் 1971 நவம்பர் 16-க்குப் பின்பு வரும் மனுக்கள் அபராதத் தொகையுடன் இருந்தாலும் கூட அவையும் நிராகரிக்கப்படும்.

மேற்கொண்டு விவரங்களுக்கு 13—10—1971 தேதியிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழின் பாகம் 2, பிரிவு 3-ல் வெளியாகியுள்ள அறிவிப்பினைக் காண்க.

கே. ஏ. சுவாமிநாதன்,

செயலாளர்,

அரசுத் தேர்வுகள்

செகண்டரி கல்வி போர்டு,

சென்னை-6.

ஆணையர் அலுவலகம்,

சென்னை-6,

15—10—1971.

(த. 42)

## ஏல விற்பனை

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

நெடுஞ்சாலை கிராமப் பொறியியற் பணித்துறையினைச் சார்ந்த போக்குவரத்து இயந்திரக் கோட்ட மத்திய பணிமனையில் உள்ள (கிண்டி ஆளுநர் மாளிகைக்கு எதிரில் உள்ள) சிற்றுண்டிச் சாலையை 1971–72 (5–12–1971முதல் 4–12–1972) வரை குத்தகை எடுத்து விற்பனை செய்யும் உரிமையை 8—11—1971 அன்று மாலை 3-00 மணியளவில் மேற்படி போக்குவரத்து இயந்திரக் கோட்ட மத்தியப் பணிமனை உதவிப் பொறியாளர் (தொழிலகம்) அவர்களால் ஏலம் விடப்படும். சென்னை நகர எல்லைக்குள் ஏற்கனவே அதிகாரபூர்வமாகக் கடைகள் வைத்து வியாபாரம் செய்து வருபவர்கள் மட்டுமே மேற்படி ஏலத்தில் பங்கு கொள்ளும் உரிமை பெற்றவர்களாவார்கள்.

ஏலம் எடுக்க விரும்புபவர்கள் ஏலம் துவங்கு முன்னர் ரூ. 100 முன்பணம் செலுத்த வேண்டும். மேற்படி செலுத்தப்பட்ட முன்பணம் ஏலம் முடிந்த பின்னர் திரும்ப அளிக்கப்படும்.

ஏலம் எடுத்தவர் ஏலம் முடிந்தவுடன் ஏலப்பணத்தின் 25 சத விகிதத் தொகையை உடனடியாகக் கட்ட வேண்டும். மீதமுள்ள ஏலப்பணத்தை $3\frac{1}{2}$ சத விகித விற்பனை வரி உட்பட கோட்டப் பொறியாளரால் மேற்படி நபரின் பெயரில் ஏலம் உறுதி செய்யப்பட்டவுடன் கட்ட வேண்டும். மேலும் ஏலம் உறுதி செய்யப்பட்டவுடன் உரிய அலுவலக பாரத்தில் கோட்டப்பொறியாளருடன் ஓர் ஒப்பந்தமும் கையெழுத்திட வேண்டும். தவறினுல் ஏற்கனவே கட்டியுள்ள பணம் அரசாங்கத்துக்குப் பறிமுதலாவதுடன் விற்பனை செய்யும் உரிமை மறுபடியும் பொது ஏலத்தில் விடப்படும். ஏலம் திரும்பவும் உறுதி செய்யப்படவில்லை என்ருல் ஏற்கனவே கட்டியுள்ள ஏலப்பணத்தின் 25 சத விகிதத் தொகை இவ்வேலத்தில் அதிகபட்சம் ஏலம் கேட்பவருக்குத் திரும்ப அளிக்கப்படும்.

இவ்விஷயத்தில் சர்ச்சைகளோ தகராறுகளோ எழும் பட்சத்தில் நெடுஞ்சாலை போக்குவரத்து இயந்திரக் கோட்டத்தின் கோட்டப் பொறியாளருடைய முடிவே இறுதியானதும் சட்டபூர்வமானதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுமாகும்.

மற்ற நிபந்தனைகள் அதாவது மாதாந்தர வாடகை முதலிய விவரங்களை மேற்குறித்த போக்குவரத்து இயந்திரக் கோட்ட அலுவலகத்தில் 7—11—1971 மாலை 5 மணி வரை எந்த வேலை நாளிலும் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

**கோட்டப் பொறியாளர்,**

போ. இய. கோட்டம்,
சென்னை-25 (த·85)

---

**கிராமங்களில் பணியாற்ற நாட்டங் கொண்ட டாக்டர்களுக்கு வாய்ப்பு**

### வீட்டு வசதி வாரியம்

கிராமப் பகுதிகளில், நல்ல 'கிளினிக்' குடன் கூடிய வசதியான குடியிருப்பு வீடு பத்து மாதங்களில் அமைத்துத் தரப்படும். இதற்குச் செலவு ரூ. 15,000-விருந்து ரூ. 20,000 வரை ஆகும். இதை விடக் குறைந்த செலவில் முடியக் கூடிய டிசைன்களையும் பரிசீலிக்கலாம். டாக்டர்கள் முதலில் இவ்விலையில் 20 சத விகிதத்தைக் கட்டிவிடவேண்டும். பாக்கியை எளிய மாதாந்தரத் தவணைகளில், மாதத்துக்கு ஆயிரத்துக்கு சுமார் ரூ. 10 என்ற அளவில் செலுத்தி முடிக்கலாம்.

இத் திட்டத்தில் சேர விரும்பும் டாக்டர்கள் 30—11—71-க்குள் பதிவு செய்து கொள்ளலாம். 1—12—1971-க்குப் பிறகு முழு விவரங்களையும் பெறலாம். பொறுப்புகள் ஏற்பது அதற்குப் பின்னர்.

**டி. வி. வாசுதேவன்,**

தலைவர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
36, அண்ணு சாலை, (த. 44)
சென்னை.

---

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர், கழிவுநீர் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், கழிவு நீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழநாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவு நீர் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிட மிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 17—11—1971 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்: திருப்பத்தூர் குடிநீர் வழங்கும் திட்டம்—முதல் நிலை—பகிர்தல் முறை—சி.ஐ., ஏ.ஸி. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வகை: கே 2.

முன்வைப்புத் தொகை: ரூ. 1,160 (ரூபாய் ஆயிரத்து நூற்றி அறுபது மட்டும்). இத் தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச்சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை: ரூ. 5·18 (விற்பனை வரி உள்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர், காரைக்குடி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளர் அவர்களிடமிருந்து 48, கல்லூரிச் சாலை, காரைக்குடி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்காக மேற்குறித்த விலையினைச் செலுத்தி 15-11-1971 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
(பொ.சு.). (த. 80)


குறளகம்
சென்னை.1
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்
20461
20462
20463
20464. 20465
கதர்-
கைத்தொழில்
அங்காடி
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

## ஒப்பந்தப்புள்ளி நீட்டிப்பு

### பொதுப்பணித்துறை.

வேலையின் பெயர்—

1. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் பௌதிகத்துறை பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.
2. கும்பகோணம் ஆண்கள் கலைக் கல்லூரியில் இரசாயனப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.
3. கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில் கலைத் துறைப் பட்ட மேல் படிப்புக்குக் கட்டடம் கட்டுதல்.
4. தோல் சம்பந்தமான வியாதிகட்குச் சிகிச்சையளிக்க தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவமனையில் இரு பகுதிக்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை—இண்டியன் எக்ஸ்பிரஸ், தேதி 30—6—71, 2—7—71. ''தி மெயில்'' தேதி 28—6—71-ல் வெளியிட்ட சீட்டு ஒப்பந்த அறிக்கை தமிழரசு தேதி 1—9—71, 1—10—71-ல் வெளியிட்ட ஒப்பந்தத் தேதி நீட்டிப்பு.

மேற்கண்ட வேலைகளுக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெறும் தேதி 2—12—71 அன்று மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் பத்திரங்கள் 1—12—71 அன்று மாலை 5-00 மணி வரை கிடைக்கும். மற்ற விதிகளில் மாறுதல் ஏதும் இல்லை.

**ஆர். வேணுகோபால்,**
மேற்பார்வைப் பொறியாளர், தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

(த.90)

## ஏல அறிவிப்பு

### கதர் கிராமக் கைத்தொழில் வாரியம்
### குறளகம்
சென்னை-1.

குறளகத்தின் ஐந்தாவது மாடியில் சைவ உணவு சிற்றுண்டி விடுதி நடத்துவதற்கான உரிமையைப் பொது ஏலத்தின் மூலம் 1971 நவம்பர் 27-ஆம் தேதி மாலை 3 மணிக்குத் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் செயலாளரால் முடிவு செய்யப்படும்.

அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் இந்த இடத்தைப் பார்வையிடலாம்.

விண்ணப்ப மனு, குத்தகை பற்றிய நிபந்தனைகள், விதிமுறைகள் பற்றிய விவரங்களைப் பராமரிப்புப் பொறியாளர், குறளகம் (4-வது மாடி) சென்னை-1 என்ற முகவரியில் பெறலாம்.

செயலாளர்.

(த. 83)

## மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட்.

34, அண்ணாசாலை, வி.எஸ்.டி. மோட்டார் கட்டடம்,
சென்னை-2.

வேலையின் பெயர்—உதகமண்டலத்தில் ஒரு தங்கும் அறை கட்டடம் (Dormitory Block) கட்டுதல்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், மத்தியப் பொதுப் பணித்துறை ஆகியவற்றில் பதிவு செய்துள்ள ஒப்பந்தாரர்களிடமிருந்து மேலே குறிப்பிட்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நேரமும் தேதியும்—30—11—71 மாலை 3 மணிவரை.
2. ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்படும் தேதி—30—11—71 மாலை 3-30 மணி.
3. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 30+ விற்பனை வரி ரூ. 1-10+அஞ்சல் செலவுக்காக ரூ. 3.
4. ஒப்பந்த முறை—முழுத் தொகை.
5. கட்டுத் தொகை—ரூ. 11,100.

கட்டுத் தொகை, கிராஸ்ட் பாங்க் டிராப்டாக, ''தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை'' யின் பெயரில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களுக்கான பணம் ரொக்கமாகவோ, மேலுள்ள முகவரியின் பெயரில் எடுக்கப்பட்ட பாங்க் டிராப்டாகவோ இருக்கலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் இந்தக் கழகத்தின் திட்டப் பொறியாளரிடமிருந்து மனுச் செய்து பெறலாம்.

**அலுவாலியர்,**
திருவாக இயக்குநர்.

(த. 89)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர், கழிவு நீர் வாரியம்.

தமிழ்நாடு குடிநீர், கழிவுநீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவுநீர் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 16—11—1971 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3·00 மணி வரை பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3·30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் : ஸ்ரீரங்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்—முதல் நிலை பகிர்வு முறை—கீழ்ப்பகுதியில் ஏ.சி., சி.ஐ. குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வகை : கே. 2.

முன்வைப்புத் தொகை : ரூ. 1,450 (ரூபாய் ஆயிரத்து நானூற்று ஐம்பது மட்டும்). இத்தொகைக் கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசீய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை:— ரூ. 10·35 (விற்பனை வரி உள்பட)

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 13-11-71 சனிக்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
(த. 84) (பொ.சு.)

## ஏல விளம்பரம்

பழுதடைந்த 1948-ஆம் வருட மாடல், சவர்லெட் லாரி, வேலூர் மத்தியச் சிறைச்சாலையில் 6—11—1971 மாலை 4 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும். மற்ற விவரங்கள் கீழ்க் கையொப்பமிட்டவர் அலுவலகத்திலிருந்து நேரிலோ, தபால் மூலமோ தெரிந்து கொள்ளவும்.

ஆ. பா. வாசுதேவன், பி.ஏ.
கண்காணிப்பாளர், மத்தியசிறை,
வேலூர்.
(த. 79)




## ஒப்பந்தப்புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர் சார்பாகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்காகக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்களால், சுப்ரமணியபுரம், புதுக்கோட்டை சாலை, திருச்சிராப்பள்ளி முகவரியில் உள்ள அவரது அலுவலகத்தில் 8–12–1971 அன்று மாலை 4-00 மணி வரை (அலுவலகக் கடிகாரம்), மூடி முத்திரையிடப்பட்ட அட்டவணை ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 4-15 மணிக்குத் திறக்கப்படும்.

| வேலையின் பெயர். | கட்டுத் தொகை. ரூ. | ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகள் கிடைக்குமிடம். |
|---|---|---|
| மாவட்டம்: திருச்சிராப்பள்ளி. திருச்சி—கோயம்புத்தூர் சாலைக்கு, சிந்தாமணிக்கு அருகில். மைல் 0/1 முதல் 0/7-க்கு இடையில் உருவாகவிருக்கும் மாற்றுவழிச் சாலையில் ( Bye pass Road ) வடிகால் வாய்க்காலின் குறுக்கே, சி.எச். 2280 அடியில் பாலம் கட்டுதல். | 3,550 | கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை, திருச்சிராப்பள்ளி. |

ஒப்பந்தப் புள்ளியின் நிபந்தனை விவரங்கள், நமூனுக்கள், அட்டவணைகள், வரை படம் முதலியவைகளை, கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) திருச்சிராப்பள்ளி அவர்களது அலுவலகத்தில் 10–11–71 முதல் 7–12–71 வரை அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் விற்பனை வரி உட்பட ஒவ்வொரு தொகுப்புக்கும் ரூ. 20.60 செலுத்தி (திருப்பித் தரப்படமாட்டாது) எழுத்து மூலமாக விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

வேறுமாதிரித் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேற்குறிப்பிட்ட கட்டுத் தொகையை, கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்களது அலுவல் எல்லைக்குள் இருக்கும் ஏதேனும் ஒரு அரசுக் கருவூலத்தில் ''Revenue Deposit'' என்ற தலைப்பில் செலுத்தி, அந்தச் சலான் ரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும்.

கட்டுத் தொகையை, 12 ஆண்டு தேசிய பாதுகாப்புப் பத்திரம், 10 ஆண்டு பாதுகாப்புப் பத்திரம், மாநில அரசுப் பத்திரங்கள், தமிழ்நாடு மின்சார வாரியப் பத்திரங்கள், வங்கி உறுதிகள், டெபாசிட் கால் ரசீதுகள், ஷெட்யூல்டு வங்கி அளித்துள்ள டிமாண்ட் டிராப்டு ஆகிய வடிவங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்.

வங்கி உறுதிகளுக்கு, இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெற்று, அதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பாவிட்டால், வங்கி உறுதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

கட்டுத் தொகை செலுத்தாமல் அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

எம். டி. பால்மாணிக்கம்,
கோட்டப்பொறியாளர் (நெ.கி.ப.து)
திருச்சிராப்பள்ளி.

(த. 33)

---

## குத்தகை விளம்பரம்

### போக்குவரத்துத் துறை, சென்னை–2

தமிழ்நாடு அரசாங்க ஆளுநரின் சார்பில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து இலாகாவின் கட்டடப் பொறியாளரால், வரும் இரண்டு வருடத்திற்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையிலுள்ள மாதவரம் பணிமனையில், சிற்றுண்டி சாலைக் குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்கு வரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2, ஒப்பந்தங்கள் 10—11—1971 மாலை 3 மணி முடிய வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள், கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1.04 கட்டி, பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பி தரப்படமாட்டாது.

இயக்குநர்

(த. 87)


சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
காற்றுள்ளபோதே
தூற்ற வேண்டும்
காசுள்ளபோதே
சேர்க்க வேண்டுமல்லவா?
சிறுசேமிப்பு
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர், வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், கழிவுநீர் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொது சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர், கழிவுநீர் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண். 17, சர் பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொது சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 16-11-1971 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்—ஸ்ரீரங்கம் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் முதல் நிலை-பகிர்வு முறை-மேற்குப் பகுதியில் சி.ஐ., ஏ.சி., குழாய்களைப் பதித்தலும், இணைத்தலும்.

ஒப்பந்த வகை—கே. 2.

முன்வைப்புத் தொகை ரூ. 2,610, (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்றுப் பத்து மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி, பொது சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிர்வாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொது சுகாதாரப் பொறியியல் துறை, கோட்ட நிர்வாகப் பொறியாளரிடமிருந்து பி. 15, தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 13—11—71 சனிக்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர்**
(பொ.சு.)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின்சார வாரியம்
எண்ணூர் அனல் மின் திட்டம்.
(இயக்குதல், பேணுதல் பிரிவு.)

ஒப்பந்த விளம்பரக் குறிப்பு எண். P.T.4/71-72.

1. தமிழக மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் தமிழக மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம்—(இயக்குதல், பேணுதல் பிரிவு) குறிப்பு எண். P.T.4/71-72 எனவும் மற்றும் ஒப்பந்ததாரின் பெயரும் எழுதப்பட்டுகீழ்கையொப்பமிட்டவரால் 30—11—71 மாலை 3-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருள்கள்—

| S/No. | Description | Quantity. |
|---|---|---|
| (1) | High grade Burnt lime with not less than 80% cao content | 60 Tonnes |

3. ஒப்பந்தத்தின் பிரதிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. (ரூபாய் ஐந்து) கீழ்க்கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

4. இந்த வேலைக்கான முன்பணம் ரூ. 400 (நானூறு மட்டும்) இந்தத் தொகையை ஒப்பந்தப் பிரதியில் கூறியுள்ளபடி முன் செலுத்த வேண்டும்.

5. துறையினரைச் சார்ந்த நமூனாக்களில் இல்லாத ஒப்பந்தங்களும், இறுதித் தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவர் உரிமையுடையவர்.

6. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத்தக்கவை அல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்**
எண்ணூர் அனல் மின்
திட்டம் எண்ணூர், சென்னை-5

தொலைபேசி எண், 59569.
தந்தி "ENTERMAL"
(த.78)

## ஒப்பந்தப் புள்ளி

தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்கண்ட பணிகளுக்காக அவற்றிற்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3-30 மணிவரை, வேலையின் பெயரும், வரை குறிப்பு எண்ணும் குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியில் கையெழுத்திட்டவரால் அவரது அலுவலகத்திற்கு வரவேற்கப்படுகின்றன.

அதேநாள் மாலை 4 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் அப்போது வந்திருக்கும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| வரைகுறிப்பு எண். | வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளியின் விலை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | |
| NDS.30 .. | நடுவட்டம் ஓட்டத்தினை CH.2630m-விருந்து, 5903 m Reach-2-க்குத் திருப்ப (குறுக்கு வடிகால் பணிகள் உள்பட) flume channel அமைத்தல். | 11,500 | 15 | 3–12–71 |
| NDS. 31 .. | நடுவட்டம் ஓட்டத்தினை CH. 5903 m -விருந்து 7736 m Reach-3-க்குத் திருப்ப (குறுக்கு வடிகால் பணிகள் உள்பட) flume channel அமைத்தல். | 8,000 | 15 | 8–12–71 |

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு, வரைகுறிப்பு, அளவுகள் ஆகிய குறிப்புகளடங்கிய ஒப்பந்தப் புள்ளி செட் நகல்களை, அடியில் கையெழுத்திட்டவரின் அலுவலகத்தில் பணம் கட்டிப் பெறலாம். இந்தப் பணம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

இந்தப் பணிக்கான கட்டுத்தொகை முன்பணமாக, ரொக்கமாகவோ அன்றி டிமாண்ட் டிராப்டாகவோ அடியில் கையெழுத்திட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதினை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

வாரியத்தின் குறிப்பிட்ட படிவத்தில் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகளும், முடிவுத்தேதி, நேரத்திற்குள் வராதவையும் தள்ளி விடப்படும்.

வேலையை எல்லாருக்குமோ, அல்லது சிலருக்கோ பிரித்து வழங்கவோ, ஒன்றையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் தள்ளி விடும் உரிமை அடியில் கையெழுத்திட்டவருக்கு உண்டு.

ஒப்பந்தப் புள்ளிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்படுகையில் தொலைந்துவிட்டால் அதற்கு வாரியம் பொறுப்பாகாது. ஒப்பந்தப் புள்ளிகள் பிறருக்கு மாற்றக்கூடியவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பரம்பிக்குளம்-ஆளியாறு,
நீர் மின் திட்டம்.

மின்பாறை அஞ்சல்,
கோவை மாவட்டம்.
தந்தி : PARAMBYDEL, பொள்ளாச்சி,
தொலை பேசி : 39, மலையாண்டி பட்டணம்.
(த. 82)

ஆசிரியர், வெளியிடுபவர்; செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால் சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-2.